

813
813
MADRAS


பொன்னி
111
அஞ்சலை
பொன்னி
சுசீலா
25-6-50

# பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்

## பொருளடக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUL 1950
MADRAS

திருவள்ளுவர் ஆண்டு 1981 — ஆனித் திங்கள் 11-ம் நாள்

| | | | |
|---|---|---|---|
| கல்வி நீரோடை | தலையங்கம் | ... | 3 |
| கலையுலகம் | கலைஞன் | ... | 8 |
| மதுர கீதம் | சுப. இளங்கிரன் | ... | 9 |
| உங்களுக்குத் தெரியுமா? | வழிப்போக்கன் | ... | 19 |
| ஈடே இல்லை | பா. முத்து | ... | 28 |
| துடிக்கும் இதழ்கள் | கி. அ. சீனிவாசன் | ... | 29 |
| வானம்பாடி | ரா. தணலன் | ... | 30 |
| குழந்தை வளர்ப்பு | மங்கை | ... | 39 |
| மேரி செய்ன் | துரைவேலன் | ... | 41 |
| வேண்டாத ஆசை | துரை | ... | 48 |
| அனுதை | மு. அண்ணாமலை | ... | 51 |
| பொதுமேடை | ......... | ... | 59 |
| சச்சிதானந்தம் | இல. அரிராமன் | ... | 62 |
| பார் பார் பட்டணம் பார் | மெரீனா | ... | 67 |
| வளரும் இலக்கியம் | வேத்தாசன் | ... | 70 |

மலர் 4 ] ஜூலை 25, 1950 [ இதழ் 9

விலை 4 அணா



# கல்வி நீரோடை

கண்ணுடையரென்பவர் கற்
றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்

இத் திருக்குறளின் கருத்தை நாட்டு மக்கள் நன்கு உணர்ந்து விட்டார்கள் போன்றே தோன்றுகின்றது. இல்லாவிட்டால் ஜூன் ஜூலை மாதங்களில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இடம் பிடிக்க இத்தனை போட்டா போட்டி இருக்க முடியுமா, என்ன? எல்லோரும் தங்கள் புதல்வர் புதல்வியரின் கண்கள் அறிவுக் கண்களாக விளங்கவேண்டுமென்ற அவா மேற்கொண்டு விட்டனர் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. ஆனால் நாட்டை ஆளவந்திருக்கும் நல்லவர்களுக்குத்தான் இன்னும் கண் [illegible] வில்லை. ப[illegible] முன்வரும் மாணவர்களுக்கெல்லாம் இடவசதி அளிக்கும் அளவுக்கு அவர்கள் உள்ளம் இன்னும் விரியவில்லை. தங்கள் 'சகோதரர்களை' முகத்திரண்டு புண்ணுடையராகவே வைத்துக் காண்பதில் அவர்கட்கு அத்தனை விருப்பம் போலும்!

தொடக்கக் கல்வியே கட்டாயமில்லை, நாட்டில். படித்தவர் தொகை இன்னும் நூற்றுக்குப் பதினைந்து என்ற நிலையில்தான் நிற்கிறது; உயர்நிலைப்பள்ளி செல்வோரோ மிகச் சிறுபான்மையினர்; அவர்கட்குக்கூட வசதி செய்துதர அரசினரால் இயலவில்லையெனில், கவலையில்லையென்றுதான் பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது. கல்லூரிப் படிப்பு நிலையோ இன்னும் மோசம். அங்கும் இடம் தேடும் இடர்ப்பாடு மாணவர்களைப் பெரிதும் அலைக்கழித்து வருகிறது. அதுவும் குறிப்பாக, பொறியியற் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகளில் ஏற்படும் நெருக்கடி இயம்பும் திறத்தன்று.

இத்தகைய நிலைக்கு மாற்றம் காணச் சென்னை [illegible]னர் எள்ளளவும்

அசைந்து முயலவில்லை; நிலைமை தன்னைத் தானே சரிக்கட்டிக்கொள்ளட்டும் என்று வாளாவிருக்கின்றனர். போலீஸ் பராமரிப்புக்குச் செலவிடும் தொகைக்குக் கணக்குவழக்கில்லை. அதனைச் சுருக்கிக் கல்வித் துறையில் செலவிட்டால் மக்கள் கண் திறக்க வழி பிறக்கும்; நாட்டின் நிலை உயரும்; உண்மையான குடியரசு மலரும். ஆனால் ஆளும் பெரியவர்கள் இவ் வழியில் தங்கள் கருத்தைச் செலுத்தியதாகவே தெரியவில்லை.

இந்நிலையில் கல்வி நிலையங்களில் 'இடம் தேடும்' படலம் பெரும் படலமாக ஆண்டுக்காண்டு விரிந்துகொண்டு வருகிறது. தொடக்கப் பள்ளிகளில மாணவர்களைச் சேர்ப்பது கூட மிகத் தொல்லை நிரம்பியதாக வந்துகொண்டிருக்கிறது. இரு கை கூப்பி வரவேற்க வேண்டிய தொடக்கப் பள்ளிகள் 'இடமில்லை' நின்ற நிலையிலிருப்பது மிக வருந்தத்தக்க செய்தியேயாகும்.

உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நிலைமை இன்னும் மோசமாய் இருப்பதில் வியப்பொன்றுமில்லை. பள்ளிகள் குறைவு; படிப்பவர்கள்




உத்தரவை எதிர்த்து வழக்கம்போல் பத்திரிகைக்காரர்களும் வக்கீல்களும் கூச்சலைக் கிளப்பியிருக்கின்றனர்.

தொகை அதிகம். இந்தச் சூழ்நிலையில் கதவைத் தட்டும் அனைவருக்கும் பள்ளி ஆதரவளிக்க முடிவதில்லை. எனவே சிலர் இடம் பெறுகின்றனர்; படிக்கும் வாய்ப்புப் பெறுகின்றனர். பலர் ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றனர்; படிக்கும் எண்ணமிருந்தும் இடமில்லையே என்று ஏங்கித் தவிக்கின்றனர்.

இக் கட்டத்தில் இடம் வழங்கும் போது எந்த விதிகளை மேற்கொள்ள வேண்டும் என்பது ஒரு பிரச்னை யாகிறது. இப் பிரச்னை ஒவ்வொரு ஆண்டுத் தொடக்கத்திலும் தலைதூக்கும் முக்கியப் பிரச்னையாகும். சென்னை அரசினர் நெடுங்காலமாக 'வகுப்புவாரி முறை' என்ற திட்டத்தை மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி முதலிய அரசினர் நடத்தும் தொழிற் கல்லூரிகளில் மட்டும், கையாண்டு மாணவர்களை அனுமதித்து வருகின்றனர். ஜில்லா வாரியாகவும் நிலவும் சாதிப் பாகுபாடுகள் வாரியாகவும் மாணவர்கட்கு இடங்கள் ஒதுக்கப் படுகின்றன. இம்முறை நேர்மையான தென்பதை நடுநிலையாளர் நன்குணரலாம்.

ஆனால் சட்டத்தைத் தன் அணைக்கு வைத்திருப்போரும், பேனாவைக் கொண்டு எதையும் சாதித்து விடலாமென்று கருதியிருப்போரும் இவ் வகுப்புவாரி முறை 'தீது தீது பெருந்தீது' என்று கூச்சலெழுப்பி வருகின்றனர். அக்கூச்சல் இந்த ஆண்டு உயர் நீதி மன்றத்திலும் வழக்காக உருப் பெற்றிருக்கிறது. இந்திய அரசியல் திட்டத்திற்கு எதிரான முறையில் இவ் வகுப்புவாரி முறை இருப்பதாகவும் அதை நீக்க மன்றாடியும் வழக்குகள் பதிவாகி யிருக்கின்றன. வழக்குகள் ஆராயப்படலாம்; முடிவும் கூறப்படலாம்.

அதற்கிடையில் மக்கள் மன்றம் என்ன கருதுகிறதென்பதையும் நாம் நினைவு படுத்திப் பார்த்துக்கொள்ளவேண்டும். பத்திரிகை நிருபர்கள் கல்லூரி தவறாமல் சென்று 'உங்கள் திட்டம் எப்படி? யாரையும் தகுதி, திறமை பார்த்துச் சேர்த்துக்கொள்வீர்களல்லவா?' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாலக்காட்டில் அரசினர் கல்லூரியில் இப்பிரச்னையைக் கிளப்பியிருக்கிறார்கள்; சென்னையில் புதிதாகத் தோற்றம் பெறும் தியாகராயர் கல்லூரியில் விசாரித்திருக்

கிறார்கள். பத்திரிகைகளில் 'கடிதங்கள்' எழுதுகிறார்கள்; காரசாரமான தலையங்கங்கள் தீட்டுகிறார்கள்; 'கல்லூரிக்குப் புலி காவல்' என்று கேலிச் சித்திரங்கள் வெளியிடுகிறார்கள். பிரசாரபலம் எம்மட்டும் செல்லும் என்பதை அவர்கள் முயன்று பார்க்கிறார்கள்; சிறு பிரச்னையைப் பூதக் கண்ணாடி வைத்துப் பெரிதாக்கிக் காட்டுகிறார்கள். எனவே மக்கள் உண்மை நிலையை அறிந்து கொள்வது மிக அவசியமாகிறது.

பழைய வர்ணாஸ்ரம ஏற்பாடு காரணமாக நாட்டில் ஒரு சாதியார் மட்டும் கல்வியில் முன்னேறவும் மற்ற சாதிமக்கள் வெறும் உடலுழைப்பாளிகளாகவுமே முடிந்தது. அத்திட்டம் ஆங்கிலேயர் ஆட்சியில்தான் மாறுதல் பெற்றது. பரம்பரையாகக் கல்வி பயின்றவர்கள், கல்வியில் திறமையாளர்களாகவும் தகுதியாளர்களாகவும் விளங்குவதில் வியப்பேதுமில்லை. வீட்டில் தாத்தாவும் பாட்டியும் படித்தவர்கள், தகப்பனும் தாயும் படித்தவர்கள் என்றால்; அவர்கள் குழந்தைகள் படிப்பில் இயற்கையாக அக்கரை காட்டுவதில் விந்தையில்லை. அதற்கு மாறாகத் தாய் தகப்பனே படிக்காதவர்கள் — அவர்கள் குழந்தைகள் படிப்பில் பின் தங்கியவர்களாக, படிப்பின் அருமையை உணராதவர்களாக இருப்பதில் கண்காணாத அதிசயம் ஒன்றுமில்லை. இவ்வகையில் மேல் சாதிக் குழந்தைகள் நிறைய மார்க்குகள் வாங்கினார்கள்; மற்றவர்கள் குறைந்த மார்க்குகள் வாங்கினார்கள். பள்ளிக்கூடத்திற்கு இந்த இரண்டு வகைக் குழந்தைகளும் இடம் தேடப் போகிறார்களென்று வைத்துக் கொள்ளுங்கள். நிறைய மார்க்குகள் வாங்கிய பையனைச் சேர்ப்பதென்று திட்டமிருந்தால் பின்தங்கிய மாணவன் முன்னேற்றமடைய எவ்வித வழியுமில்லை; பின்தங்கிய சமூகம் பிற்போக்காகவே என்றும் இருக்க வேண்டியதாகும். 10 வயதுப் பையனையும் 16 வயதுப் பையனையும் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ளச் செய்து போட்டி வைப்பதைப் போன்ற விசித்திரப் போக்குத்தான் தகுதி திறமை பார்க்கும் முறையில் அமைந்திருக்கிறது.

மேலும் அரசியல் திட்டம் எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் அளிக்க வேண்டு

மென்ற கருத்தில்தான் யாருக்கும் தடைகூடாது என்று வலியுறுத்துகிறது. எல்லா மக்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்றால் மேட்டில் இருப்பவனுக்கும் ஒரு நீதி பள்ளத்தில் இருப்பவனுக்கும் ஒரு நீதி என்பதல்ல பொருள். மேட்டிலிருப்பவனுக்குத் தரப்படும் சலுகையைவிட அதிகச் சலுகைகள் பள்ளத்திலிருப்பவனுக்குத் தரப்படும். அதுதான் நேர்மை, அறமாகும்.

முன்னேறியவர்கள், படிப்பில் தங்களைச் ‘சூரப்புலி’ களாகக் கருதிக்கொள்கிறவர்கள் தங்கள் கடமை இன்னதென்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்; தாழ்ந்து நிற்கும், பிற்போக்கினராயிருக்கும் தம் உடன்பிறந்த இந் ‘நாட்டு மன்னர்களை’க் கைதூக்கி விடும் பெரும் பொறுப்பை அவர்கள் மேற்கொள்ளவேண்டும்; தங்கள் குழந்தைகளே படித்து முன்னேற வேண்டும் என்ற பேராசையை அவர்கள் தியாகம் செய்துதான் ஆகவேண்டும். அத்தகைய பண்புடையார் ஆட்டும் சுட்டு விரலில்தான் உலகம் சுழல்கிறது!

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.



ஜவ[illegible] பண்டிதர் நேரு [illegible] இலாகாக்காரி[illegible] களில் நுழைவிட்டதாகப் [illegible]


ஜூன் 24 முதல்
சென்னை
பாரகன் & பிராட்வே
மற்றும் தமிழ் நாடெங்கும் ஆரம்பம்........
ராஜா — கோயமுத்தூர்
ஸ்டார் — திருச்சி
பாலஸ் — சேலம்
யாகப்பா — தஞ்சாவூர்
டயமண்ட் — கும்பகோணம்
ராயல் — திருநெல்வேலி
நடராஜா — காரைக்குடி
ஜோஸப் — தூத்துக்குடி
ராஜா — காஞ்சீபுரம்
நாஷனல் — வேலூர்
சீதாராம் — விழுப்புரம்
முத்தையா கடலூர்
ரத்ன — பாண்டிச்சேரி
மாடர்ன் தியேட்டர்ஸ்
மந்திரி
குமாரி
டைரக்ஷன்:
டி. ஆர். சுந்தரம் &
எல்லிஸ் ஆர். டங்கன்
கதை வசனம் கருணாநிதி
சங்கீதம் ஜி. ராமநாதன்
கனல் தெறிக்கும் வசனம்
அனல் தெறிக்கும் நடிப்பு...

# கலையுலகம்

● மந்திரி குமாரி இம்மாதம் 24-ம் நாளில் தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில் திரையிடப் பட்டிருக்கிறது. மாதுரிதேவி பிரமாதமாக நடித்திருக்கிறாராம். தோழர் கருணாநிதியின் வசனங்கள் அற்புதமாய் அமைந்திருக்கின்றனவாம். படம் கடைசி வரையில் விறுவிறுப்புடன் செல்கிறதாம். லலிதா பத்மினி நடனம் புதுமாதிரியான மேக்கப்புடன் நூதனமாக இருக்கிறதாம்.

● லட்சுமம்மா கதா என்னும் தெலுங்குப் படத்தைச் சென்னை மாகாண மெங்கும் காட்டக்கூடாதெனச் சென்னை அரசினர் தடைவிதித்திருக்கிறார்கள்: அதன் 'தமிழ்ப் பதிப்பு' இப்போது தமிழ்நாட்டில் நடைபெற்று வருகிறது.

● வனசுந்தரி மளமளென வளர்ந்து வருகிறாளாம் நியூடோன் ஸ்டுடியோவில்! கிருஷ்ணாபிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படத்தில் சின்னப்பா, எஸ். வரலட்சுமி, பாலையா முதலியோர் நடிக்கிறார்கள். டி. ஆர். ரகுநாத் டைரக்ஷன்.

● பழக்காரிஎன்ற ஒருபடத்தை எம். எல். புரொடக்ஷன்ஸார் ஸ்டார்கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் தயாரித்து வருகிறார்களாம். டி. மார்கோனி டைரக்ஷன், காமிரா ஆகிய இரு பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்கிறாராம். டி. ஆர். மகாலிங்கமும், டி. ஏ. ஜெயலட்சுமியும் பிரதம பாகங்களில் நடித்து வருகிறார்களாம்.

● மானவதி என்னும் படமும் ஸ்டார்கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் தமிழ், தெலுங்கு ஆகிய இருமொழிகளில், சர்வோதய பிலிம்ஸாரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. வரலட்சுமி, நாராயணராவ், ரேலங்கி ஆகியோர் நடிக்கிறார்கள்.

● சந்திரிகா வாஹினிஸ்டுடியோவில் தமிழ் மலையாளம் ஆகிய இருமொழிகளில் தயாரிக்கப் பட்டுவருகிறது கிருஷ்ணா புரடக்ஷன்ஸாரின் இப்படத்தில் வி. என். ஜானகி, பாலையா கே. சாரங்கபாணி முதலியோர் நடிக்கிறார்கள். லலிதா பத்மினி நடனமும் உண்டு.

● உண்மையின் வெற்றி பெரும் பகுதி முடிவடைந்து திரைக்கு வரும் நிலையிலிருக்கிறதாம்; டெல்பி பிலிம்ஸாரின் இப்படத்தில் டி. ஏ. ஜெயலட்சுமி, மேனகா, என். எஸ். சுப்பையா கண்ணபிரான் முதலியோர் திறம்பட நடித்திருக்கின்றனராம். டைரக்ஷன் ஹரிபாய் தேசாய்.

● ஔவையார் பன்னெடுங்காலமாக ஜெமினியில் கொத்தமங்கலம் சுப்பு டைரக்ஷனில் உருவாகிவருகிறார். இரண்டொரு காட்சிகளே பாக்கியாம். கே. பி. சுந்தராம்பாள் ஔவையாராக நடிப்பதால் பாட்டுக்குப் பஞ்சமிராதென்று நம்பலாம்.

● மங்களா இந்தியில் உருவாகும் மற்றொரு ஜெமினி படம். 'மங்கம்மா சபதம்' தான் இப்பெயரில் இந்திப் படமாகிறது. மங்களாவாகப் பானுமதி நடித்து வருகிறார்.

— கலைஞன்

அடைபபடக கதை

# மதுர கீதம்

- சுப. இளங்கீரன் -

"மக்களைக் காப்பாற்ற நீ யார்? அவர்களை அந்த மகேஸ்வரன் காப்பாற்றுவான்!"

'மகேஸ்வரன் இருந்தால் தானே அப்பா காப்பாற்றுவதற்கு?"

முதலியாரின் மூக்கில் சிவப் பேறியது.

"என்னடா நாத்திகம் பேசுகிறாய்! உனக்கு யாரடா நாத்திகம் சொல்லித் தந்தது?"

"மதங்களும் புராணங்களும் அப்பா!"

முதலியாருக்கு அதற்குமேல் பொறுக்க முடியவில்லை. மீசை துடித்தது.

"என்ன, அவ்வளவுக்கு வந்துவிட்டதா!...... உன்னைச் சொல்லி என்ன, எல்லாம் அந்த நாசகாரச் சூனாமானாக் கூட்டம் இருக்குதே அதன் வேலை! நானும் கொஞ்சம் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன் 'திராவிடநாடு' மேசையில் இடப்பதை!"

கோபாலன் அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அவன் கன்னத்தில் கையூன்றிக் கொண்டு அகன்ற வானவெளியைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

முதலியார் அங்கும் இங்கும் உலாத்திக் கொண்டிருந்தார்; இருவரும் மௌனப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தார்கள் சில நிமிடங்கள்.

"கோபால்! நான் ஒருவன் இருக்கிறேன் என்பதை நினைவில் வைத்துக்கொள்! அதுதான் நான் சொல்லக்கூடியது" என்று கூறிக் கொண்டே உள்ளே சென்றார்.

ஃ ஃ ஃ

கோபாலன், இதுவரை தன் தந்தையை எதிர்த்துப் பேசியதே கிடையாது! தகப்பனுக்கு அடங்கின பிள்ளை என்பதல்ல; அவன் தனக்குத்தானே அடங்கியவன். இந்த 50-ம் ஆண்டிலே திருநீறு பூசும் மாணாக்கன் யாரென்று தேடினால், கோபாலன்தான் அகப்படுவான். காலை--மாலை சிவன் கோவில் பக்கம்போனால் இனிமையான ஒலியில் தேவாரம் கேட்கும். எட்டிப் பார்த்தால் கோபாலன் கை குவித்துக் குரலெடுத்துக் கொண்டிருப்பான்.

அவன் படிப்பறையைப் பார்க்கவேண்டும்! திணைப் படம் (Atlas) திணை நூல் (Geography) விஞ்ஞானம், கணிதம் இருக்கும் அங்கே. அத்துடன் பஞ்சாங்கத்தையும், பல்லி சாஸ்திரத்தையும் பக்கத்தில் வைத்திருப்பான். படிக்கும்போது பல்லி விழுந்தால் பலன் பார்க்க

வேண்டுமென்பதற்காகவே, பக்கத்தில் வைத்திருக்கிறான் அதை.

ஸ்டீவன்சன், நியூட்டன் வரலாறுகளுக்கெல்லாம் குறிப்பெடுத்துக் கொண்டிருப்பான்; அதே நேரத்தில் சிறுத்தொண்டரின் செய்கையைப் பற்றி எண்ணுவான்.

ஜூலியஸ்ஸீஸர்- அலக்ஸாண்டரிலிருந்து நெப்போலியனை வரையிலே தான் இட்ட கீழ்க்கோடுகளை நினைவுபடுத்துவதற்காகப் பார்த்துக் கொண்டு வருவான்; அதே சமயத்தில் ஹஸ்திநாபுரம் கண்ணுக்கெதிரே வந்து, அர்ஜுனனின் வில்லையும், கிருஷ்ணனின் சக்ராயுதத்தையும் காட்டிநிற்கும் பக்கத்தில் உள்ள மகாபாரதத்தைப் பெருமிதத்துடன் பார்ப்பான்.

ரேடியோவுக்குப் பக்கத்திலே ஒரு கணபதி படம் இருக்கும். அதைக் கும்பிட்டுவிட்டுத்தான் ரேடியோவைத் திருப்புவான். ரேடியோக் கேட்கும் நேரத்தில் கடவுளின் நினைவும் இருக்க வேண்டும் என்பது அவனுடைய எண்ணம்.

அந்த வட்டாரத்தில் உள்ளவர்கள் தங்களின் மக்களுக்கு உபதேசம் பண்ணும்போது வேலாயுத முதலியாரின் மகன் கோபாலை மேற்கோளாக எடுத்துக்காட்டுவார்கள். நேரடியாகக் கோயில்களுக்கும், தாங்கள் கேட்ட கதைகளுக்கும் விளக்கமுரைப்பதைக் காட்டிலும் கோபாலனை எடுத்து விடுவார்கள். அப்படிப்பட்ட கோபாலனை இவ்வாறு பேசவைத்தவள் மதுரம்!

∴ ∴ ∴

மதுரம், செல்லம்மாவின் சிங்காரக் கொடி. அக்கொடிக்குத் தான் கொழுகொம்பாக வேண்டும் என்ற எண்ணம், கோபாலன் வீட்டுக்கு எதிரில் அவள் குடிவந்ததிலிருந்தே, அவன் மனதில் குடிபுகுந்துவிட்டது



சனாதனத்தின சாதிப் படலத்திலே ஏதோ ஒரு பிரிவைச் சேர்ந்தவள செல்லம்மாள். மதுரம் வயிற்றில் மாதம எண்ணிக் கொண்டிருக்கையிலேயே சீட்டைக் கிழித்துக் கொண்டான் செல்லம்மாளின் கணவன் சின்னராசன.



மோர் விற்றுத்தான் மதுரத்தைப் படிக்கவைத்தாள். அவளும் படித்து, ஆரம்ப ஆசிரியையாக வேலைபார்த்து வந்தாள். அவளைப்பற்றி பலர் 'அவதூறு' பேசுவது வழக்கம். ஏனெனில், 'அறிவுச் சூனியங்க'ளால் அழைக்கப்படும் 'நாஸ்திகக் கூட்டம்' எனனும் அறிவியக்கத்தைச் சேர்ந்தவள சீர்திருத்தவாதி; வெளியிலல்ல--வாழ்க்கையில். வஞ்சிக்கொடியை வம்பு செய்யவேண்டும் என்பது சில 'குணவான்களி'ன் எண்ணம். அதற்கேற்ப, சில 'விஷமங்களின்' துணைக்கொண்டு தொந்தரவு கொடுத்து வந்தார்கள் அவளுக்கு. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். வம்புத்தனம வளர்ந்ததே தவிர, குறையவில்லை. அங்கு இருந்தால் தனக்குக் கேடு வரும என்று எண்ணித்தான, கோபாலன் வீட்டுக்கெதிர் வீட்டில் குடியேறினாள்.

ஒரு நாள் மாலை, 'நேரம் சிறிது செல்லட்டும கோயிலுக்குப் போவோம' என்ற எண்ணத்துடன வெளித் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். வெளி முற்றத்தில் கால் பந்தைப் பதம பார்த்துக்கொண்டிருந்தார்கள் சிறுவர்கள். அதைப் பார்த்துக்கொண்டிருந்தான் கோபாலன். யாரோ ஒரு சிறுவன் அடித்தான பந்தை. அது உருண்டது. அதைத் துரத்திக்கொண்டு, இரண்டு சிறுவர்கள் தலை தெறிக்க ஓடினார்கள். கோபாலனின் கண்களும் அவர்களுக்குப் பின்னால் தொடர்ந்துகொண்டேயிருந்தது. அந்த வாசலில் நின்ற ஒரு காட்சி மீது போய்த் தைத்தன சிறுவர்களின் விளையாட்டைக் கவ

னித்துக்கொண்டிருந்தாள் ஒரு பெண்! மேனகை, ரம்பை, ஊர்வசிகளையெல்லாம், ஏடுகளில் வர்ணித்தபடி உருவாக்கி அவளுடன் ஒத்திட்டான்! சட்! மேனகையாவது ரம்பையாவது! காளிதாசனின் சகுந்தலை தான் இவள் என்று உவகை பெருக நினைத்துக்கொண்டான். அதே சமயம் தன்னை ஒரு கணம் துஷயந்தனைக்கிக்கொண்டான். தனது பார்வைக்குத் தனது எழில் உருவை விருந்தாக்கிக்கொண்டிருக்கும் அக் கோமளாங்கியை இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். மதுரத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதிலேயே கோவிலைக் கூட மறந்துவிட்டான்! சிறிது நேரம் சென்றதும், அவள் உள்ளே சென்ருள். போகும்போது தனது கண்ணீட்டியை எறிந்து விட்டுத்தான் போனுள். அப்பொல்லாத ஈட்டியோ கோபாலனின் நெஞ்சைச்'சுரீர்' என்று தாக்கிக்கொண்டே உள்ளே பாய்ந்தது.

இருவாரங்கள் சென்றன. இதுவரை, அவளைப்பற்றி யாரிடமும் வாய் திறக்கவில்லை. அவன். மனமோ அவளைப்பற்றி விசாரிக்க வேண்டும் என்று அடித்துக்கொண்டிருந்தது. இதற்கிடையில் நாலைந்து முறை கோபாலனின் கண்களுக்குத் தோன்றி மறைந்துவிட்டாள், மதுரம்.

ஒருநாள் புத்தகக் கடைக்குள் நுழைந்தான், கோபாலன். ஏதோ ஒரு ஏடை எடுத்துக்கொண்டு, சட்டைப்பைக்குள் கையை விட்டான். அவன் புருவம் நெரிந்தது. எடுத்த புத்தகத்தை மேசைமேல் வைத்துவிட்டு, உதறித் துழாவினன் சட்டைப்பையை! மணிபர்ஸ் அங்கே இருந்தால் தானே! உதடுகளைக் கடித்துக்கொண்டான்.

''என்னசார் பர்ஸை யாரும் 'புரோகிதம்' செய்து விட்டார்களோ அல்லது, மறந்து......?''

வீணையில் தந்தி அறுபட்டு நின்றதுபோல் இருந்தது கோபாலனுக்கு. திரும்பினன், மதுரம்! கோபாலனின் முகத்தில் வெட்கக்குறி ஒன்று அரை விநாடி விளையாடிவிட்டு மறைந்தது. புன்னகையை வரவழைத்துக் கொண்டே, ''எனக்கே நினைவில்லை! மறந்து போய் வீட்டில்தான் விட்டு வந்தேனே; அல்லது..'' என்ருன்

''வீட்டில்தான் விட்டு வந்திருப்பீர்கள். நீங்கள் திருட்டில் ஏமாறுபவரைப்போன்று தெரியவில்லை.'' என்று சொல்லிக்கொண்டே, அப்புத்தகத்தின் விலையைக் கேட்டாள் கடைக்காரரிடம். கோபாலன் திடுக்கிட்டு விட்டான்!

''என்ன, நீங்கள்......''

''நான் பணம் கொடுக்கிறேன். நீங்கள் புத்தகத்தை எடுத்துக் கொண்டு போங்கள்.''

''பரவாயில்லை! நான் சொல்லிவிட்டுக் கொண்டுபோகிறேன். நாளை வந்து கொடுக்கலாம்!''

"இல்லை! நான் கொடுக்கிறேன. எதிர் வீட்டுக்காரர் தானே; நாளை வேண்டுமானுல் நீங்கள் கொண்டுவந்து தந்து விட்டால் போகிறது!"

"ஓஹோ! அந்த நம்பிக்கையிலா இந்த உபகாரம்! ஆமாம்; நான எதிர் வீட்டுக்காரா என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"அதுதான் எங்கள் வீட்டை விழுங்கி விடுபவர் போல்பார்த்தீர்களே, திண்ணையில் உட்கார்ந்து கொண்டு."

மதுரத்தின் வாயில் விஷமச் சிரிப்புத் தவழ்ந்தது, இதைச் சொல்லும்போது. முடிவில், கோபாலன் புத்தகததோடு விடு திரும்பினுன. வழியில் அவன் நடப்பதாகத் தெரியவில்லை;சிங்கப் பூருக்குப் பறந்து கொண்டிருக்கும விமானததில் இருப்பதாகத் தோனறிற்று.!

அன்று இரவு முழுதும்,நித்திரை கொள்ள விரும்பவில்லை. எத்தனையோ காட்சிகளை மனக் கோட்டையிலே சித்தரித்த வண்ணம இருந்தாண. வஸந்தசேனையும-சாருதத்தனும, சகுந்தலையும- துஷ்யந்தனும வந்து வந்து போவார்கள (அவர்களைத்தான் 'காதலர்கள' என்று எண்ணியிருபபவன்!)

அடுத்த நாள் மாலை 'விர்' ரென்று வந்தது. பணத்தை எடுத்துக் கொண்டான். நெற்றியில் நீறு பூசிப் பொட்டிடவும் மறக்கவில்லை. மெதுவாக அவள் வீட்டில் புகுந்த பொழுது, ஒருநூலைப் புரட்டிக் கொண்டிருந்தாள் மதுரம். கோபாலன் வந்ததை அவள் கவனிக்கவில்லை.

"நமஸ்காரம்!"

குரலைக்கேட்டு நிமிர்ந்தாள்; எதிரில் கோபாலன்!

"ஓ! நீங்களா! வணக்கம்; வாருங்கள்!" என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள்.

"நேற்று வாங்கிய பணம்..."

இதைச் சொல்லும்போது வாயெல்லாம் பல்லாயிருந்தது கோபாலனுக்கு.

அன்று வெகு உற்சாகமாக, இருவரும உரையாடிக் கொண்டார்கள. இதற்குப் பிற்பாடு ஒவ்வொரு மாலையும கோயிலுக்குப போவதைத 'தள்ளுபடி' செய்து விட்டு, மதுரததின வீட்டைத் தரிசிப்பதில் கவனம செலுத்தினுன்.

வானத்து மதியே வளர்ந்து தேய்ந்து போகுமபோது கோபலன்-மதுரம சமபந்தப பட்ட நிகழ்ச்சிகள் சுமமா நிறக முடியுமா? காலப்பாதையில் உள்ள வாரம், மாதம் போனற மைல்கலைத் தாணடிக் கொண்டிருந்தன அவாகளுடைய நிகழ்ச்சிகள. உலகத்தை, புராணங்களுக்குள்ளும, குழவிக் கல்லுக்குள்ளும கண்டு வந்த கோபாலனின் கருததில், ஜூலை 14 நடந்து கொண்டிருந்தது. முடிவு?—ஜூலை 15 தான.

இந்தப் புரட்சிக்கு மூலகாரணம மதுரம். கோபாலனின போக்கைக கண்டு பரிதா

பப்பட்டாள். அவன் படிப்பு நீர் விழலுக்கிறைக்கப் படுவதைக் கண்டு, மனம நொந்தாள். துப் பாக்கியின் பக்கத்தில் வில்லை யும அம்பையும் கழுநீருக்குள் குடிநீர் கலக்கப்படுவதையும் கண்டு கலங்கினாள். தனது வாழ்நாள் பூராவும் அறி யாமை இருளைத் துணைக் கொண்டுநடந்து எங்கு, எங்கு மோதப்படுகிறாரோ, என்று எண்ணலானாள். எப்படியாவது கோபாலனைச் சுத்தப்படுத்தி விடவேண்டும், என்று தீர்மா னம கொண்டு விட்டாள். அடுத்தபடி, செயல்தானே!

ஆரம்பத்தில், கோபாலனின் போக்கில், மதுரம் தலையிட் டதை அவன் விரும்பவில்லை; சில சமயங்களில், கிண்டலாக எடுத்துக் காட்டுவாள் அவ னது மூடத்தனத்தை. அவன் கொண்டிருந்த முடிவுகளை யெல்லாம், தகர்த் தெறியத் துவங்கினாள்.

"நளவெண்பா பார்த்திருக் கிறாயா மதுரம்?"

"ஏன்?"

"தமயந்தி—நளனைப் பற்றிப் புகழேந்தியின் கற்பனை, நம் மைக் காப்பியடித்ததோ என்று .........."

"சரிதான், பயித்தியம் முற்றி விட்டது! ஏது புகழேந்தி உங் கள் பேரன் போலிருக்கு!"

"உனக்குச் சொல்ல வந் தேனே!"

"ஆமாம், மனோன்மணியம் படித்திருக்கிறீர்களா?"

"அதிலென்ன இருக்கிறது?"

"சேரனும், மனோன்மணியும் இருக்கிறார்கள்."

"அப்படியென்றால்......?"

"காதல் இருக்கிறது என்று பொருள!"

"இதைப் பெரிதாகச் சொல்ல வந்து விட்டாயே! ராமர் ஜனகர் அரண்மனையில் கால் வைக்கும்போதே, சீதை யின கண்களும்—ராமரின் கண் களும் எல்லாவற்றையும சொல் லிவிட்டனவே! அதை விட வேறு யார் அதிகமாகச் சொல் லப போகிறார்கள்?"

"அதிருக்கட்டும். மாதவி—கோவலனைக கேள்விபபட்டிருப் பீர்களே?"

"அந்தக் கூத்தாடியின் கதை யைச் சொல்ல வந்தாயோ—பாலைவனத்தில் நீரைக் காண் பது மெய்யாயிருந்தாலல்லவா, மாதவியிடம காதலைக் காண முடியும்?"

"ஏன் உங்கள் வீட்டுக் கொல்லையில் மல்லிகை பூக் காதோ?"

"மதுரம்! இனி என்னுடன் வாதம் பண்ணவும் வேணடாம். பிறகு தோல்வியடைந்த, பேச்சை வேறு திக்கில் ஓட்ட வும் வேண்டாம்" என்றான். 'கலகல' என்று சிரித்துக் கொண்டே.

மதுரத்தின் அதரத்தில் குறுநகை கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தது; கைப் பின்ன லைப் பின்னிக் கொண்டே இருந்

தாள். கோபாலனின் மூளையில் திடீரென ஏதோ ஒன்று உதித்தது.

"மதுரம், கடைசியாக நீ என்ன கேட்டாய்? எங்கள் வீட்டுக் கொல்லையில் மல்லிகை பூக்காதா, என்று?"

மதுரம் மெதுவாகத் தலையாட்டினாள்.

'மதுரம், மடக்கி விட்டாயே என்னை! இப்போதுதான் புரிகிறது உனது கேள்வியின் பொருள்!"

இப்படி அடிக்கடி நடக்கும் உரையாடலைக் கொண்டே, கோபாலனை மாற்றிவிட்டாள். மதுரத்தின் ஒவ்வொரு கருத்தொலியும், சுருதி குலையாத இன்னிசையாக இருந்தது கோபாலனுக்கு. வரவர மதுர கீதத்தின் இசையில் மூழ்கி விட்டான்.

அவன் படிப்பறையே அக்டோபருக்குப் பின்னுள்ள சோவியத்தைப் போன்று மாறிற்று. எந்த நூல்களை நஞ்சு என நினைத்து வந்தானோ அத்தனையும் அங்கிருந்தன. சிந்தனை நூல்கள், அறிவுக் களஞ்சியங்கள் அங்கே குவிக்கப்பட்டிருந்தன. கோபாலனின் பேச்சில்கூட உயிர்த்துடிப்பு இருந்தது; அத்துடன் வேகமும் பிணைந்திருந்தது. அவனுடைய அதி தீவிர மாறுதலைக் கண்ட மதுரம்கூட அதிசயப்பட்டாள்.

"மாலைமணி' எனது அரசியல் உலகம்; திராவிடநாடு எனது பல்கலைக் கழகம்; பொன்னி எனது கலைக்கூடம்" என்று சொல்லும்போது அவனுடைய முகம் ஒருவித மலர்ச்சியுடன் ஒளி வீசும். "சுயமரியாதை இயக்கம் நான் வாழும் வீடு!' இதைச் சொல்லும்போது அவனுடைய மார்பைக் காண வேண்டும், குன்றென உயரும். அங்கே மதுரம் விளையாடிக் கொண்டிருப்பாள்.

○●○

தந்தையைப் பற்றி, மதுரத்திடம் சொல்லியிருந்தான் கோபாலன். 'முதலியாருக்கு முரணாக உள்ள விஷயங்களில் 'முந்தல்' தனமாக நடந்து கொள்ள வேண்டாம்!" என்று புத்திபுகட்டியிருந்தாள் மதுரம். கோபாலனின் திடீர் மாறுதல் முதலியாருக்குத் தெரிந்தால், அனர்த்தந்தான். ஒன்று, கோபாலன் வெளியேறவேண்டும்; அல்லது ரமண மடத்தை நோக்கிப் போகவேண்டும். கோபாலன் முதலியாரின் 'குவிட் இந்தியா' உத்திரவை ஏற்பானே தவிர, மாறுதலை மாற்றிவிட மாட்டான—என்ற திடமான நம்பிக்கை மதுரத்துக்கு இல்லாமலில்லை.

முதலியாரின் வைதீகம் திருப்பனந்தாள் பல்லக்கைத் தோளில் தூக்குமளவு முற்றியிருந்தது. சாதி ஆசாரங்களைக் கடுகளவும் விட்டுக் கொடுக்க மாட்டார் அடப்படிப்பட்டவர் பூசனிக்காயும், துவரையும் போன்ற தங்களிருவருக்கும் முடிச்சுப்போட விருப்பப்படுவாரா? வீடு களமாகத்தான் போகப் போகிறது, காரணம் நான்தானே! சே! நானா இல்லை! இதற்குக் காரணம் நானல்ல,

இந்த நூற்றுண்டு!—என்று எண்ணுவாள்.

கோபாலனின் நடப்புகள் பற்றி, ஆரம்பத்தில் ஒன்றுந் தெரியாது முதலியாருக்கு. பிறகுதான் தெரியும் சிறிதளவு. கொம்பு ஊதுகிறவர்கள்தான் இருக்கிருர்களே, முதலியாரின் காதிலும் ஊதினுர்கள் கோபாலன்—மதுரம பற்றி. முதலில் இதை நம்பவில்லை, முதலியார். பிறகு, கவனிக்கத் துவங்கினுர் கோபாலனை. அவனது நடத்தைகளில் 'மாறுதல்' இருக்கிறதைக் குறித்துக் கொண்டார். ஆனுல், கோபாலனிடம் ஒன்றும் பேசவில்லை. தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது. இதைப் பற்றிப் பேசினுல், படிப்புக் கெடும்-என்று இருந்து விட்டார்.

பரீட்சை எழுதிவிட்டான். முடிவைப் பற்றி அவன் கவலைப் படவில்லை. அவன துவங்கி விட்டான் தனது வேலையை, அந்த வட்டாரத்தில்.

"ஐந்தாம் வேதம் சொல்லித் திரிகினுன்—ஊரை இரண்டாக்குகிருன்—அந்த நாத்திகக் கும்பலோடு சேர்ந்துவிட்டான். பக்தி ஆசாரத்தோடு இருந்தவன் கொஞ்சங்கூடப்பயமில்லாமல் இப்படிச் சொல்லித் திரிவதென்றுல், இது பகவானின் லீலையோ என்று ஓலமிடத் துவங்கியது வைதிகக்கூட்டம். முதலியாருக்கு கோபாலனைப் பற்றிய தகவல்கள் வந்து கொண்டேயிருந்தன. முதலியாரும் பொதுவாகக் கண்டிக்கத் துவங்கி விட்டார் கோபாலனை. அவன் அவற்றிற்கு ஒரு மறுமொழியும் சொல்லமாட்டான் கேட்டுக் கொண்டு போய்விடுவான்.

ஃ ஃ ஃ

அன்றிரவு பிடித்த மழை பகல் பத்து மணியாகியும் விடாமல் பெய்து கொண்டிருந்தது. கோபாலன் கட்டிலில் படுத்தவாறு எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தான்.

ஒருநாள் தன் நண்பன் ஒருவனுடன் உரையாடிக் கொண்டிருந்தான். அப்போது, "மழை வந்தால் பசிபிக் தீவுக் கூட்டம்போல் காட்சி யளிக்கும் நமது ஊர்ச்சேரி!" என்றுன் நண்பன்.

"அவர்களைக் காப்பாற்ற முடியாதா?" கோபாலன் இவ்வாறு கேட்டான்.

"இப்போதே காப்பாற்ற முடியவில்லையே! அந்நேரம் எப படிக் காப்பாற்றுவது?"

"அப்பொழுது அவர்களின் கதி? ஒருவரும்—எதனுலும் காப்பாற்ற முடியாதா?'

"சாவுதான் காப்பாற்றும்; கோபால் இப்'புண்ணிய' நாட்டின் வெள்ள வரலாற்றைப் பிரித்துப் பார்த்தால், ஊர்ச்சேரிகள்—சிறு கிராமங்கள் அழிந்த—இறந்த—நிகழ்ச்சிகளின் தொகுப்புத்தான் அவ்வரலாறு என்பதைக் கண்டு கொள்ளலாம். எத்தனை உயிர்கள் மிதந்திருக்கின்றன; எத்தனை குடும்பங்கள் குலைந்திருக்கின்றன!........."

இதை நினைத்துக் கொண்டான கோபாலன். வெளியே எட்டிப் பார்த்தான். வெள்ளம

ஆற்றெனப் பாய்ந்தது தெருவில். மழையும் மெதுவாக ஓய்ந்து கொண்டிருந்தது. சற்று நேரம் ஏதோ யோசனை செய்தான். ஒரு முடிவுக்கு வந்தவன் போல் கம்பளித்துண்டைத் தலையில் கட்டிக்கொண்டு வெளியில் புறப்பட்டான்.

அவன் எதிர்பார்த்தபடி, சேரிக் குடிசைகள் வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தன. குழந்தைகளும் பெண்களும் இரைச்சலிட்டுக் கொண்டிருந்தனர். சிலர் தங்களுடைய சாமான்களை அப்புறப்படுத்துவதும் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு வெளியில் வருவதுமாக இருந்தனர். சேரிக்குச் சிறிது தூரத்தில் ஒரு சிறிய தோப்பு. அது மேடான இடமும் கூட. அங்கு பலர் கூடியிருந்தார்கள். எல்லோருக்கும் நிற்க, அங்கு இடமில்லாதபடியால், அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தனர் ஒருசிலர். கோபாலன் இவற்றையெல்லாம் கண்டவுடன், ஒரு சாரணத் தொண்டனாக மாறினான்.

குந்த இடமில்லாமல் தத்தளித்துக் கொண்ட பலருக்குத் தனது வீட்டை அவர்களுக்கிடமாக்கினான். முதலியார் வெளியூர் போயிருந்ததால், சேரி மக்களை வீட்டில் இருக்க வைக்க வசதியாயிருந்தது. இவன் இவ்வாறு செய்வதை ஊர்ப் பெரியவர்கள் தடுத்தார்கள். தட்டிக் கழித்து விட்டான் அவர்கள் பேச்சை. அதிகாரிகள் எல்லாருக்கும் ஒரு ஏற்பாடு பண்ணிய பிற்பாடுதான் கோபாலன் வீடு காலியாயிற்று.

முதலியார் வீடு வந்ததும் சேரி மக்கள் வீட்டில் இருந்த செய்தி எட்டிற்று. கோபாலனைக் கூப்பிட்டுக் கேட்டார். அவன் நடந்தவற்றைச் சொன்னான். முதலியார் அவனைக் கடிந்துரைக்கத் துவங்கினார். அவனும் பதில் கூற ஆரம்பித்தான். அதன் கடைசிப் பகுதிதான் ஆரம்பத்தில் காணப்படுவது.

∴ ∴ ∴

கோபாலன் எதிர் வீட்டிலிருந்து வெளியே வந்தான். மதுரமும் அவன் பின்னால் வந்து, வாசலில் நின்றாள். வெளியே வந்த முதலியார் இதைக் கண்டு விட்டார். தான் கேள்விப்படுவது அத்தனையும் உண்மையென, அப்போதுதான் தெரிந்தது. காலையில் கோபாலன் பேசிய பேச்சு, ஆத்திரத்தைக் கிளறிக்கொண்டிருந்தது. இக்காட்சி அதற்கு இன்னும் ஆர்வ மூட்டிற்று. அன்று வீடு போர்க்களமாயிற்று. முடிவில் கோபாலன் வெளியேறினான். 'உலகம் குறுகியிருந்தது முன்னே; இப்போது விரிகிறது' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான். மதுரத்தின் வீடுதான் எதிரில் இருக்கிறதே!

அன்று மாலை, கனல் சக்கப் பேசிக் கொண்டிருந்தான். மேடையிலே! பெரிய பாளையத்தில் (சென்னைக்கு 25 மைல்



புரட்சிக் கவிஞர்
பாரதிதாசன்
நூல்கள்
அனைத்தும்
எங்களிடம்
கிடைக்கும்
செந்தமிழ்ப் பதிப்பகம்
கீழராசவீதி — புதுக்கோட்டை

வடக்கே யுள்ளது) நடக்கும் நிர்வாண பூஜையை அரசாங்கம்கூடத் தடுக்காமல் அழகு பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டித்து விளக்கிக் கொண்டிருந்தான். அறியாமையின் ஆணிவேரை அறுத்தெறிந்து கொண்டிருந்தான். கூட்டமும் சொல்ல முடியாத அளவுக்குப் பெருகிக் கொண்டிருந்தது. பறந்தது ஒரு மலைப் பிஞ்சு மேடையை நோக்கி. கோபாலனின் தலையில் ரத்தம் கொட்ட ஆரம்பித்தது, பொருட்படுத்தவில்லை. புயலானான்; மீண்டும் பறந்தன மலைப் பிஞ்சுகள். கூட்டத்தில் குழப்பம்; தலையிலும் மார்பிலும் பலத்த காயம் கோபாலனுக்கு! ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

கோபாலனை எதிர்பார்த்துக் கொண்டு வாசலில் வந்து நின்றாள் மதுரம். கோபாலன் வீட்டை விட்டு வெளியேறிய செய்தி முதலியார் வீட்டு வேலைக்காரியால் அறிந்திருந்தாள். எங்கு சென்றானோ, என்ன ஆயிற்றோ என்று ஏங்கிக் கொண்டிருந்தாள்.

தெருவில் யாரோ சிலர் கூட்டத்தைப்பற்றிப் பேசிக் கொண்டு போனார்கள். கோபாலனைப்பற்றிச் சில சொற்கள் அவள் காதில் விழுந்தன. காயம்--தலையில்--கோபாலன்--ஆஸ்பத்திரி...அவ்வளவுதான். பறந்தாள் ஆஸ்பத்திரியை நோக்கி.

படுக்கையில் கிடந்தான் கோபாலன். கட்டுப் பலமாகப் போடப்பட்டிருந்தது தலையிலும்---மார்பிலும். மதுரம் பக்கத்தில் இருந்தாள். அவள் கண்களில் நீர்த்துளிகள் படர்ந்திருந்தன. அவன் தலையை மெதுவாக வருடியபடியே, "வேதனையாயிருக்கிறதா......" என்றாள். காயந்திருந்த அவன் அதரங்கள் மெல்லத் திறந்தன. மெதுவாகச் சிரித்தான். மருத்துவ விடுதி மணி அடித்தது. விடைபெற்றாள் மதுரம். கோபாலனின் வாய் "மதுர கீதம்!" என முணுமுணுத்தது.

# உங்களுக்குத் தெரியுமா?

## வழிப்போக்கன்

### 9. அதிசயர்!

விஞ்ஞானமும் அஞ்ஞானமும் ஒரே விகிதத்தில் வளர்ந்து வருகின்ற இந்தக் காலத்தில் சாதாரணமாக உலகத்தில் நடைபெறக் கூடிய எல்லாக் காரியங்களுமே அதிசயமாகத் தோன்றுகின்றன. டாக்டர் உண்மையான பீஸ் கேட்டால் அது ஆச்சரியம்! வக்கில் சமாதான முயற்சி செய்தால் அவர் மீது சந்தேகம்! அண்ணன் தம்பி ஒற்றுமையாய் இருப்பதைப் பார்த்தால் மூக்கின் மீது முழங்கையை வைத்து ஆச்சரியப்படுகிறார்கள்.

எல்லாவற்றையும்விட எழுத்தாளர்கள் என்றாலே அவர்கள் மியூசிய நாதர்களாகக் காட்சியளிக்கிறார்கள், அது மட்டுமல்லாமல் சம்பவங்களும் அடிக்கடி அதிசயப போர்வையைப் போர்த்திக்கொண்டு வந்துவிடுகின்றன. திடீரென்று இருந்தாற்போல் ஏதாவது ஒரு வேப்பமரத்திலிருந்து பால் வடிய ஆரம்பித்துவிடுகிறது. இதையும ஒரு அதிசயமென்று கூறிப் பத்திரிகைகள் அந்த மரத்தைப பல கோணங்களில் படுத்துப் படமெடுத்துப் போட்டுவிடுகிறார்கள்! 'இதிலென்னய்யா அதிசயம்? வேப்பமரத்திலிருந்து பால் வடிவது ஒரு அதிசயமா?' என்று நாம கேட்டால் நம்மையும் அந்தச் சந்தடிச் சாக்கில் அதிசயத்தோடு உற்று நோக்குகிறார்கள். ஆனந்த பாஷ்பத்தை அள்ளி விழுங்கி மகிழ்கிறார்கள். ஆனால் நாம அங்கே உற்றுக் கவனித்தால் என்ன தெரிகிறது? வேபபமரந்தான் தெரிகிறது. வேறு ஒரு இழவும தெரியவில்லை. இத்தனை சனியன! எதைப் பார்த்தாலும் அதிசயக் காவடி தூககி அபூர்வப பண்ணு பாடுவதா?

மகாஜனங்கள்தான் இப்படி மண்டையில் களிமண் கூட இல்லாமல் திரிகிறார்கள் என்றால் அவர்களோடு சரிசமமாகப போட்டி போட்டுக கொண்டு ஸ்ரீல ஸ்ரீ மிருகப பெருமான்களும கூடிவிடுகிறார்கள எங்கு பார்ததாலும் லொள் லொள் சத்தம்! சேவல் கூட ஒரு சமயம் ஸ்ரீ முருகனைத் தலத்திற சென்று தரிசித்ததாம். என்னே பக்திப பரவசம! அதிபக்த ஆஸ்திகவாரி ஸ்ரீ சேவலே! உன பக்தி வாழ்க! நுந்தம கொககரக்கோ பாசுரம பல்லாண்டு வாழ்க!

இன்றும் அந்தப் பொல்லாத வால் நட்சத்திரங் கூட நம்முடைய மகான் ஆஞ்சுப் பழ ரசிகநாதரைத் தரிசித்து விட்டுப் போகவந்தது நம்மில் அனேகருக்கு ஞாபகமிருக்கலாம். வந்த வால் சும்மாவா போய்விட்டது? போகிற கதியில் மகானையும் வாலில் சுருட்டிக்கொண்டு போய்விட்டது. இருந்திருந்தும் ஒரு பிரபல பிரக்கியாதி பெற்ற புண்ணிய புருஷரை ஒரு பொல்லாத வால் நட்சத்திரமா கொண்டு போகவேண்டும்! சாஸ்திரங்களெல்லாம் ரௌரவாதி நரகத்திலே நன்றாக எரிய! இழுவெடுத்த புஷ்பவிமானம் வந்திருக்கப் படாதோ! எல்லாம் கலியுகாதி கந்தர்வாளின் அதிசய காதிகள்!

அதிசயம் என்றால் மூலஸ்தான விக்ரகம்போல அல்லது ஒரு நவநாகரிக நாரிமணியில் சாரி புருச்சைப்போல. அதற்கு மகிமை ஏறுவதெல்லாம் வெளிப் பிரகாரத்தில் ஜெகஜ்ஜோதியில் பவனி வரும்போது மட்டுந்தான! அதிசயங்களும அவைகளுக்கு மெருகேற்றிய பிறகுதான அதிசயங்களாகின்றன ஆனால் இந்தக் கொள்ளையில் நல்ல செய்திகள துண்டு நிகழ்ச்சிகள கூட அதாவது மூன்று கண்ணுடைய தேங்காய் மூடி, இரட்டை வெற்றிலை, பவளப்பாசி, பால் பஞ்சாமிர்தம படித்துறையைப் பாழ்படுத்தும் ஸ்படிகப பிள்ளையார் முதலியனவும் அதிசய லிஸ்ட்டோடு வந்துவிடுகின்றன.

∴ ∴ ∴

போகட்டும் சனியன்கள். நமக்கு நட்சத்திரம் பறந்ததும், ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை உருண்டதுய, வேப்பமரத்திலிருந்து பால் சொரிந்ததும், அதைப் பிடித்து விற்பனை செய்ய மாடில்லாத பால் வியாபாரிகள பறந்ததும், சேவல் கூவியதும, சிறகமர்ந்து பம்மியதும கூட, அவ்வளவு ஆச்சரியமாகத் தோன்றவில்லை. ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தைச் சாக்காக வைத்துக்கொண்டு அனேக பத்திரிகைகள் நிறையக் கப்சா மூட்டைகளைக் கட்டி நல்ல விலைக்கு விற்றுவிட்ட காட்சியைப் பார்க்கும்போதுதான் எல்லா நிகழ்ச்சிகளுமே அதி அலங்கோல அதிசய அபூர்வங்களாகப் பரிமளிக்கின்றன.

உதாரணமாக ஒரு சேதி! பர்மாவில் ஒரு பழகிய யானை கோபித்துக்கொண்டு பேசாமலிருந்த இரண்டு தம்பதிகளை உண்ணாவிரதம் இருந்து அவர்களைக் கடைசியில் ஒன்று சேர்த்து வைத்ததாம் நடைபெருதது நடந்திருக்கிறது. கோகுலாஷ்டமிக்கும குலாம் காதருக்கும முடிச்சுப் போட்டது மாதிரி யானை இரண்டு மாறுபட்ட துருவங்களாகிய கணவனையும் மனைவியையும ஒன்று சேர்த்து வைததிருக்கிறது. இந்தச் செய்தி ஒரு பத்திரிகையில் வெளிவந்தது ஆனால் அதற்கு மேலே இருந்த தலைப்புத்தான் மகோ மகாச்சரியமாக நம்மை மயக்குகிறது. கலியுக விக்னேஸ்வரரின் கருணையால், கடைந்தெ

டுத்த காருண்யத்தால் நவீன வள்ளியும் நாகரிக வேலனும் ஒன்று சேர்ந்தார்களாம். என்ன பொருத்தம்!

வள்ளியையும் வேலனையும் புராணப் பிரசங்க பூஷணங்களை மறந்து புல் முளைத்துப் பூசணம் பிடித்துவிட்டது. ஆனால் இந்தப் புளுகுப் புரொபஸர்கள் மட்டும் இன்னமும் புதுப்புதுத் தேனையும், தினைமாவையும் சுவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சாதாரணமாக இந்தப் பத்திரிகை நிருபர்கள் போக்கே இப்படித்தான். அமெரிக்காவிலுள்ள பிரபல மாத சஞ்சிகையின் நிருபர் எகிப்து நாட்டிற்கு ஒரு சில குறிப்புகள் பொறுக்குவதற்குச் சென்றிருந்தார். சென்ற இடத்தில் ஒரு கோவிலுக்குள் நுழைந்தார். அங்கே சிற்ப வேலைப்பாடுகள், சித்திர நுட்பங்கள் செறிந்து கிடந்தன. அதெல்லாம் அவருக்குத் தென்படவில்லை. கடைசியில் கர்ப்பக்கிருகத்திற் கருகில் வந்தவுடன் அண்ணாந்து பார்த்தார். மேலே ஒரு ஆஞ்சநேயர் இந்த அமெரிக்கரைக் கண்டு பல்லைக் காட்டினாராம். தன இனத்தைச் சார்ந்த பிரமுகரைப் பார்த்ததும் நிருபர் ஒரு அடி உயரம் எழும்பிக் குதித்தார். அந்தக் காட்சியைக் காமிராவுக்குள் நுழைத்துவிட்டார். மறு வாரம் அவர்கள் பத்திரிகையில் பிரம்மாண்டமான கோவிலில் காணப்பட்டது ஒரு குறும்புக்காரக் குரங்குதான் என்ற ஆச்சரியச் செய்தி வெளிவந்தது. பிறகு அந்தக் கோவிலை நிகழ் கால அமெரிக்க அதிசயங்களில் ஒன்றாகச் சேர்த்துவிட்டார்கள். அமெரிக்கர்களைப் பொறுத்தவரையில் அதிசயம் என்பது அந்த அளவில் தொனித்துக் கொண்டிருக்கிறது.

எது அதிசயம் என்று நீர்த்தேவதை பஞ்சபாண்டவர்களைப் பார்த்துக் கேட்க, காண்டீபனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் அந்த ஆத்திப்பத்து அர்ஜுனனுக்குப் பதில் தெரியும் "ஆற்று மணலை எண்ணினாலும் அர்ஜுனன் மனைவியரை எண்ண முடியாது என்பதைத் தெரிந்திருந்தும் அந்தப் பாஞ்சாலி அவனைக் கண்டால் பம்பரமாய்ப் பரதம் ஆடுகிறாளே அதுதான் மகாப் பெரிய அதிசயம்" என்று பார்த்திபன் கூறியிருப்பான். ஆனால் அப்போது அவனது அண்ணியும் அதே சமயத்தில் அருமை ஆசை நாயகியுமான அவளே அருகிலிருந்ததினால் வெட்கப்பட்டுக்கொண்டு சொல்லாமல் விட்டுவிட்டான். பீமன் தன்னுடைய முரட்டு சரீரத்தைத் தாங்கிக்கொண்டு அதிநயமாக ஆகாரம் தயார் பண்ணும் சக்தியை அற்புதமாகக் கருதியிருப்பான். ஆனால் பீமனும் பேச முடியாது. அவனுக்கு ஒரு சந்தேகம்! அவன் தயாரித்த உணவைச் சாப்பிட்டுக் கொண்டு விராடபுரத்து அதிகாரிகள் அத்தனை பேரும் உயிரோடிருப்பதுதான் அவனுக்கும் விளங்காதவிநோதம். சாஸ்திர நிபுணன் சகாதேவன ஜாதகங் கணித்தான. சாதகப

படி நாடாளவேண்டிய அவர்கள் காடுமேடுகளில் சுற்றிக் கொண்டிருப்பதுதான் அவனுக்கு ஆச்சரியக் குறி! நகுலன் நல்லவன்! அவனைப் பற்றிய புராணத்தில் அதிகம் கிடையாது! மாடு மேய்த்த இடையன் மகாவிஷ்ணுவாக விசுவரூபம் எடுக்கும்போது குதிரைகளை அடக்கி யாள்பவன் ஏன் ஒரு கோபால கோகுலனாகவில்லை என்பது தான் நகுலனுடைய ஆச்சரிய மென்று பழைய பாகவதத்தில் கூறப்பட்டிருக்கிறது! ஆனால் எல்லோருக்கும் மூத்த பெருமாள் தருமபூபதி இருக்கிறாரே அவர் மகா சாது! அவருக்குப் பரவுலக வாசனை பட்டுவிட்டது. சாவதற்கு விரும்பினார். பாழும் உயிர் சாமானியத்தில் போவதாக இல்லை. அதுதான் அதிசயம்! எல்லோரும் சாகும் போது நாம் மட்டும் இன்னமும் சாகாமல் உயிரோடிருக்கிறோமே அதுதான் அதிசயம் என்று பெருமூச்சுவிட்டாராம்.

இன்றும் ஆங்கில அறிஞர் பெர்னட்ஷாவை ஒரு அழகு மிகுந்துள்ள ஆங்கிலப் பெண் மணி எது அதிசயமானது என்று கேட்டாளாம். அதற்கு அவர் இலேசாகச் சிரித்துக் கொண்டே ஒன்றும் பதில் சொல்லாமல் விட்டுவிட்டார். ஆனால் அந்த ஆங்கிலயுவதி அழகிமட்டுமல்ல குறும்புக் காரி! மறுபடியும் ஷாவைத் துன்புறுத்தினாள். ஷா வழக்கம் போலத் தனக்கே உரித்தான நடையில், "அப்போதுதான் மலர்ந்த பூவானது தன்னுடைய அழகும் மணமும் என்றும் இப்படியே இருக்கும் என்று எண்ணிக் கொள்ளுமாம். அது மாலையில் வாடி வதங்கப் போவது அதற்குத் தெரிய நியாயமில்லை. அதுதான் அதிசயம். உன் அழகின் இரகசியமும் அதுவே" என்று கூறினாராம்.

இதுபோல மிகப்பெரிய விஞ்ஞானியான நியூட்டனைப்பற்றி மற்றுமொரு அறிஞர் ஐன்ஸ்டின் குறிப்பிடும் போது நியூட்டன வாழ்க்கையில் காணப் பட்ட ஒரு முக்கியமான சபபவத்தைப பெரிய அதிசயம என்று கூறுகிறார். நியூட்டன் பல வருடங்களாகப பாடு பட்டு ஒளியைபபற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்து அதன் முடிவாகத் தாம கண்டுபிடித்த அனேக உண்மைகளை ஒரு குறிபபுப் புத்தகத்தில் எழுதிவைத்திருந்தார். அவைகளைக் கண்டுபிடிப்பதற்குள் அனேகவகையில் அவருக்கு இடைஞ்சல்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தன. அத்தகைய அரிய உண்மைகளைக் கொண்டுள்ள அந்தப்புத்தகத்தை நியூட்டனின் பிரியமுள்ள நாய் டைமண்டு ஒருநாள் கடித்துத் துவம்சம் பணணிவிட்டது. நியூடன் மனம் பதறவில்லை. சிதறிய காகிதத் துணுக்குகளைப் புன்சிரிப்போடு அள்ளித் தீயில் போட்டுவிட்டார். அது தான் பெருந்தன்மையுள்ள அதிசய சம்பவம் என்று ஐன்ஸ்டைன் கூறுகிறார்.

சினிமாக் கொட்டகைகளிலும் இன்னும் பெரிய தொழில் நிலையங்களிலும் தீ(*Fire*)என்று

எழுதப்பட்டுள்ள வாளிகளைத் தொங்கவிட்டிருப்பார்கள். அவைகளில் மணல் அல்லது தண்ணீர்தான நிரம்பியிருக்கும். தீமைப் பார்க்கவே முடியாது. இது கூடச் சிலருக்கு அசல் அதிசயமாகத் தெரிகின்றது. இதைப்போலக் காதற் பெருவெளியிலும் பல அதிசயக் கூத்துக்கள் அன்றாடம் நடந்து கொண்டிருக்கின்றன. அத்தகைய அதிசயங்களை உண்மை தான் என்று எல்லோரும் ஏக மனதாகத் தீர்மானிக்கிறார்கள். ஏனென்றால் அதில் காதலின் காலடிகள் காணப்படுகின்றன.

∴ ∴ ∴

இரண்டு நாட்களுக்கு முன் இருபத்தி நான்கு மணி நேரத்திற்கு முந்தியே செய்திகளை நம் கையில் திணிக்கும் 'வதந்தி' பத்திரிகையின் ஒரு மூலையில் போட்டோ ஒன்று வெளியாகியிருந்தது. சுமார் இருநூறு குரங்குகளுக்கு மத்தியில் ஒரு ஆணும் பெண்ணும மணக்கோலத்தில் நின்று கொண்டிருந்தனர். இது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. கல்யாண விசாரணைக் கமிஷனுக்கு இதைப் பற்றி ஒரு குறிப்பு எழுதிப் போட்டுவிட்டு, நானும் துப்புத் துலக்க இறங்கினேன். அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடைத்த செய்திகளுக்கு முழு உருவம் கொடுத்தேன். அதுதான் இது:

நிர்மலா எஸ் எஸ் எல் ஸி வரை படித்தபெண். அவளது கல்யாணத்தைப்பற்றிப் பேச்செடுக்கும்போதெல்லாம்காதல் பைபிங் இல்லாமல் கல்யாண ஜர்பரைப் போட்டுக் கொள்ள முடியாது என்றுகண்டிப்பாய்க் கூறிவிட்டாள் அத்துடன் அவள் நிறுகவில்லை: தனது காதலைக் கொட்டிவைப்பதற்குத் தகுந்த பாத்திரத்தைத் தேடிக் கொண்டும் இருந்தாள். அவளுடைய ரொமான்ஸே ஒரு அதிசய சங்கதி! ஆச்சரியப் பிரபந்தம.

ரீகல் தியேட்டரில் எஸ். எஸ். எல். ஸி. ரிஸல்ட் வந்த அன்று களிப்பு மிகுதியால் படம் பார்க்கச் சென்றாள். வெளிவராந்தாவிலே யாரோ தன் தோழியின் வரவை எதிர்நோக்கியிருக்கும் பாவனையில் நின்று கொண்டிருந்தாள். சற்று நேரம செல்லவும மணியடித்தது. உள்ளே செல்ல யத்தனித்தாள். அப்போது ஒரு பிரமுகர் மாடிப்படிகளில் தாவித்தாவி ஏறிவந்தார். அவர் பாய்ந்து வரும் போக்கைப் பார்த்ததும் நிர்மலா சிரித்து விட்டாள். அவரும் தலைநிமிர்ந்து பார்த்தார். பதிலுக்குக் கொஞ்சம் சிரிப்பைச் சிரமப்பட்டு வரவழைத்தார். பாதிப்பற்கள் வெளியே தெரிவதற்குள் நிர்மலா உள்ளே போய் விட்டாள். அந்த இளைஞர் அவருக்குப் பின்புறமுள்ள ஸீட்டில் சிங்காரமாக உட்கார்ந்து கொண்டார். படம் நடந்து கொண்டிருக்கும் போதே பெருமூச்சு பலமாக வீச ஆரம்பித்தது. நல்ல அழகான பெண்களைச் சினிமாவிலோ அல்லது கோவிலிலோ தனியாகப் பார்த்துவிட்டால் ஆடவர்களுக்கு உண்டாகுமாமே ஒரு வியாதி, அது இந்த மகானுபாவரையும கௌவிக

கொண்டதுபோலும் குறும்புத்தனமாக நிர்மலாவின் சடையை மெல்லப்பிடித்து இழுத்து அதை அவிழ்த்து விட்டார். கோபத்தோடு அவள் பின்புறமாகத்திரும்பவும் அவர் அதைக் கவனியாதது போல அலட்சியத்தோடு அவள் அழகை அள்ளிப் பருகிக் கொண்டிருந்தார். நிர்மலாவுக்கு முதலில் கோபம் கொந்தளித்ததே தவிர அதுபெருகவில்லை இன்னொருமுறை ரிப்பனைத் தொடமாட்டாரா நாம் திரும்ப மாட்டோமா என்று துடித்துக் கொண்டிருந்தாள்.

படத்திலும் அந்நேரம் சரியான மனப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. கதாநாயகன் ஒரு முரடன், கானகத்திலே தாய தந்தையர் காலாவதியாக, தனிமையாகத் திரிந்து சிங்கக்குட்டிகளோடு பயமில்லாமல் பழகி நாளடைவில் மற்ற மனிதர்கள் நினைக்கவும் அஞ்சும்படியான கொடிய வனவிலங்குகளோடு உல்லாசமாய் வாழ்ந்து வருகிறான். அந்தக்காட்டு அரசனை சர்க்கஸ்கம்பெனியார் ஆறுசிங்கங்களோடு சேர்த்துப் பிடித்து நாட்டிற்குக் கொண்டுவந்து விடுகிறார்கள். இடையில் கதாநாயகன் கப்பலிலிருந்து தப்பியோடும் தருணம் கதாநாயகியைச் சந்திக்கிறான். அவள் ஒரு ஆசிரியை! இவனது அறியாமைக்கு இரங்குகிறாள்! கல்வி கற்றுக் கொடுக்கிறாள்! இருவருக்கும் நல்ல நெருங்கியபழக்கம் ஏற்படுகிறது. பழக்கம் காதலை வளர்க்கிறது. முரடனை அந்த மாது ஆசையோடு காதலனாக ஏற்றுக் கொள்கிறாள். ஆனால் நகரவாழ்க்கை சிங்கனுக்குக் கிஞ்சித்தும் பிடிக்கவில்லை. எனவே தனது அருமைச் சிங்கியையும் பழைய சிங்கங்களையும் அழைத்துக் கொண்டு காட்டிற்கே திரும்பி விடுகிறான். இதில கதாநாயகி அந்த ஆஜானுபாகுவான சிங்கமனிதனைக் காதலிக்கத் துணியும் கட்டம் நிர்மலாவின் மனதைப் பிசைந்தது. அந்த உணர்ச்சிக்கு இரையான சமயம் அந்த இளைஞர் இவளது ரிப்பனைத் தொட்டதும இவளுடைய எண்ணங்கள் பலவாறு குழம்பின. இவ்வாறு சிந்தனை சிதறிக் கொண்டிருக்கும்போது படம் முடிந்து விட்டது.

எழுந்து வெளியே செல்லும் வேகத்தில் அந்த இளைஞர் தனனுடைய கைக்குட்டையை அவள் கண்ணில் படும்படி கீழே போட்டுவிட்டுக் கிளம்பி விட்டார். நிர்மலா அதை ஒருவருக்கும் தெரியாமல் எடுத்துக் கொண்டாள். வராண்டா வெளிச்சத்தில் அதை விரித்துப் பார்த்தாள். அதில் ஒரு மூலையில் ஒரு அழகான குரங்கின் படம் வரையப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் ஆச்சரியம் விஸ்வரூபம் எடுக்க ஆரம்பித்து விட்டது.

எல்லோரும்சாதாரணமாகத் தங்களுக்குப் பிடித்தமானவர்களுடைய அழகான படங்களைப் போட்டுக் கொள்வதுதான் வழக்கம். ஆனால் அந்தக் கைக்குட்டையில் ஒரு குரங்குப் படம் போட்டிருக்கிறது. அப்படியானால் அந்தமனிதரைப்பற்றி என்ன

எண்ணுவது? அட சனியனே! குரங்கின மீது ஆசையைக் கொட்டி வைத்திருக்கும் இதுக்குக் காதல் ஒரு கேடா என்று சலிபபோடு கூறிக்கொண்டே வீடு வந்து சேர்ந்தாள்.

ஆனால் அந்தக் கைக்குட்டையைப பார்தததது முதல் அந்த இளைஞர் மீது அடக்கமுடியாத ஆசை உண்டாகி விடடது. நாணயத்தின் மறுபுறத்திலே காதல் மலர் அரும்பி நினறது. ஒருநாள வீட்டில் தனியறையில் நிர்மலா அந்தக் கைத்துணியைப பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். அப்போது டிராயருக்குப் பின்புறமாக உள்ள ஜனனலின் ஓரத்தில் ஒரு குரங்கு அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தது. அதைக் கணடவுடன நிர்மலாவின் காதல் குரங்கு கைக்குட்டை நாதரைத் தேடி ஓடியது. ஆனால் அதே சமயம் அங்கு அவளைத் தேடிக் கொணடு அவளுடைய சிநேகிதி கமலா வந்துவிட்டாள். கமலா அருகே வந்ததும் ஜன்னல் அருகே நினறு கொணடிருந்த குரங்கு நிர்மலாவுக்கு முன்னால் வந்து சலாம செய்தது. பிறகு ஒரு காகிதச் சுருளை அவள கையில் கொடுத்து விட்டு விர்ரென்று வெளியேறியது. நிர்மலாவிறகு ஒரே ஆச்சரியம். கடிதத்தைப் பிரித்தாள். அன்று சினிமாவில் சந்தித்த கைக்குட்டைக் குரங்கு எழுதியிருந்தது. அவளுக்கு அசாத்தியக் கோபம். இருந்திருந்து ஒரு குரங்கையா தூதனுப்புவது! அந்த அயோத்தி இராமனுக்குத்தான் அறிவில்லை யென்றால் இந்த ஐம்பதாம் வருடத்து ஆண்களுக்குமா அறிவு மழுங்கி விட்டது? அப்படியானால் நிர்மலா என்ன அவ்வளவு மட்டமா? அவளும் பதிலுக்குப பதில் போடடி போட்டுக் கொண்டு தன தோழி கமலாவையே தூதாக அனுப்பினால் அவருக்கு எவ்வளவு கோபம் வரும்? ஆனால் நிர்மலா தன் கோபத்தை யெல்லாம் இப்படி முரட்டுத் தனமாக அவர் மீது திருப்ப முடியுமா? அப்புறம அவள் காதலுக்கு ஒருகால் ஒடிந்து ஊனமாகப போனாலும்போய்விடும. ஆகவே சந்திபபுக்குச் சம்மதம் என்பதைத் தெரிவிக்கும பாணியில் தன்னை நன்றாகச் சிங்காரித்துக் கொண்டாள்.

சரியாக மாலை 5 மணிக்கு முனிசிபல் படகு நிலையத்தில் நிர்மலா, கமலா இருவரும பட குக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். இவர்களுக்குப் பக்கத்தில் மெதுவாக ஒரு படகு வந்து நின்றது. அதில் அதே பிரமுகர் தன் பிரியமுள்ள குரங்கு சகிதம் காட்சி யளித்தார். குரங்காருக்குக் குஷி தாங்க முடியவில்லை. குதிக்க ஆரம்பித்து விட்டது. இந்தத் தொந்தரவைச் சகியாதவர் போல அவர் "இதை வைததிருங்கள்" என்று குரங்கை நிர்மலாவின் கரத்தில் ஒப்படைத்து விட்டுப் படகை வலித்துக் கொண்டு போய்விட்டார். குரங்கு கமலாவின் கையைப் பிடித்துக் கொண்டது.

இப்போது மூன்று ஆத்மாக்கள புல் தரையில் அலடசியமாக உட்கார்ந்து கொண்டு

4

குரங்கோடு ஜாலியாக விளையாடிக் கொண்டிருந்தனர். விளையாட்டுக்கு மத்தியில் அவர்களுடைய வேடிக்கைப பேச்சுகளை விளையாடிக் கொண்டிருந்தன.

"தங்களுடைய பெயர்......?"

"குர்.........."

"என்ன? நிஜமாகவா?"

"ஆம். நிஜமாகத்தான். எனக்கு வீட்டில் குருசாமி என்று பெயர் வைத்திருந்தார்கள். நான் எப்பொழுதுமே குரங்கு சேஷ்டை செய்து கொண்டிருப்பேன். அதனால் நாளடைவில் குருசாமி என்ற பேர் மறைந்து குர்சாமி என்ற பெயரே நிலைத்து விட்டது. இப்போது அதைச் சுருக்கிக் குர் என்று வைத்திருக்கிறேன"

"அப்படியானால் என்னுடைய பெயர் நிர்......இவள் கா இது கொர்......கொர்" என்று கூறி நிர்மலா சிரித்தாள்

"நான் சர்க்கஸ் கம்பெனியில் வேலை பார்க்கிறேன். தினமும் குரங்குகளை வைத்துப் பல வேடிக்கைகள் செய்து காட்டுவது வழக்கம். இன்று உங்களை வைத்து வேடிக்கை காட்டுகிறேன்"

"மிஸ்டர் குர்! உங்கள் குரங்கு சேஷ்டைகளைக் கொஞ்சம் மூட்டைகட்டி வையுங்கள் என்னிடம் சிசர்ஸ் இருக்கிறது. ஞாபகமிருக்கட்டும்" என்று கமலா இடைமறித்தாள்.

"சும்மாயிரு கமலா——உம் படம் நன்றாயிருந்ததா?"

"நான் தான் படம்பார்க்கவே இல்லையே. என்னுடைய கைக் குட்டையும் தவறி விட்டது:"

"அது என்னிடம் தானிருக்கிறது."

"என்னுடைய ஞாபகார்த்தமாக வைத்துக் கொள்ளுங்கள்"

"உங்க ஞாபகார்த்தமாக இந்தக் குரங்கே போதும். அது உங்களைப் போலவே" என்று இழுத்தபடியே கமலா நிர்மலாவைப் பார்த்தாள். நிர்மலாவின் மூக்கும் காதும் நாணத்தால் சிவந்து போய் விட்டன. குருசாமி ஆனந்தத்தால் ஒரு அடி உயரமாகக் காணப் பட்டார். காதல் பறவைகள் கைகொட்டி நகைத்தன. மறுபடியும் ரேஸ் கோர்ஸில் மறுநாள் மாலை சந்திப்பதாகக் கூறிவிட்டு வீராங்கனைகள் இருவரும் விடைபெற்றுக் கொண்டு பிரிந்து விட்டார்கள்.

பிரிந்தவர்கள் மறுநாள் மாலை குருநாதரைக்காண ரேஸ் கோர்ஸுக்கு விஜயம் செய்தனர். அங்கு ரிங்ஸ் விளையாடும் இடத்தில் ஏகக் கூட்டமாக இருந்தது. என்ன விசேஷ மென்று பக்கத்திலிருந்த தோட்டக்காரனை நிர்மலா விசாரித்தாள். ரிங்ஸைப் பிடித்துக் கொண்டு ஒரு குரங்கு அபூர்வமான விளையாட்டுகளைச்செய்து கொண்டிருப்பதைப் பார்க்கத் தான் எல்லோரும் கூட்டமாக நிற்கிறார்கள் என்று தோட்டக்காரன் விளக்கிக் கூறினான். உடனே இருவரும் அந்தப் பக்கமாகப் போனார்கள். அங்கே

## சந்தாதார்கள் கவனிக்கவும்

○

சந்தா எண் குறிக்கப் படாது வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. எனவே நண்பர்கள் விலாசமாறுதல் முதலியன குறித்து எழுதும்போது தங்கள் சந்தா எண்ணைக்குறிப்பிட வேண்டுகிறோம்.

குரங்குக்குப் பதிலாகத் திருவாளர் குர் அவர்கள் தான் ரிங்ஸ் விளையாடிக் கொண்டிருந்தார். அன்று சந்தித்து நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். குருசாமியைத்தான் கலியாணம் செய்து கொள்வது என்ற கல்லமுடிவோடு நிர்மலா வீட்டிற்குச் சென்றாள், தகப்பனாரிடம் "அப்பா நான் குரங்கு புரொபஸர் குருசாமி மீது காதல் கொண்டு விட்டேன். அவரையே கலியாணம் செய்து கொள்ள விரும்புகிறேன்" என்று கூறினாள். அதற்கவர் "சீ குரங்கே! என்ன பேச்சு! போ அப்பாலே" என்று விரட்டி விட்டார். அவளுடைய தமையன் "ஐயோ குரங்கு கையிலா பூமாலையைக் கொடுப்பது" என்று பெரு மூச்செறிந்தான். நிர்மலா தன் இலட்சிய இன்பத்தை அடைவதற்காகக் குரங்குபபிடியாக மௌனஞ் சாதித்தாள்.

அடுத்த வாரம் ஞாயிற்றுக் கிழமை! நிர்மலா பெருமகிழ்ச்சியோடுகாட்சியளித்தாள, அன்று தான் அவளுடைய அப்பாவும் அம்மாவும அவளை வீட்டை விட்டுத துரத்தி விட்டார்கள். தமையனும தந்தையோடு கூடிக்கொணடு இந்தப் பாகப பிரிவினை விழாவைச் சிறப்பாக நடத்திவைததான. நிர்மலா குருசாமியை மாஸ்டர் கொர் தலைமையில் மற்றும் சுமார் 200 குரஙகுகள் பிரசனமாயிருக்க மணந்து கொண்டாள. அவல் கடலையும பொரியும் காகிதப பைகளில் போட்டுத் திருமணத்தைச் சிறபபாக நடத்தி வைதத விருந்தினர்களுக்கு வினியோகிக்கப் பட்டன. தம்பதிகளை எல்லாப் பிரமுகர்களும் வாழ்த்திவிட்டுத் தங்கள் தங்கள் கிளைகளை நாடிச் சென்று விட்டார்கள்.

மறுதினம் தான் இச்செய்தி பத்திரிகை வாயிலாக எங்கும் பரவியது. நிர்மலாவுக்கு மூளைக் கோளாறு என்பது அவளது சிநேகிதைகளில் பலரது எணணம். ஆனால் மனம ஒரு குரங்கு; மனங்கொண்டதே மாங்கல்யம் என்ற முறைப்படி நிர்மலா மணம செய்து கொண்டாள். காதல் கட்டுப்பட்டு விட்டது. கல்யாண முமமுடிந்து விட்டது. இதுதான அதிசயம!



# ஈடே இல்லை!

மலராத முல்லைகளின் வரிசை காட்டி
மலர்ச்சிரிப்பால் என் உயிரை ஈர்ப்பாள்; கொவ்வை
உலராத இதழ்களிலே ஊறும் இன்பம்
உரைப்பதுவோ! தெருத்திண்ணை மீது நாங்கள்
பலராக அமர்ந்திருக்கும் போதும் அன்னாள்
பார்வையெலாம் என்மீதே பாயும்; என்றும்
தளராத என்னகத்தைத் தகர்த்தெறியும்
தமிழ்ச்சுவையாம் அவளிதழுக் கீடே இல்லை!

தென்றலது வீசிற்று, மெய்ம் மறந்தேன்;
திரும்பினேன்; அவளென்றன் அருகில் வந்தாள்;
"அன்றிலுக்கு நாமென்ன இளைத்தா போனோம்?
அலைகடல்வாழ் மீனுக்குச் சளைத்தா போனோம்?
மன்றலிலே விளங்கிடுநற் றுணைகள் ஆவோம்,
மகிழ்கடலில் நீந்திடுவோம்; இன்பம் துய்ப்போம்"
என்றுரைத்தாள்; என்சொல்வேன்! இன்பம் சொட்டும்
இதழ்க்கரும்பாம் அடைத்தேனுக் கீடே இல்லை!

பல்விளக்கிக் கொண்டிருந்தேன்; விழிகள் என்னைப்
பரிவோடு தேடுவதை விளக்கும்; தமிழின்
சொல்விளக்கிக் கொண்டிருப்போர் கூறும் இன்பச்
சுவையெல்லாம் அவளிதழ்கள் அசைவால் கூறும்;
வில்விளக்கக் கலைபயில்வோர் திறனை யெல்லாம்
விற்புருவம், வேல்விழியும் விரித்துக் காட்டும்;
எல்விளக்கின் எழில்நிறத்தை உடலில் கொண்ட
ஏந்திழையின் இதழமுதுக் கீடே இல்லை!

— பா. முத்து



# துடிக்கும் இதழ்கள்

மணமன்றில் மாலையுடன் என்கை பற்றி
மகிழ்வுடனே வீற்றிருந்த கோதை நல்லாள்
அணங்கனையாள் உடலழகைக் கடைக் கண்ணாலே
அனுபவித்துக் காத்திருந்தேன். இரவு நோக்கி
மணங்கந்து முறுவலிக்கும் மலர்ச்செவ் வாயின்
வற்றாதவூற்றினையே பருக எண்ணிக்
கணப்போதும் ஓயுகமாய்க் கழிந்தே செல்லக்
களிப்புமிகும் வேதனையால் உளம் துடிக்கும்!

தனியறையில் இருந்தேன்என் எதிரில் வந்து
தணியாத தாபத்தால் முகத்தில் வக்கம்
தனைக்காட்டித் தலைகுனிந்து நாணி நின்றாள்.
தடுமாறும் உள்ளத்தைத் தடைப் படுத்தி
"இனியும்ஏன் நிற்கின்றாய் கால்கள் நோகும்
என்னருகில் அமர்ந்திடுவாய்" என்று பற்றக்
கனிமொழியாள் என்கையை விலக்கிக் கொண்டு
கண்புதைத்து நகர்ந்திட்டாள். உடல் துடிக்கும்!

செந்தமிழின் சுவையெல்லாம் ஒன்றாய்ச் சேரும்
திறமுடைய அவள் இளமை எழிலை மாந்த
உந்துமன ஆசையினால் தொட்டி ழுத்தே
ஒடியாத இடைபற்றித் தழுவிக் கொண்டேன்.
செந்தளிரின் உடலென்மேல் ஒட்டிக் கொள்ளச்
சீறியெழும் இன்பவுணர் வாற்றா ளாகித்
தந்தப்பல் ஒளிகாட்ட வாய் மலர்ந்து
தலைநிமிர்ந்தாள். நானிதழ்கள் துடிதுடிக்கும்!

— சி. அ. சீனிவாசன்

# வானம்பாடி

ரா. தணலன்



-எட்டாம் அத்தியாயம்-

## பணம்! பணம்!

"டேய்...எங்கே போறே...?" என்று வாயிற்காப்போன் அவனைப் பிடித்து நிறுத்தினான்.

"டாக்டரைப் பார்க்கணுங்க ஐயா..." என்றான் கோபு. அவன் முகம் பரிதாபகரமாக இருந்தது. கண்கள் பஞ்சடைந்து கிடந்தன.

"டாக்டரைப்பார்த்தாப் பணம் கொடுக்கணுமே...வெச்சிருக்கறயா...?"

"டாக்டரைப் பார்க்கறதுக்கே பணம் கொடுக்கணுமா?..."

"ஆமாம்...! பார்க்கறதுக்கு, பேசறதுக்கு எல்லாத்துக்கும் பணம் கொடுக்கணும்."

"சரி...கொடுக்கறேன்..."

"போடா போ— பணம் வெச்சிருக்கறானாம்—" என்று அவனைப் பிடித்துத் தள்ளப் போனான் வாயிற்காப்போன்.

"சாமி—சாமி— எங்கக்கா சாகக்கெடக்கறா அய்யா— பணம் கொடுக்கறேன். வேணுங்கறவரைக்கும் கொடுக்கறேன்." என்று கெஞ்சினான் கோபு.

வாயிற்காப்போன் மனம் இளகவில்லை "வெச்சிருக்கானாம் பணம்? மூஞ்சியையும் ஆளையும் பாரு—! கட்டத்துணி கூட இல்லை—காசு கொடுக்கறானாம் டாக்டருக்கு—" என்று ஏளனமாகப் பேசிச் சிரித்தான் வாயிற்காப்போன்.

"ஐயா—எங்கக்கா சாகக் கெடக்கறா ஐயா—பணம் கொடுக்கறேன் அய்யா—" என்றான் கோபு பரிதாபகரமாக.

"போடா—போ— அந்தப் பக்கம் போ— உன்னட துணியும் மணியும்—கெரகம் நாத்தம் அடிக்குது போ போ—நல்ல துணியாய்ப் போட்டுட்டு வா போ—" என்று பின்னும் அதட்டினான் அவன். கோபுவிடம் பணம் இருப்பதாக அவனுக்கு நம்பிக்கையே வரவில்லை.

கோபுவுக்குத் தலை சுழன்றது. அவனை அறியாமல் அவன் கண்கள் நிறைந்துவிட்டன. பேசாமல் நடந்து போனான். இரண்டு மூன்று கடைகள் தாண்டி இருப்பான்.

அங்கே தைத்த துணிகள் விற்கும் கடை ஒன்று இருந்தது. அதைப பார்த்துக்கொண்டே சிறிது நேரம நின்றான. கடைக்குள பேசவும் பயமாய இருந்தது. கையில் இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுகளை எடுத்து முன்னால் நீட்டிப் பிடித்துக் கொண்டான. அடிமேல் அடி வைத்துத் திருடப போகிறவன மாதிரிக கடைக்குள நுழைந்தான. கையில் பணத்துடன வரும்கோபுவைப்பார்த்தவுடன் கடைக்காரன சிரித்த முகத்துடன ''வாப்பா என்ன வேணும்? புதுசா நல்ல சட்டை ட்ரவ்சர் எல்லாம வந்திருக்குது'' என்றான.

கோபுவுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனுடைய வீட்டிலும்தான் வாயிறகாபபோர்கள் இருந்தார்கள்: பெரியவர்களான அவர்களைச் சின்னஞ்சிறு பையனான இவன் ''டேய்--போடா—வாடா—'' என்றுதான் பேசுவான். அப்படி அவன் பழக்கபபடுத்தப்பட்டிருந்தான். ஆனாலும் அவர்கள் கோபித்துக் கொண்டதில்லை. ஆனால்—? அபபடிக் கேவலமான வாயில்காப்போன் வேலையில் இருப்பவன் 'துணிகாத்தமடிக்குது போடா அந்தப்பக்கம்—' என்று தன் கழுத்தைப் பிடித்துத் தள்ளியிருக்க இங்கே அழகான உடைகள் அணிந்துகொண்டு ஆசனத்தில் அமர்ந்து வேலை பார்க்கும், கைக்கடிகாரம் கட்டிய இந்த மனிதன் தன்னை 'வாப்பா' என்று மரியாதையாக அழைக்கிறானே என்று ஆச்சரியம் உண்டாயிற்று.

கோபு மறுபடியும் அவன் முகத்தைப் பார்த்தான். அவன் கண்களோ கோபுவின் கையிலிருந்த பச்சை நோட்டுகள் மேலிருந்தன.

''ஓ—! இதுவும் பணம் செய்ற வேலைதானா?'' என்று நினைத்துக்கொண்டு ''எனக்கு ஒரு சட்டையும நிசாரும் கொடுங்கோ—'' என்றான். இடையிலேயே தன் கையில் தொங்கிக் கொண்டிருக்கும் பழைய கந்தை மூட்டையைப் பார்த்துக் கொண்டான். அதில் இன்னும் கத்தை கத்தையாகப் பச்சை நோட்டுக்கள் இருந்தன. அவனை அறியாமல் அவனுடைய முகத்தில் சிறிய புன்னகை படர்ந்தது இனி இந்தப் பணத்தை இப்படி வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. நன்றாகப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணமும அவன் மனதில் உண்டாயிற்று.

புதுத் துணிகளை வாங்கிப் போட்டுக் கொண்டான். சில்லறையாக அவனிடமிருந்த பணத்தைச் சட்டைப் பையில போட்டுக்கொண்டான். நான்கைந்து ஐந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ட்ரவ்சர் பையில் போட்டுக்கொண்டான். மிச்சம இருந்த நோட்டுக் கத்தைகளை யாரும் பார்க்காத இடத்தில் கொண்டு போய் நன்றாகச் சுருட்டி வயிற்றோடு சேர்த்து இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொண்டான் பின மறுபடியும் டாக்டர் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான். இந்த முறை அவன் தன் கையில் முனபோல் இரண்டு

ஐந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கையில் பிடித்துக் கொள்ளத் தவறவில்லை.

வாயிற்காப்போன், தான் சற்று நேரத்திற்கு முன்னால் கழுத்தைப் பிடித்துத் தள்ளின அந்தப் பையன் புது உருவத்துடன் வருவதைக் கண்டு வியப்படைந்தான். அவன கையில் இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுக்கள் இருப்பதைக் கண்டவுடன் அவனுக்கு மூர்ச்சை போட்டுவிடும்போல் இருந்தது. இந்தப் பையனுக்கு ஏதாவது மந்திரம் தந்திரம் தெரியுமோ என்ற சந்தேகம் கூட அவனுக்கு வந்துவிட்டது.

கோபு அச்சத்தோடு அவன் முன்னால் வந்து நின்று, "நான டாக்டரைப் பார்க்கப் போகலாமா?" என்று கேட்டான.

"ஹி ஹி ஹி—தம்பீ— காபி குடிக்க ஏதாவது காசு குடுக்கறயா—அப்பத்தான் நீ உள்ளே போகலாம—" என்றான்.

"எத்தனை காசு வேணும்?"

"ரெண்டணாக் குடு—"

கோபு சட்டைப் பையில் கைவிட்டான. ஒரு எட்டணா நாணயம் அவன கையில் கிடைத்தது. அதை அவனிடம் கொடுத்தான். வாயிற்காப்போன் கண்ணைச் சிமிட்டிக்கொண்டு வேடிக்கையாக மாமூல் சலாம்போட்டுவிட்டு உள்ளே போகும்படி கையைக் காட்டினான்.

"ராமசாமி அண்ணன் சொன்னது நிசம்தானே. எல்லாரும் பிச்சைக்காரங்கதான்—" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான கோபு.



கழுத்தில் பாம்பு மாதிரி ஏதோ ஒன்றைத் தொங்கவிட்டுக்கொண்டு ஆடம்பரமாக நின்றுகொண்டிருந்த மனிதர் கையில் பணத்துடன் வந்த அந்தச் சிறுவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு "என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"எங்க அக்கா சாகக் கெடக்கருங்க அய்யா. கொஞ்சம் வந்து பாருங்க—" என்று சொல்லிக் கொண்டு தன் கையில் இருந்த நோட்டுகளை அந்த மனிதர் முன்னால் வைத்தான் கோபு. அவன் கண்களில் கண்ணீர் துளித்துக் கொண்டிருந்தது.

"பயப்படாதே— உங்கக்காளுக்கு ஒரு நிமிசத்துலே நல்லாப் பண்ணிடறேன்," என்று சொல்லிக்கொண்டே அந்த மனிதர் பணத்தை எடுத்துத் தன் ஜேபியில் போட்டுக் கொண்டார். சிறிது நேரத்தில் கோபுவும் டாக்டரும் குடிசை இருந்த இடத்தை நோக்கிக் காரில் புறப்பட்டனர். காரின் முன் ஆசனத்திலே அவன் உட்கார்ந்து கொண்டிருந்தான் எப்பொழுதோ நான்கைந்து வயதுக் குழந்தையாக இருந்தபொழுது அவன் எத்தனையோ தடவை மோட்டாரில் சவாரி செய்திருக்கிறான். எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னால் முதன் முதலாக மோட்டார் காரில் உட்கார்ந்துகொண்டு போகும்போது அவன் மனம் எல்லையற்ற ஆனந்தம் அடைந்தது. அழகான அந்தக் காரின உட்பாகங்களையும், ஸ்பிரிங் வைத்த பஞ்சு ஆசனங்களையும் அவன் அநேகம் முறை தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கொண்டான்.

"ஐயோ—ரோஸி— இல்லையே" என்று அவன் மனம் கூவி அழுதது. அவன் கண்கள் புதுக் கிணற்றில் தோன்றும் நீரூற்றுக்களைப் போல் கொப்புளிக்கத் தொடங்கின. அவன் உதடுகள் படபடவென்று அடித்துக்கொண்டன. அடக்கமுடியாத் துக்கத்தோடு 'ரோஸி—ரோஸி" என்று முணுமுணுத்தான்.

கார் நின்றது. அவனைப் பார்த்த டாக்டர்—"பயப்படாதே. அரை நிமிசத்திலே உங்க அக்காளுக்கு ஒரு நோவும் இல்லாமேச் செய்துடறேன். எந்தப் பக்கம்?" என்று கேட்டார்.

கோபு கையை நீட்டிக் காண்பித்தான். அவர்கள் இரண்டு பேரும் குடிசையை நெருங்கின போது அடித்துக் கொண்டு அழும சப்தம் அவர்களை வரவேற்றது. "இச்சுச்சுச்சு—" என்று சொல்லிக் கொண்டு டாக்டர் வந்த வழியைப் பார்த்துத் திரும்பினர். கண்களில் நீர் துளும்பத் தள்ளாடிக் கொண்டு நின்றான் கோபு. அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. 'பெரிய மனிதர்கள தெய்வத்துக்குச் சமமானவர்கள் என்றெல்லாம அவனால் நினைக்கப பட்டவர்கள்—— காலில் விழுந்து காலணாக் கொடுங்கய்யா—என்று கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டபோது அவனை எட்டி உதைத்தவர்கள்——அவாகள் எல்லோரும் வெறும் பணத்தைக் கண்டவுடன் எட்டுக் கும்பிடு போடும

தாசானு தாசர்கள் தான்' என்ற எண்ணம் மாத்திரம் அவன் மனதில எங்கோ ஒரு மூலையில் அடிக்கடி தோன்றி மறைந்து கொண்டிருந்தது.

அவன் பேசாமல் நடக்க ஆரம்பித்தான். முன்னைவிட இப்பொழுது அதிகமாக அவன் நெஞ்சம் "ரோஸி—ரோஸி—" என்று அலற ஆரம்பித்திருந்தது.

## — ஒன்பதாம் அத்தியாயம் —

## "எங்கே போகிறாய்?"

ஜீவ உணர்வற்றவன் போல் பகல் முழுதும் அவன் சுற்றிச் சுற்றி நடந்து கொண்டே இருந்தான். புகல் என்று போய்த் தங்கிய அந்தக் குடிசை இன்று வெறும் பாழ் ஆகிப் போய் விட்டது. ஆனால், என்றும் இணை பிரியாமல் துன்பத்திலும், இன்பத்திலும், வயிறு நிறையப் புசிக்கும் பொழுதும் கண் சுழலப் பசிக்கும் பொழுதும், கொடுங்குளிரில் நடுங்கும் பொழுதும் கனவில் போல் மகிழும் பொழுதும் அவனுக்குத் துணையாக இருந்த அருமை ரோஸி எங்கே? அவள் எங்கே? சென்ற வீதிகளிலேயே திரும்பத் திரும்பச் சுற்றி வரும் அவன் மனதில் இடைவிடாமல் எழுந்து கொண்டிருந்த ஒரே கேள்வி அதுதான்.

"ரோஸி எங்கே—? அவள் எங்கே—? எங்காவது ஒரு மூலையிலிருந்து ஓடிவந்து தன் கழுத்தைக் கட்டிக் கொண்டு ஓ வென்று அழ மாட்டாளா—? மீண்டும் இப்பொழுது அவளைப் பார்க்க நேரிட்டால் எப்படி இருக்கும்? அந்தக் கொடிய இன்ப வெறியிலே தன் நெஞ்சே பிளந்து போனாலும் போகுமே! அப்படி இந்தக் கணத்திலேயே இறந்து விடுவதானாலும் சரி. அவளை ஒரு முறை பார்க்க முடியாதா—? ரோஸி...உன்னை ஒருமுறை பார்க்கும் பாக்கியமாவது கிடைக்குமா—? ரோஸி...... ரோஸி.." அவன் மனம் அலறியது.

தலை சுழன்றது. பொழுது விழுந்துவிட்டது பசி! கண்ணில் கண்டதை வாங்கித் தின்றான். முடிவாக, இனிமேல் இந்த ஊரில் இருக்கக்கூடாது—அப்படி இருப்பதாயிருந்தால் இறந்துதான் போக வேண்டியிருக்கும் என்ற முடிவுக்கு அவன் வந்தான்.

எங்காவது போய்விட வேண்டும்—எங்காவது போய்விட வேண்டும்...என்ற எண்ணம் அவன் மனதில் இடைவிடாமல் எழுந்து கொண்டே இருந்தது. போகும் ஊரிலாவது ரோஸியைக் கண்டு பிடித்து விட முடியாதா—? கண்டிப்பாக முடியும்! என்னால் ரோஸியைப் பிரிந்து இருக்க முடியாது. ரோஸியாலும் என்னைப் பிரிந்து இருக்க முடியாது. என் மனத்திலிருந்து ரோஸி

யைத் தனியாகப் பிரித்துவிட முடியாது. ரோசியின் மனத்திலிருந்தும் என்னைப் பிரித்துவிட முடியாது. நான் இல்லாமல் ரோஸி இல்லை. ரோஸி இல்லாமல் நானும் இல்லை—! என்ற எண்ணங்கள் அவன் மனத்தில் மோதின.

இப்பொழுது ரோஸியைக் காணோமா? ஏன் காணோம்? எங்கே போயிருப்பாள்?

அவள் எங்கும் போகவில்லை! இங்கேயே இருக்கிறாள். ரோஸி என் கண் எதிரில் இல்லையே தவிர அவள் எப்படியோ இங்கே இருந்துகொண்டுதான் இருக்கிறாள் என்பது போன்ற சந்தேகம் உண்டாயிற்று. தன் மேல் படும் காற்றையும் வெயிலையும் வெளியே விரிந்து கிடக்கும் வானத்தையும் அவன் சந்தேகக் கண்களோடு பார்த்தான். ரோஸி அவற்றில் எங்கேயாவது மறைந்திருப்பாள் என்பது போன்ற பைத்தியக்காரத்தனமான புரிபடாத எண்ணங்கள் அவன் மனதில் கிளம்பின. உண்மையாக, அன்பால் நிறைக்கப்பட்டிருந்த அவனுடைய உள்ளத்தில் இப்படி எல்லாம் தோன்றியது. காற்றையும், வானத்தையும், வெறும் வெளியையும் அவன் கேள்விக் கண்களுடன் பார்த்தான். அவற்றின் விடை தன் காதுகளில் ஒலிப்பதாகவும் நம்பினான். "ஆமாம்...... ரோஸி இருக்கிறாள்! இருக்கிறாள் ரோஸி! அவள் என்னிடம் வந்து சேருவாள்! என்றைக்கு? வெகுவிரைவில்... ! இதோ...... மிக விரைவில்...!"

எங்கே, ஏன், எதற்காக என்று எதுவும் அறியாமல் அவன் சென்று கொண்டிருந்தான். தன் கண்களிலிருந்து மறைந்துபோன ரோஸியின் இருப்பிடத்தைத் தேடிக்கொண்டு போவதாகவே அவன் நினைத்தான். அது மாத்திரம் அல்ல, தான் எப்படியோ ரோஸியைக் கண்டு பிடித்து விடப் போவதாகவும் அவன் நம்பினான். அவனுடைய மனதில் வேறு எந்த எண்ணமும் இருக்கவில்லை. வேறெந்தச் சிந்தையும் பிறக்கவில்லை. 'ரோஸி...அவள் எங்கோ இருக்கிறாள். அவளைத் தேடிக்கொண்டு போகிறேன்.' என்று மாத்திரம் அவன் எண்ணினான்.

'குப், குப், குப்' என்று புகை விட்டுக்கொண்டு வந்த ரயில் வண்டி மிகமெதுவாக நின்றது. ரயிலைப் பார்த்தவுடன் அவன் மனதில் என்ன தோன்றியதோ தன் ரோஸியிடம் விரைவாகக் கொண்டுபோய்ச் சேர்க்கும் வாகனம் என்றுதான் அவன் எண்ணியிருக்க வேண்டும். முண்டியடித்துக்கொண்டு வண்டிக்குள் ஏறிக் கொண்டிருந்த பிரயாணிகளைக் காணும்போது அவனுக்கும் ஆத்திரமாக இருந்தது. அது ஒரு சிறிய ஸ்டேஷன். ஸ்டேஷனிலிருந்து சற்று தூரத்திற்கு அப்பால் வரை கம்பி வேலி போடப்பட்டிருந்தது. அதற்குள் புகுந்து கொண்டும் பலர் ஸ்டேஷனுக்குள் போய்க் கொண்டிருந்தனர். ரயிலைப் பிடித்துவிட வேண்டும் என்ற ஆத்திரத்தில் அவனும் உள்ளே புகுந்



தான். ரயில் 'கூ' என்று ஊதிக் கொண்டு கிளம்ப ஆரம்பித்தது. ஓடிப்போய் எஞ்சினுக்குச் சமீபத்தில் இருந்த பெட்டி ஒன்றில் அவனும் தொத்திக் கொண்டான்.

பளபளப்பான மெத்தைகள் போடப்பட்ட அந்த மாதிரி முதல் வகுப்பு வண்டியில் அவன் சின்னஞ் சிறு வயதில் பிரயாணம் செய்திருக்கிறான். ஆனால் இன்றைக்கு அதைப் போன்ற ஆசனத்தில் அமரவே அவனுக்கு வெட்கமாக இருந்தது. அதுவும் ரோஸி இல்லையே என்ற ஏக்கம் நெஞ்சைத் துளைத்துக் கொண்டிருக்கும் பொழுது.........

எதிரே இருந்த மெத்தை தைத்த ஆசனத்தில் இளம் பெண் ஒருத்தி தூங்கிக் கொண்டிருந்தாள். அவளுக்கு

அருகே கிழ கிழவி ஒருத்தியும் தூங்கி விழுந்து கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணிற்கு எத்தனை வயதிருக்குமோ......? பார்வைக்குப் பதினெட்டு இருபது வயதுப் பெண் போலவே அவள் தோன்றினாள். பளபளப்பான ஸில்க் உடைகளும் உயர்ந்த வைர நகைகளும் அணிந்து கொண்டிருந்த அந்தப் பெண் உண்மையில் ஒரு கந்தர்வ கன்னிகைபோலவே தோன்றினாள். அவளுக்கும் ரோஸிக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்க முடியும் என்று கூட அவன் நினைத்திருப்பான். எங்காவது ஒரு பக்கம் ஏதாவது ஒரு அற்புதம் நிகழ்ந்து ரோஸி தன் முன்னால் குதித்து வந்து நிற்பாள் என்று கூட நினைத்திருப்பான். ரோஸி இப்பொழுது தன்னிடம் இருந்தால், தன் கையில் உள்ள அவ்வளவு பணத்திற்கும் இதைப் போன்ற பட்டு உடைகளும் மின்னும் நகைகளும் வாங்கிப் போட்டு ஆனந்தத்தால் கண்கள் நிறைந்து தளும்பிப் போக அவளைப் பார்த்துக் கொண்டிருக்கலாமே என்ற எண்ணம் வந்தபோது அவன் இமைகளில் எரிக்கின்ற தண்ணீர்த் துளிகள் நிறைந்திருந்தன. தன்னை மறந்து அவன் கண்களை மூடிக் கொண்டான்.

மூடிய இமைகளிலிருந்து முத்து முத்தாகக் கண்ணீர்த் துளிகள் மெதுவாக, ஒன்றன் பின் ஒன்றாக உருண்டு கொண்டிருந்தன. எத்தனை நேரம் அவன் இவ்வாறு அமர்ந்து கொண்டிருந்தானோ......? இருளில் ஓடிய அந்த ரயில் வண்டி எத்தனையோ ஸ்டேஷன்களில் நின்று நின்று மறுபடியும் புறப்பட்டுப் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தது.

ஏதோ மிருதுவான கை அவன் முகத்தைத் தொட்டு எழுப்பியது. ரோஸி தான் வந்து விட்டாளோ என்ற எண்ணம் தான் அவனுக்கு முதலில் வந்தது. அந்தக் கையை இறுகப் பிடித்துக்கொண்டு 'ரோஸி' என்று கூவிக் கொண்டு அவன் எழுந்தான். ஆனால், தான் வண்டியில் ஏறியபோது படுத்து உறங்கிக் கொண்டிருந்த, பட்டு உடை அணிந்து கொண்டிருந்த அந்த நங்கையின் கரம்தான் அது என்று உணர்ந்தபோது அவனுக்கு வெட்கமாயும் பயமாகவும் இருந்தது.

"தம்பீ...பயப்படவேண்டாம் ...நான் தான் உன்னை எழுப்பினேன்...கொஞ்சம் டீ சாப்பிடுகிறாயா......?' என்று அவள் கேட்டாள்.

அவள் குரலைக் கேட்டதும் அவன் திகைத்துப் போனான். அதில் இருந்த அந்தக் குழைவு—அந்த இனிமை—அந்த மயக்கம்——ஐயோ——அந்த ரீங்காரம்—எல்லாம்—யாவும்—முழுவதும்—ரோஸியின் குரலைப் போலவே இருந்தது. ரோஸியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்ததால் அவ்வாறு தோன்றியதோ என்னவோ அவன் பேசவில்லை. திகைப்பினால் ஸ்தம்பித்துப் போய் அவன் பேசமுடியாதவனாய் இருந்தான். அவள் கொடுத்த டீயைப் பேசாமல் வாங்கி அருந்தினான். ஏறக்குறைய விடியும் சமயமாகிவிட்ட

டது என்பது அவனுக்குப் பிறகுதான் தெரிந்தது.

"தம்பீ—எங்கே போகிறாய்?" என்று அந்தப் பெண் கேட்டாள——

அந்தக் குரலைக் கேட்டால்—உடனே—அவனை எங்கோ——ஆகாயத்துக்குத் தூக்கிக் கொண்டு போவதாக உணர்வதை அவனால் தடுக்க முடியவில்லை. அவனால் பதில் ஒன்றும கூற முடியவில்லை. பேசாமல் இருந்தான——

"தமபீ—என்கிட்டே—சொல்லக்கூடாதா—உன் அப்பா அம்மா...ஒருத்தரும் இல்லையா? நீ மாத்திரம தனியே எங்கே போகிறாய்—? ஏன் அழுது கொண்டே இருக்கிறாய்——நானும் ரொம்ப நேரமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். வீட்டில் கிட்டில் சொல்லிக் கொள்ளாமல் எங்காவது ஓடி வந்து விட்டாயா? சொல்லு தம்பீ—என்கிட்டே சொல்லக் கூடாதா—நான் உனக்கு ஒண்ணும் கெடுதல் செய்யமாட்டேன்—சொல்லு தம்பீ—சொல்லுடா கண்ணு—" என்று அவள் செல்லமாகக் கேட்டாள்.

கோபு பதில் பேசவில்லை. தான் கிட்ட நெருங்கவும் எட்டி உதைத்த—கண் கொண்டும பார்க்கச் சகிக்காத கேவலமான பொருளாகவும் எண்ணிய பணக்காரப் பெண்களைப் போல் தோன்றிய அந்தப் பெண் அவனிடம் அவ்வளவு அன்புடன் பேசக் கேட்டதும் அவனுக்குக் கண்களில் நீர் சுரந்து விட்டது. அடுத்து அவனுக்கு ரோஸியின் நினைவும் வந்தது. கடந்த இந்த ரொம்பக் காலத்தில் அவனிடம் ரோஸியைத் தவிர யாரும் இவ்வளவு அன்பாகப் பேசினது கிடையாது. அந்த ரோஸிதான் இபபோது இல்லையே——! என்று எண்ணும் போது பின்னும் அவன் கண்கள் நீர் கக்கின.

அந்தப் பெண் அவனை இழுத்துத் தன மடிமேல் கிடத்திக் கொண்டு அன்பாக 'போகட்டும—எங்க வீட்டுக்காவது வருகிறாயா—?" என்று கேட்டாள்.

"என் ரோஸியைக் கண்டு பிடித்துக் கொடுப்பாயா?" என்று உடனே அவன் பதிலுக்குக் கேட்டான்.

அவள் என்ன நினைத்தாளோ—"ஆகட்டும்—கண்டிப்பாக நான் உன் ரோஸியைக் கண்டு பிடித்துத் தருகிறேன" என்றாள்.

அவள் யார், அவளால் ரோஸியை எப்படிக் கண்டு பிடித்துத் தர முடியும் என்பதைப போல் ஒன்றையுமே அவன் நினைத்துப் பார்க்கவில்லை. 'சரி' என்று தலையை ஆட்டினான்.

அவளைப் பற்றிய மற்ற விபரங்களைப் பிறகு கேட்கலாம என்று எண்ணியவளாய் அவள அவனைத் தன்னுடன் தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனாள்——

அவளோடு அவளுடைய வீட்டிற்குப் போய்ச் சேரும் வரையிலும் அவன் மனம அவனை நோக்கி 'எங்கே போகிறாய்—? கோபு—எங்கே போகிறாய்—?' என்றே கேட்டுக் கொண்டிருந்தது.

[தொடரும்]




## குழந்தை வளர்ப்பு

## 4

குழந்தைகளை ஒருபோதும் பயமுறுத்தக் கூடாது.

"அதோ தாடிவைத்த மனிதன் வருகிறான்—அவனிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன்!"

"அங்கே போனாயோ பூதம் வந்து அள்ளிக்கொண்டு போய் விடும்!"

"அதோ வருகிறான் பார் மிட்டாய்க்காரன்! அவன் பிள்ளைகளைத் தூக்கிக்கொண்டு போய் விடுவானாம்!"

"இரவு ரொம்பநேரம் வெளியே விளையாடினாயோ 'எச்சிப் பிசாசு' வந்து கொன்றுவிடும்!"

"குரங்கு வந்துவிடும்! பூனை வந்துவிடும்! புலி வந்துவிடும்!"

"சாமி அப்படியே கண்ணைக் குத்திப்பிடும்!"

இதெல்லாம் சாதாரணமாக நம் தமிழ்நாட்டு அன்னைமாரின் வாயினின்று புறப்படும் 'பயமுறுத்தல்' சொற்களென்று உடனேயே தெரிகிறதல்லவா? நமது குழந்தைகள் அஞ்சா நெஞ்சினராக—வீரர்களாக—எதிர்காலத்தில் விளங்க வேண்டுமென்றால் அன்னைமார்கள் ஒருபோதும் இம்மாதிரிச் சொற்களை உபயோகிக்கக்கூடாது. சந்தர்ப்பத்திற் கேற்றபடி குழந்தைகளைப் பயமுறுத்தினால்தான் அடங்குவார்கள் என்ற கருத்துடனேயேதான் பெற்றோர்கள் இம்மாதிரிப் பயமுறுத்தல் 'அடக்குமுறை'யைக் கையாளுகிறார்கள் ஆனால் இம்மாதிரி அடக்குமுறை எவ்வளவோ விபரீதங்களைக் கொடுக்கின்றது என்பதைப் பெற்றோர்கள் அறிந்திருத்தல் வேண்டும். பயம் என்றால் என்னவென்பதையே குழந்தைகள் தெரிந்துகொள்ளக் கூடாது. அப்போதுதான் இளமையில் அவர்கள் பயமற்ற காளைகளாக விளங்குவார்கள். மேல் நாடுகளில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஒருபோதும் பயமுறுத்த மாட்டார்கள். பயம் என்ற உணர்ச்சியை அவர்களது இளம உள்ளங்களில் புகுத்தமாட்டார்கள். அதனால்தான் மேல் நாட்டார் தைரியம் வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். நமது குழந்தைகளும்

வருங்காலத்தில் வீரர்களாகப் பிர காசிக்க வேண்டுமென்றால் அவர் களைப் பயமுறுத்தி வளர்க்காதீர் கள். குழந்தைகளை அடக்கவேண் டுமானால் இனிமையான சொற் களையே உபயோகிக்கவேண்டும். இனிமையான அன்புநிறைந்த பேச்சுத்தான் குழந்தைகளைப் பெரியவர்கள் வசம் திருப்பிவிடும்.

பெண்கள் அநேகமாக ஓய்வு வேளைகளில் வம்பர் சபை ஏற் படுத்தி அதில் ஒருவரைப்பற்றி யொருவர் கோள்குண்டணிகள் கூறிப் பொன்போன்ற வேளையை வீணாக்குவதுண்டல்லவா? அந்த வேளையில் குழந்தையின் காதில் விழும்படி கோளகுண்டணிகள் பேசுவது தவறான காரியம். ஒரு வரைப்பற்றி யொருவர் இழிவாகப் பேசுவதும், கட்சிபேதமுண்டாக்கு வதும் குழந்தையின் சின்னஞ்சிறு வாழ்வில் இடங்கொள்ளலாகாது.

∴ ∴ ∴

சில பெற்றோர்கள் மாலையில் பள் ளிக்கூடத்தினின்று திரும்பிய பின் னர் உடனே படிப்பதற்கே உட் கார வைத்துவிடுவார்கள். இது பெரும் பிழை; குழந்தைகள் தாரா ளமாக விளையாடவேண்டும். மாலை வேளைகளில் குழந்தைகள் பதுமை கள் போல் ஓரிடத்தில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தால் அவர் கள் பேதையர்களாக மாறிவிடு வார்கள். எப்போதும் படித்துக் கொண்டிருப்பதால் குழந்தைகள் மேதாவிகளாக விளங்குவார்கள் என்று பெரியவர்கள் ஒருபோதும் நினைக்கக்கூடாது. குழந்தைகள் அவசியம் விளையாட வேண்டும். விளக்கேற்றிய பிறகுதான் படிக்க வேண்டும்.

∴ ∴ ∴

சில தாய்மார்கள், தன் பிள்ளை வெளியே எங்கும் சென்று விளையாடினால் கால் கை ஒடிந்து போய் விடுமென்று அஞ்சி எங்கும் அனுப்பமாட்டார்கள். குழந்தை மீதுள்ள வாஞ்சையால் செய்யப் படும் செய்கை இஃதென்பது அவர்கள் கருத்து. ஆனால் இஃ தல்ல உண்மையான தாயன்பு. இது குழந்தைக்குத் தாயிடமுள்ள அன்பைக் குறைக்கச் செய்யும் தாயின் செய்கை! வெளியே சென்று விளையாடவேண்டுமென்ற ஆவலினால் தடித்துக்கொண்டிருக் கும் குழந்தையைப் "போகக் கூடாது. வீட்டிலேயே இரு!" என்று தாய் கண்டித்தால், அந் தக் குழந்தையின் சின்ன உள்ளம் நைந்து சிதறி விடுகிறதென்பதை தாய் உணரவேண்டும். அம்மாதிரி ஏமாற்றமும் துயரமுமேற்படும் போது குழந்தைக்குத் தன் தாயிட முள்ள வாஞ்சை குறைந்து போகி றது; வளர வளர வாஞ்சை குறைந்து வெறுப்பாக மாறிவிடுவ துண்டு. இதனால், இளைஞனாகித் தானே சம்பாதிக்கும் காலத்தில் அநேக குழந்தைகள் தங்கள் பெற்றோரைப் பேணுவதில்லை. பிஞ்சுமனதில் பதிந்துபோன வெறுப்பே அதன் காரணமென் பதை யறியாத பெற்றோர்கள் "எங்கள் பிள்ளை பொல்லாதது" என்று பிற்காலத்தில் புலம்புவ துண்டு. அதற்குத் தாங்களே காரணகர்த்தாக்களாக இருந்தோ மென்பதைப் பெற்றோர்கள் உணர்வார்களா? ஆனால் பின்னர் உணர்வதினால் லாபம் என்ன உண்டாகப் போகிறது? ஆதலால் 'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்' என்றபடி, சிறுவயதி லேயே சந்தர்ப்பம் வாய்க்கையில் குழந்தைகளின் மனப்போக்கை உணர்ந்து நமது அடக்குமுறை யைக் கையாளவேண்டும்;

# மேரி செயின்

துரைவேலன்



“கு... பாடிக் கொண்டிருக்கும் கோலம் மிகுந்த மயில் ஆடிக் கொண்டிருக்கும்” மலர் வனத்தில், தென்றல் உலாவி வர, தேன் மலர்கள் பூத்து நிற்கும் ஆற்றங்கரையோரங்களிலும், நீலத்திரைக் கடலில், நீலவான் தன் முகத்தின் கோலத்தைக் காணும் கடற்கரையிலும் — காதல் பிறப்பதைக் காணகின்றோம். ஆனால் மேரி செய்யன் எனும் காரனினத்தைச் சேர்ந்திருந்தவப் பெண் ஜப்பானிய ராணுவவீரன் சிமோரா காட்டர்யமா என்பவனிடம் தன் உள்ளத் வரை, நோக்கும் திக்கெல்
தைப் பறிகொடுத்தது மேலெல் லாம் புகைப் படலம், அடிக்கடி
சொன்ன இடங்களிலல்ல. கேட்கும் பீரங்கிச் சப்தம், வீதி
பாசறைப்போர்மெல்லாம் பிண களிலெல்லாம் ராணுவ நர்த்

தனம் இவைகள் அலங்கரிக்கும் பாழ்பட்ட ஒரு கிராமத்தில். தினம் அவ்வூரில் எதிரி ராணுவத்தினர் படையெடுக்கும் போக்கைக் கண்டு தன் தலைமைக் காரியாலயத்திற்கு அறிவிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சிமோராவிடம், அந்த ஊரின் 'முன்னாள் சுமங்லியாய்' இருந்து நிகழ்கால அகதியான மேரி செய்ன் காதல்கொண்டாள்

சிமோரா புத்தமதத்தைச் சார்ந்தவன். அஹிம்சை வாதியாகவும் புலால் உண்ணாப் பெரு சைவக்காரனாகவும் சிமோரா இல்லாவிட்டாலும் தான் புத்தனின் புனித பாதையிலே செல்லும் உண்மை பௌத்தன்தான் என்ற உறுதி அவனுக்கு உண்டு. சூரியக் குல திலகம் தன் ஜப்பானிய அரசனின் ஏவல்களைக் கூடப் புத்தர் ஆணைப்படிதான் மேற்கொள்வதாக நினைப்பவன்.

மேரிசெய்ன் கிருத்தவப் பெண். அதற்குச் சாட்சி சொல்லத்தானோ என்னவோ, அவளின் தந்தை ஜோஸப் பைன்பூரியோ, அவளுடைய உண்மையான இனப் பெயருக்கு முன் மேரி என்ற சொல்லை ஒட்ட வைத்தார். மேரி இருக்கும் ஊரில் இருந்த மாதா கோயில் இப்போது ஜப்பானியரின் குதிரை லாயமாக இருந்தாலும் அவள் தன்னை யேசுவின் பரம பக்தை என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படுவதில்லை.

சிமோரா 'காம்பி'லிருந்து காலை 7 மணிக்குப் புறப்பட்டுக் காவலுக்குச் சென்றால் மாலை 7 மணிக்குத்தான் திரும்புவான். இதுதான் அவன் தினசரி வேலை. பிறகு காப்டனுடன் அன்றைய வேலை சம்பந்தமாகப் பேசிவிட்டுக் கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொள்வான். விடிந்ததும் பழையபடி வேலைக்குப் புறப்பட்டுவிடுவான்.

காலையில் ராணுவ காம்பில் கொண்ட உணவோடு அவன் இருப்பதில்லை. அவர்களுக்குக் கொடுக்கப்படும் ரேஷனும் அவன் இடுப்பிலேயே இருக்கும். அதில் ஒரு பிளாஸ்க் நிறைய வெந்நீர், கொஞ்சம் சமைத்துக் காயவைத்த அரிசி, மீன். இவைகள்தாம். மணி 12 30 அடித்தது என்று அறிந்ததும் அந்த வெந்நீரில், அந்த அரிசி வற்றலைப் போட்டு, அதில் காய்ந்த மீனையும் கொஞ்சம் சேர்த்து உப்பைப்போட்டு நின்றபடியே தன் இடைவேளை உணவை முடித்துக்கொள்வான். மாலைக் காவல் முடிந்ததும் நேரே காம்புக்குத் திரும்புவான்.

ஒரு நாள் வேலையை முடித்துக்கொண்டு காம்பை நோக்கி நடந்தான் சிமோரா. வழியில் மேரியைப் பார்த்து மிரண்டான். மேரியும் திகைத்தாள், உள்ளங்கள் விரிந்தன. ஒன்றை ஒன்று கவ்வின. அவர்கள் காதலர் ஆகிவிட்டனர்.

மறுநாள் காவலிலிருந்து காம்புக்குப் போகிற வழியில் தன் காதலியின் இல்லத்தில் தங்கிவிட்டான். மணி ஒன்பதடித்ததும் தெரியாமல், அன்று காம்பிற்குக் காலங்

கடந்து திரும்பிய சிமோரா அன்று காப்டனிடம் அகப்பட்டுக்கொண்டு பட்டபாடு— அதை நினைத்தால் கூட அவனுக்கு உதறல் எடுத்தது.

அன்று முதல் விழிப்பாக நடந்து கொண்டான். சில சமயம் காவலைவிட்டு ஆறு மணிக்கே காதலியைப் பார்க்கப் போய்விடுவான். காலத்தில் காயபில் 'ஆஜர்' ஆகிவிடுவான்.

இடிந்து சிதைந்து, ஒரு சுவரோடு ஒட்டிக்கொண்டிருக்கும் கூரைதான் மேரியின் மாளிகை! மேரி தன் வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு மாளிகையின் முன்னே வந்து, காதலன் வழிமேல்விழி வைத்து, ஆவலோடு எதிர்பார்த்தபடி இருப்பாள். காதலன் வந்ததும் இருவரும் உலாவக் கிளம்பிவிடுவார்கள். இருவரும் நேரே சிமோராவின் காம்ப் வழியே செல்வார்கள். அவர்கள் கேளிக்கைகள் எல்லாம் இந்தக் குறுகிய காலத்திற்குள் முடிந்துவிட வேண்டும். காம்ப் கண்ணில் பட்டதும் காதலன் சிமோரா உடனே ராணுவ வீரன் சிமோராவாக மாறிவிடுவான். இருவரும் பிரிய மனமில்லாமல் பிரிவார்கள். இந்தத் திட்டத்தில் சில மாறுதல்களுடன் நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன.

அன்றும் காதலர்கள் கைகோர்த்துக்கொண்டு உலாவச் சென்றனர். மேரி ஏதேதோ கொஞ்சிக்கொஞ்சிப் பேசிக்கொண்டே சென்றாள். சிமோராவும் மகிழ்ந்தபடியே நடந்தான், சிறிது தூரம் நடந்திருப்பார்கள். மேரி சிமோராவைப் பார்த்துக் கெஞ்சினாள்.

"சிமோரா! நாம் இருவரும் ஒன்றாகத் தங்கி எத்தனை நாட்கள் ஆகிவிட்டன."

"ஆமாம் மேரி"

"நீங்கள் இன்றைக்கு அவசியம் என் வீட்டில் தங்கித்தான் போகவேண்டும்"

மேரி சிரித்துக்கொண்டிருந்த அவன் கையைப் பற்றி அழைத்தாள்.

சிமோரா சிந்தித்தான். முதன் முதலாக ஒரு நாள் அப்படித் தங்கிப் போனதில் சிமோராவுக்கு இரண்டு நாள் சிறை வாசமும் ஒரு குழந்தைக்குத் தந்தையாகும் வாய்ப்பும் ஏற்பட்டன. அந்த நிகழ்ச்சியை நினைத்துக்கொண்ட சிமோரா அவள் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் நடந்தான். காதலி மேரியோடு காலத்தைக் கழித்துவிட்டுக் காலம் கடந்து காம்பிற்குப் போனதினால் 'குரூப் காப்டன்' கொடுத்த முரட்டு உதைகளோடு சிறையில் தான் பட்ட துன்பமும் மேரி தன் வீட்டில் சிமோராவிடம் பெற்ற இன்பமும்—இருவரின் எண்ணங்களிலும் நிழலாடின. ஆனால் சிமோரா தன் அனுபவத்தைக் காதலியிடம் இதுவரை கூறவே இல்லை.

மேரி சிமோராவை அடிக்கடி தங்கச் சொல்லும் போதெல்லாம் சிமோரா சாக்

குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழித்து விட்டு நழுவி விடுவான். ஆனால் மேரி 'நாம இருவரும ஒன்றாகத் தங்கி எவ்வளவு நாள் ஆகிவிட்டன' என்று சொல்லும போது அவள முகத்தில் காணப் பட்ட உணர்ச்சிப் படப்பிடிப்பு சிமோராவை என்னவோ செய் தது. சிமோரா சிந்தித்தான்.

"தங்குவதா வேண்டாமா?"

சிமோரா இன்னும சிந்தித் துக் கொண்டிருந்தான்.

'என்ன நான் சொன்னது கேட்டதா?' என்றாள் மேரி. சிமோராவின் கலங்கிய முகத் தைப் பார்த்துக்கொணடே.

"ஊம்" என்று பெருமூச்சு விட்டான் சிமோரா.

"கொஞ்சம் நேரம் இருந்து விட்டுப் போய் விடுங்கள். காலத்துக்கு நீங்கள் காம்புக் குத் திரும்பிவிடலாம்"

"சரி" என்றான் சிமோரா.

மேரியின் மாளிகையில், இரண்டு உள்ளங்கள் இரண்ட றக் கலந்து விட்டன.

∴ ∴ ∴

மணி ஒன்பதடித்தும் காம் புக்கு இன்னும சிமோரா திரும்பாததை அறிந்த காப் டன் சிகேரிரிட்ஸ கண்களில் பொறி பறக்க இப்படியும் அப் படியும் நடந்து கொண்டிருந் தான்.

மணி பத்தும் அடித்தது. ஏழு மணிக்கே காம்பிற்குத் திரும்ப வேண்டிய சிமோரா அந்த உணர்வே இல்லாமல் மேரியின் மடியில் படுத்தபடி பேசிக் கொண்டிருந்தான்.

"சிமோரா. நமக்கு இன்னும் ஒரு மாதத்தில் ஒரு குழந்தை பிறக்கப் போகிறது" என்றாள மகிழ்ச்சியுடன் மேரி.

சிமோராவும் மகிழ்ச்சியடைந் தான.

மேரி அவனுடைய தலையை மெதுவாகக் கீழ வைதது விட் டுச் சூடாகத் தேநீர் கொடுத் தாள். சிமோரா அதைக் குடித் துக் கொண்டே சிந்தித்தான தன "குலமா மணிக்கு" என்ன பெயர் வைப்பது; அதை எந்த மதத்தில் சேர்பபது, மேரியைப் புதத மதததைத் தழுவும்படி கேட்கலாமா? அவள் தான ஏசு வின் புனித தன்மைக்கும் மறைந்த தன் தந்தைக்கும் மாசு கற்பிக்கத் தன்னால் முடி யாது என்று முன்னமேயே கூறி விட்டாளே!

சிமோரா தன் சிந்தனையை நிறுத்திக்கொண்டான். அவன் தறகாலிக குடும்பஸ்தன். இவற்றைப் பற்றியெல்லாம் பெருங் கவலை கொள்ளாமல் சமாளித்துக் கொண்டதில் வியபபில்லை. ஆனால் தனக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகி றது என்ற எண்ணம் அந்த ராணுவ வீரன் உள்ளத்திலும் ஒடு புத்துணர்ச்சியை ஏற்படுத் தியது.

எங்கோ மணி பத்தடித்தது. அதற்கு மேலும் ஒன்று அடித் தது. துள்ளி எழுந்தான் சிமோரா. காப்டனின் கோர முகம் உடனே தன் நினைவிற்கு வந்தது. மேரியிடம் விடை பெற்றுக் கொண்டு ஓடினான்.

ஓடும்போதே காப்டனுக்கு என்ன சொல்வது என்று

நினைத்துப் பார்த்தான். சிந்தனை வேகத்தில் தவறிப் பளளதில் விழுந்ததுகூட அவனுக்குத் தெரியவில்லை எழுந்து தன் கை கால்களில் பட்ட காயங்களைப் பார்த்தான. களத்தில் பட்டதைபபோல அந்தக் காயங்களைச் சட்டை செய்யாது ஓடினான்.

எதிரே சிகேரி ரிட்ஸோ நிற்பதைக் கண்டதும் நின்று ஒரு 'சல்யூட்' அடித்தான.

"ஏன் இவ்வளவு நேரம்"

சிமோரா இதறகுள் சிந்தித்து ஒரு முடிவிறகு வந்திருந்தான்.

"இன்று ஒரு ஐந்தாம் படையாள் வந்தான அவனுடன போரிட்டு அவனைக் கொன்று விட்டு வருகிறேன்" என்று உளறினான்,

ஐந்தாம் படையாள் என்றதும காப்டன் துள்ளிக் குதித்தான். கொன்று விட்டதாகக் கேட்டு அவன் கோபம் தணிந்தது. நல்ல வேளையாக அன்றைய கண்டத்திலிருந்து அவன் தபபினான.

ஃ ஃ ஃ

திருமதி சிமோரா மேரி செய்ன் அழகில் மயங்கிய கோமவுங் (பர்மியன்) அவளை வளையமிட்டான். ஆனால் அவள் அவன் ஆசைக்கு இணங்கவில்லை. கோமவுங் மேரியைப் பலாத்காரம் செய்யவும் முடியாது. சிமோராவுக்குத் தெரிந்தால் தனக்கு அன்றோடு வாழ்வு முடிந்து விடும் என்றும் தெரியும். சிமோராவிடம் அவனுக்கு அவ்வளவு பயம்.

கோமவுங், பொறுமையால் ஒரு சூழ்ச்சி செய்யத் திட்டமிட்டான. ஆனால் அதில் சறறு சிரமமும் இருந்தது. மேரி அப்போதுதான ஒரு ஆண் குழந்தையைப் பெறறிருந்தான். இவன் அதிர்ஷ்டமோ. என்னவோ. மேரியின் 'பிள்ளைக்கலி தீர்க்கவந்த அந்த இன்னமுது' 'ஐந்தெழுத்துப் பாவனையும' அப்படியே சிமோராவை உரித்து வைத்திருந்தது.

கோமவுங், அக்குழந்தைக்கு ஒரு சிறிய சட்டை தைத்துக் கொணடுபோய் மேரியிடம் காட்டித் தனக்கு அவள்மேல் எந்தவித கெட்ட எணணமும் இல்லை என்று நிரூபித்தான். பேதை மேரியும அதை நம்பி அதைத் தன 'செல்வ'த்திறகும் போட்டு அழகு பார்த்தாள்.

அன்று சிமோரா போகும் போதும தன குலக்கொழுந்தைப் பார்த்துப் பரவசமானான். அகறகு ஒரு முத்தமிட்டு விட்டுத் தன் காம்பிற்குத் திரும்பினான். அங்கே கோமவுங் தன காப்டனின் முன் நிறபதைப் பார்த்தான். சிகேரி ரிட்ஷோவின் கண்கள் சிவந்து, பாய்கின்ற சிங்கம் போல இருந்தான. சிமோராவுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

அவன் அப்படியே நின்றான்.

"நீ சொல்வது உண்மை தானா?" — இது காப்டன் கோமவுங்கைக் கேட்ட கேள்வி.

"ஆம், நீங்கள் வந்தால் குழந்தையைக் கூடக் காட்டுகிறேன;' என்றான் அப் பாதகன்.

"சரி வா" என்று அவனுடன் கிளம்பினான்: விஷயம் புரிந்துகொண்ட சிமோரா பலியாகப் போகும் ஆட்டுக்கடாப் போல் நின்றிருந்தான்.

"அட பன்றியே, என்னைத் தொடர்ந்து வா" என்று அதட்டினான் சிமோராவைக் காப்டன. கோமவும் முன்னே செல்லக் காப்டன இடையே செல்ல, 'படீர் படீர்' என இதயம் அடித்துக்கொள்ளச் சிமோரா பின் தொடர்ந்தான்.

ஃ ஃ ஃ

ஜப்பானிய பர்மாவில் வெகு விநோதமான காலம் அது. வெள்ளைக்காரனின் அடையாளமாக எதைக் கண்டாலும் ஐந்தாம் படையினரின் சின்னமாகக் கொண்டனர் ஜப்பானியர். கோட்டு, கால் சட்டை, தொப்பி, இவைகளுடன் எந்த துரையும்' வெளியே வர வேண்டுமானால் தன் வீட்டில் நான் திரும்ப மாட்டேன் என்று சொல்லிவிட்டுத்தான் வரவேண்டும்.

சூரியக் குலம் உயர ஜப்பானியப் படையில் சேர்ந்த கேசரி ரிட்ஸோ இதுவரை புண்களைப் பற்றி நினைத்தே கிடையாது. எனவே சிமோரா செய்தது தம் சட்டப்படி மகாபாதகம். அதுவும் தம் எதிரியான ஆங்கிலேயனின் மதத்தைச் சேர்ந்தவளிடமா தொடர்பு கொண்டான்! கோமவும் நல்லநேவளையாக இதை இப்போதே சொன்னான், அந்தச் சூனியக்காரி கட்டாயம் ஐந்தாம படையாகவே இருக்கவேண்டும். அவளுடன் இவன தொடர்பு கொண்டது கொலைத் தண்டனைக் குரிய குற்றம். இதைப் போலப் பல அப்பாவி கரன் இனத்துக் கிருத்தவர்களை உள்வாளிகள் என்று கொன்றுதீர்த்தது காப்டனின கிளைவிற்த வந்தது. அவர் திரும்பினார் சிமோரா நடுநடுங்கினான்.

ஃ ஃ ஃ

இங்கு மேரிசெய்ன் தன் குழந்தையுடன உறங்கிக் கொண்டிருந்தாள். காபடன் சிக்கேரி ரிட்ஸோ அந்தக் காட்சியைக் கண்டதும் ஒரு கணம் கண்ணை மூடிக்கொண்டார். அந்தக் குழந்தையின 'முகச் சாயல். அப்படியே சிமோராவை உரித்து வைத்திருப்பதைப் பார்த்தான், அவன் பற்கள் 'நறநற' வெனச் சப்தமிட்டன. கரங்கள் வாளைத் தடவின.

சிமோரா தன் குலமா மணியையும் தன் காதலி மேரியையும் பார்த்தான். உடனே அவர்கள் முறைப்படி தன் தலையைப் பூமியில் படும்படி காப்டனை வணங்கினான்:

காப்டன் கேட்டான்:

"இது உன் குழந்தைதானா?"

நிமிர்ந்த சிமோரா 'ஆம்' என்று தலையை அசைத்தான். 'படீரென்று' ஒரு அறை கன்னத்தைத் தாக்கிற்று.

இந்தக் களேபரத்தில், மேரி தன் குழந்தையை வாரியணைத்துக் கொண்டு எழுந்தாள். எதிரே தன் காதலனுடன் கோமவுங்கும், மற்றொரு ஜப்பானிய ராணுவ வீரனும் நிற்பதைப் பார்த்துத் திடுக்கிட்டாள்.

காப்டன் தன் இரும்புக் கரங்களை நீட்டி அந்தக் குழந்தையை ஏதோ கத்தரிக்காயைப் பிடுங்குவதுபோல், பிடுங்கி, அப்படியே சுசுக்கச் சிமோராவின் முகத்தில் அடித்தான்.

மேரி கதறினாள், கோமவுங் இதை எதிர் பார்க்கவில்லை. சிமோரா கடைசித் தடவையாகத் தன் காதலியையும் சொர்க்கம் அடைந்த தன மாணிக்கத்தையும் பார்த்தான்.

காப்டன் ஒன்றும் நடக்காதது போல் திரும்பினான். கோமவுங்கும், சிமோராவும் அவனைப் பின் தொடர்ந்தனர்.

"சிமோரா இனி நீ அவளை மறந்துவிட வேண்டும் தெரியுமா?" என்று அதட்டினான்.

"இல்லை நான் அங்கே தலையைக்கூடக் காட்ட மாட்டேன்" என்றான் மாஜி காதலன் சிமோரா.

| பொன்னி | |
|---|---|
| சந்தா விவரம் | |
| உள்நாடு | |
| ஆறுமாதம் | 3-0-0 |
| ஆண்டு | 6-0-0 |
| வெளிநாடு | |
| ஆறுமாதம் | 3-6-0 |
| ஆண்டு | 6-12-0 |

காதலன் சிமோராவின் கடைசி வார்த்தைகளை மேரி கேட்டாள். அவள் உள்ளம் துடி துடித்தது. அழுதாள், பதறினாள் தன் ஆத்திரம் தீரத் திரும்பிப் பார்த்தபடியே சென்ற கோமவுங்கைக் கண்டபடி வைதாள். பர்மாவிலேயே தோன்றிய மற்றொரு இனப் பெண்ணை இப்படிக் கெடுத்த பாவம் பர்மியர்களை ஒருக்காலும் சும்மா விடாது என்று சாபமிட்டாள்.

∴ ∴ ∴

அதன் பலன்தானா இன்றைய கரன் பர்மியர் போராட்டம்? அதென்னவோ நமக்குத் தெரியாது என்று பலர் கூறுகின்றனர். ஆனால், மேரி செய்னின் காதலைப் போன்று பல கரன் இனப் பெண்களின் காதலும் உயிரும் பர்மியர் வஞ்சனையால் அழிக்கப்பட்டன என்பது என்னவோ உண்மைதான் என்கின்றனர் கரனியரோடு நெருங்கிப் பழகிய மற்றவர்.

[பர்மியக் கதையொன்றைத் தழுவியது]



# வேண்டாத ஆசை

துரை

[காற்றாடிஎன்பது சவுக்குமரத்திற்கு வேறொருபெயர்]

காற்றி லாடும் காற்றாடி
கருத்தில்தளிர்த்த தொரு நினைவே
வேற்றுமரங்கள் போல் பசிய
விரிந்த இலைகள் வேண்டுமே.





காட்டில் திரிந்த இடைச் சிறுவர்
கண்டார்ஆட்டின் குளகு என்றே
ஈட்டிபோன்ற கழைக்கோல் கொண்டு
எட்டி எட்டிப் பறித்தனரே.

காற்றி லாடும் காற்றாடி
கருத்தில்விளைந்த தொரு நினைவே
சேற்றில் தழைக்கும் கரும்புபோல்
தித்திப் பெனக்கும் வேண்டுமே.





நாட்டில் உழைக்கும் தொழிலாளர்
நல்லவெல்லம் கிடைக்கு மென்றே
மாட்டி ஆலை தனிலிட்டே
வருத்திக் கசக்கிப் பிழிந்தனரே.



காற்றி லாடும் காற்றாடி
கருத்தில்பூத்த தொரு நினைவே
தோற்றமிக்க பூங் கொத்துத்
தூங்கும் கிளைகள் வேண்டுமே.

நேசப் பந்தும் மணியணியும்
நேரார் நகர மங்கையர்கள்
வாசமலர்கள் வேண்டு மென்றே
வந்தார் கொய்து புனைந்தனரே.





காற்றி லாடும் காற்றாடி
கருத்தில்கனிந்த தொரு நினைவே
ஆற்றினருகில் செங்நெல் போல்
அரிய கதிர்கள் வேண்டுமே.

வீட்டில் அறங்கள் புரிகின்ற
வேளாண்மன்னர் அறுத் தறுத்துக்
காட்டைப்போரும் களமும் நிறை
கழனி யாக்கி விட்டனரே.



காற்றி லாடும் காற்றாடி
கருத்தில் அறிவு வீசிற்றே
வேற்றுப் பொருளில் விருப்பெதற்கு?
வேண்டும் இயற்கை வாழ்வதுவே.

# உங்களுக்குத் தேவையான புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| வீடும் விளக்கும் | .... | சுகி | அணா 8 |
| குறள் கொடுத்த குரல் | .... | டி. கே. சீனிவாசன் | அணா 8 |
| கிளிக்கூண்டு | .... | தில்லைவில்லாளன் | அணா 10 |
| மதம் அவசியமா? | .... | கட்டுரைகள் | அணா 12 |
| கடவுள்படும்பாடு | .... | இமயவரம்பன் | அணா 8 |
| கண்ணீர்க்கோட்டை | .... | தில்லைவில்லாளன் | அணா 6 |
| கொய்யாக் காதல் | .... | நாரா நாச்சியப்பன் | அணா 12 |
| மலரும் புனலும் | .... | மு. அண்ணாமலை | அணா 10 |
| இன்பக் கனவு | .... | இராதாமணாளன் | ரூ 0-12-0 |
| அஞ்சலி | .... | தில்லைவில்லாளன் | ரூ 0-4-0 |
| இராவணன் | .... | ஏ. கே. வேலன் | ரூ 1-12-0 |
| சூறாவளி | .... | ,, | ரூ 1-0-0 |
| இன்ப நினைவு | .... | அகிலன் | ரூ 1-0-0 |
| அன்பின் உருவம் | .... | மாயாவி | ரூ 1-8-0 |
| இலட்சியப்பாதை | .... | க. நாராயணன் | ரூ 2-0-0 |
| வருங்காலத் தமிழகம் | .... | கா. அப்பாத்துரை | ரூ 0-12-0 |
| சங்க இலக்கிய மாண்பு | .... | ,, | ரூ 0-6 0 |
| காதல் உள்ளம் | .... | சாமி பழனியப்பன் | ரூ 0-5-0 |
| பாரதி யார்? | .... | ,, | ரூ 0-2-0 |
| சவுக்கடி தர்பார் | .... | நாரா நாச்சியப்பன் | ரூ 0-6-0 |
| மூன்றாவது இளவரசன் | .... | ,, | ரூ 0-2-0 |
| குழந்தைப் பாட்டு | .... | ,, | ரூ 0-2-0 |
| சாம்பு | .... | வளர்மதி | ரூ 0-2-0 |

தபாற் செலவு தனி; விற்பனையாளருக்குக் கழிவு உண்டு; ரூ 5/-க்கு மேற்பட்ட ஆர்டருக்குத் தபாற் செலவு தள்ளுபடி செய்யப்படுகிறது

**செந்தமிழ்ப் பதிப்பகம்; த. பெ. 39; புதுக்கோட்டை**

தாமஸ் ஹார்டியின் கதையைத் தழுவி எழுதப் பெற்றது.

# அனாதை

○○○○○○○○○○ மு. அண்ணாமலை ○○○○○○○○○○

"அண்ணா அடுத்த ஊரில் ஒருவனை பட்டப்பகலில் புகுந்து திருடினானும் சரியான உதை தெருவிலே கட்டி வைத்து அடித்தார்களாம்" என்று சொல்லிக்கொண்டே வந்தார் ஒரு இளம கிறிஸ்தவப பாதிரி

"பாவம் பரமபிதா, பாபாத்மாக்களை ரட்சிக்க வேணடும்' என்று சொன்னான் அண்ணன் காரனை அவனும் ஒரு பாதிரி தான். கையிலே பைபிள் புத்தகம் இருநதது கண்ணுக்கு மூக்குக் கண்ணாடி. எபபோதும சிந்தனையில் ஆழ்ந்த முகம்.

"அண்ணா அது ஒருவேளை நம் அப்பாவாக இருந்தால்..." என்றான தமபி அண்ணன் அவசரமாகப 'பார்த்து வரச் சொல்' என்று சொல்லி விட்டுத் தம்பியைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தான்; மணியடிக்கும் அந்தோணிச்சாமி அனுப்பப்பட்டான்.

அவர்கள் இருவரும் உடன் பிறந்த அண்ணன் தம்பிகள். ஏழையாகப் பிறந்து, மிகக் கஷ்டப்பட்டு, ஏதோ கல்வி கற்றுத் தங்களைப் பாதிரி வேலைக்குத் தகுதியாக்கிக் கொண்டனர். ஆண்டவன் திருமுன்னிலையில் அவர்கள் தொண்டுசெய்யத் தகுதியுள்ளவர்கள் என்ற 'சர்டிபிகேட்" 'வயிற்றுப் பசியால் இனிக் கவலைபபட வேணடியதில்லை' என்று உறுதி கூறிற்று. வயிற்றுக்கு மேலாக இப்பொழுது 'கௌரவம' என்று ஒன்றிருக்கிறதே, அதைத் தேடி அவர்கள் அலையத் தொடங்கினார்கள். பெரிய பெரிய பிரபுக்களோடெல்லாம் அவர்கள் பழகினார்கள். விருந்துகளிலெல்லாம அவர்கள் கலந்துகொணடனர். ஆனால் அவர்களுக்கு அகௌரவமெல்லாம் அவர்களைப் பெற்றெடுத்த தந்தையால் தான் வந்துகொண்டிருந்தது. அவன் ஒரு பெரிய குடிகாரன். யாரோ ஒருத்தியை இழுத்துக் கொண்டு ஊர் ஊராகத் தெருத் தெருவாக, அலைந்தான். ரயில்வே ஸ்டேஷன் பஸ்ஸ்டாணடு முதலிய மக்கள் புழங்கும் இடங்களிலெல்லாம் அவன் குடும்ப சமேதராகக் காட்சி யளித்தான். காரிலோ, ரயிலிலோ அவசரமாக ஏறப் போகிற பிரயாணிகளின் முன்னால் திடீரெனத் தோன்றி அவர்கள் காலில் விழுந்து கட்டிப் பிடித்துக்கொண்டு பிச்சை கேட்பான். 'சில்லரை [illegible] உழைப்பணத் [illegible] கொடுத்த

வர் அவள் காலைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதால் தான் மீதி கிடைக்கும். இல்லாவிட்டால் முழுவதையும் தருமக் கணக்கில் எழுதிக் கொள்ள வேண்டியதுதான். இப்படிப்பட்ட ஒரு பிச்சைக் காரனை—குடிகாரனைத் தங்கள் தந்தை என்று சொல்லிக் கொள்ளவோ, பெருமைப் படவோ அந்த இளம் பாதிரிகளால் முடியவில்லை. அவர்கள் அப்பனுக்கோ அவர்கள் போடும் சாப்பாட்டைச் சாப்பிட்டுக்கொண்டு காலத்தைக் கழிக்க விருப்பமில்லை. தன் னிச்சைப்படி திரியத்தான் அவன் விரும்பினன். 'கௌரவம்' என்ற வார்த்தையைப் பற்றி அவன் கவலைப்படவில்லை; அது மனிதனுக்கு அவசியமில்லை என்று நினைத்திருக்கலாம். ஆனல் அவனது குமாரர்களோ 'அதுவே' சாட்சாத் மந்தரம் என்று நினைத்தார்கள். வெள்ளித் தட்டிலே சாப்பிட அவனுக்கு விருப்பமில்லை. வெயிலிலே மணசட்டியைத் தூக்கிக் கொண்டு திரியத்தான் விரும்பினன். வீட்டிலே கிடக்கும் மெத்தையை விட்டுவிட்டு, தெருவிலே, பலர் துப்பிய எச்சிலிலே அவன் புரண்டு கொண்டிருந்தான். இன்பமும் வாழ்வும் தான் குறிக்கோள்கள் என்ருல் அவற்றை அடையும் வழிகள் எப்படியிருந்தால் என்ன என்று அவன் ஒரு எழுத்தாளனுய் இருந்தால் பேசியிருப்பான். மனத்தைப் பொறுத்துத்தானே அவ்விரண்டும் கிடைக்கின்றன? மனந்தானே சிருஷ்டி கர்த்தா! வாழ்வே மனப்பழக்கம்தான!

ஆண்டவன் திருமுன்னிலையில் பணிசெய்து கொண்டிருந்த அந்த இளம் பாதிரிகள் தங்கள் தந்தையைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் நரகவேதனைக்குள்ளானார்கள். எத்தனையோ பேருக்குச் சுவர்க்கச்சீட்டுக் கொடுக்கும் அவர்களுக்குப் பரமபிதா வழியொன்றும் காட்டாமல் கணணை மூடிக்கொண்டே இருந்தார்.

∴ ∴ ∴

வெளியே போயிருந்த தம்பி மீண்டும் அண்ணனிடம் ஓடி வந்தான். "அண்ணு, அது நம் அப்பாவேதான. மூர்ச்சையாகித் தெருவில் கிடக்கிருராம். மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனராம். இப்பொழுது நாம என்ன செய்வது?" என்று சொன்னுன். அவனது பேச்சிலே துக்கமும், பதற்றமும் கலந்திருந்தன.

"என்னசெய்வது?—ஒன்றும் செய்ய வேண்டாம்; கெட்டுக் கெட்டு வேண்டுமானுலும் போகட்டும்" என்ருன் அண்ணன் அலுப்புடன். சிறிது நேரம் கழித்து, "ஒரு மனிதனின் கௌரவம் அவனைப் பொறுத்து மட்டும் உயர்ந்து விடுவதில்லை; அது அவனது தாய், தந்தை, குடிவழி, அண்ணன் தம்பி, தங்கை அத்தனை பேரையும்பொறுத்திருக்கிறது. அடிபட்டுத் 'திருடன்' என்ற பட்டத்தோடு கிடக்கிற ஒரு

வனை எப்படித் தந்தை என்று வெட்கமில்லாமல் சொல்லித் தூக்கிக்கொண்டு வருவது? ——வேண்டாம், தம்பி வேண்டாம். அதைப் பற்றியே சிந்திக்காதே. ஏசுநாதன் காலடியிலே வீழ்ந்து அழுவதைத் தவிரச் செய்வதொன்றும் இல்லை.''

கருணாமூர்த்தியின் சேவகர்கள் கருணையை மறந்து விட்டனர்; கௌரவம் உயிர்ப்பாசத்தைக் கொன்று விட்டது!

அப்பொழுது 'அண்ணா' என்று கூப்பிட்டுக்கொண்டே அவர்களது தங்கை மேரி வந்தாள். சரியான வயது. உடையலங்காரத்தில் அவளுக்கு அதிக கவனம் என்பதை அவளது நடையுடை பாவனைகள் காட்டின அவள் கல்லூரியிலே படித்துக்கொண்டிருந்தாள். விடுமுறைக்காக வந்திருந்தாள்.

''அண்ணா ஆர்தர் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்; நான் போகட்டுமா?'' என்று கேட்டாள்.

"சரி நீ போம்மா" என்று இருவரும் ஏக காலத்தில் சொல்ல வாயெடுத்தனர். கொஞ்சநேரம் அவள்போவதை இருவரும் கவனித்துக் கொண்டிருந்தனர்.

"அப்பாவின் விஷயமாக எதையும் அவள் காதில் போடக்கூடாது. இந்த இளமைக்காலத்தில் இது போன்ற மனத் துன்பங்களை அவள் அடையக்கூடாது'' என்றான் மூத்தவன்.

'ஆர்தர் அவளைத் திருமணம் செய்துகொண்டால் நமக்கு ஒரு பெரிய கவலை ஒழிந்து போகும்''

''ஆர்தர் பெரியபணக்காரன். அவன் ஏழைபாதிரிகளின தங்கையை மணந்துகொள்ளத் தயாராக இருந்தால——''

''எல்லாம் மேரியின் சாமர்த்தியத்தில் இருக்கிறது. இளமைக் காலத்திலே ஆண்களுக்குச் சரியான விதான புத்தி இருக்காது''

"ஒரு அறிவாளி" ஒரு அழகன், ஒரு பணக்காரன் —இந்த மூன்றுபேரில் தங்கை யாரை விரும்புவாள்?" என்று கேட்டான் மூத்தவன்.

''யாரை விரும்ப வேண்டும் என்றுகேள் அண்ணா'' என்று அடித்ததுபோல் கேள்விக்குத் திருத்தம் நல்கினான் தம்பி. மேலும் அவன் கூற ஆரம்பித்தான் அழகு கண்ணுக்குத்தான் விருந்து. இளமை அதில்தான் இருக்கிறது என்று இளமை தப்புக் கணக்குப் போடுகிறது—அண்ணா அழகு கைக்கு எட்டியவுடன் சில நாளில் சலிப்புத் தட்டிப் போகும் வாழ்நாள் முழுவதும் வேண்டியதைப் பற்றியல்லவா நாம் பேசுகிறோம் அறிவைப் பற்றிக் கேட்கிறாயா? அறியாதவர்கள் தான் அறிவாளியைப் பற்றித் தோத்திரம் செய்வார்கள். நீயுமா அண்ணா அதில் லாபமிருக்கிறது என்று நம்புகிறாய்? ஆளிறந்த பிற்பாடு தான் அவனது அறிவைப் பற்றி மனித சமுதாயம் நினைக்கும். முடிவாகச் சொல்லுகிறேன் அண்ணா பணந்தான் பைபிள்!''

யோசனையில் ஆழ்ந்திருந்த அண்ணன் சற்று தம்பியை நிமிர்ந்து பார்த்தான். "ஆமாம் அண்ணா, நான் உலக நிலையைத் தான் சொல்லுகிறேன்." என்று தம்பி தான் சொன்ன விஷயத்தை நிலைநிறுத்தும் தோரணையில் பேசினான்.

"அதெல்லாம் போகட்டும்; முதலில் அப்பாவை என்ன செய்வது——? அமெரிக்காவுக்கு அனுப்பி விட்டால் என்ன?" என்றான் அண்ணன்.

"ஆம் அண்ணா; அதுதான் சரியான யோசனை. அங்கு போய் எப்படிக் கூட்டிச்சுவராய்ப் போனாலும் போகட்டும்" என்றான் இளையவன். இருவரும் அப்படியே பேசிக்கொண்டு சற்று உலாவி வரப் புறப்பட்டார்கள்.

∴ ∴ ∴

பெரிய பாலம். அதன் கீழே ஆறு அலறியபடி ஓடிக் கொண்டிருந்தது. அந்தப் பாலத்தில் அண்ணனும் தம்பியும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அந்தி நேரம். மறுநாள் விடிந்தால் அமெரிக்காவுக்குப் பிரயாணம். அதன் வழியே எதிர்பாராத விதமாக அவர்களது அப்பன் கைக்கம்பைச் சுழற்றியபடி வந்து கொண்டிருந்தான். அவன் அவர்களிருவரையும் ஏறிட்டுப் பார்க்கவில்லை. பாலத்தின் வேறுபக்கம் பார்த்துக் கொண்டே நடந்தான். இளையவன் அவனது கைக்கம்பைப் பிடித்து நிறுத்தி, "எங்கே போகிறாய்?" என்று கேட்டான். மூத்தவனும் அருகில் சென்றான்.





"என் மகளின் கல்யாணத்திற்குப் போகிறேன்."

"உனக்கு எப்படித் தெரியும்?"

"எல்லாம் தெரியும்."

"நீ போகக் கூடாது; அங்கே நீ கண்டிப்பாய்ப் போகக் கூடாது" என்று இளையவன் கட்டளையைக் கோபத்துடன் பிறப்பித்தான்.

"என்னைத் தடுக்க நீங்கள் யாரடா? சுண்டைக் காய்களா விலகிப் போங்கள். இல்லாவிட்டால் மண்டையை உடைத்து விடுவேன்" என தடியைக் காட்டியபடி பேசினான் அப்பன்.

"கல்யாணத்தைக் கெடுக்க வேண்டுமென்ற எண்ணமா? எங்களை அவமானப்படுத்தப் போகிறாயா? நீ அங்கே கண்டிப்பாய்ப் போகக்கூடாது"

"நீ போனால் ஒரு பிச்சைக்காரன் மகளையா ஆர்தர் மணந்து கொள்கிறான் என்று பலரும் ஏளனமாகப் பேசுவார்கள். உன் மகளையாவது நல்ல இடத்தில் வாழவிடு."

"யாரடா பிச்சைக்காரன்? பிச்சைக்காரப் பயல்களா, என் மகள் கல்யாணத்திற்கு நான் போகக் கூடாதோ? அப்பனில்லாத கல்யாணம் கெட்டால் தான் என்ன?"

இளையவனுக்குக் கோபம் வந்துவிட்டது. "இந்தக் கிழிந்த 'கோட்'டுடனா கல்யாண வீட்டில் நுழையப் போகிறாய்?" என்று சொல்லிக் கொண்டே கிழிந்திருந்த கோட்டை நீளக் கிழித்து விட்டான். அப்பன் ஓங்கிக் கன்னத்தில் 'பளார்' என்று ஒரு அறை கொடுத்தான். இளையவன் திருப்பி அடித்து விடாதபடி மூத்தவன் பார்த்துக் கொண்டான்.

இளையவன் எதிர்பாராத தாக்குதலால் ஒன்றும் புரியாமல் நின்றான். அதற்குள் அப்பன்காரன் நாலைந்தடி நடக்க ஆரம்பித்தான். இருவரும் அவனைப் போகவிடாதபடி பரபரவென்று இழுத்துக் கொண்டு

வந்து அந்தப் பாலத்தில் உட் தண்ணீரில் எறிந்துவிட்டான்.
காரவைத்தார்தா இதைப் பார்க்கத் தம்பிக்குக்
"உனக்கு என்ன வேண் கொஞ்சமும் பொறுக்க முடிய
டுமோ அதை வாங்கிக் வில்லை. 'பளீர் பளீர்" என்று
கொண்டு போய்விடு" என் ஒரு கன்னத்தை மாற்றி மற்
ருன் இளையவன். ஞெரு கன்னத்தில் அறைந்
"இந்தா இந்த ரூபாய் நோட் தான. அப்பன் பாலத்தில்
டுக்களை வைத்துக்கொள்; நின்றுகொண்டு தடியால்
இன்று புறப்படுகிற கப்பலில் அடிக்க ஆரம்பித்தான. மூத்
அமெரிக்காவுக்குப் போய்விடு" தவன் அப்பனின் காலைப்
"என்னை மேல்பார்க்கிறீங்கள்" பிடித்துக் கட்டிக் கொண்டான்.
யாரடா?" என்று சொல்லிக் அவன் காலை உதறிக்கொள்ள
கொண்டே அந்த நோட்டுக் முயற்சிக்கையில் கால் தவறி
களை அப்பன் காரன் வாங்கி ஆற்றிலே விழுந்துவிட்டான.
னை மூத்தவன் நோட்டுக் அண்ணன் தம்பி இருவருக்கும்
களைக் கொடுத்தான்; ஒரு ஒன்றும் புரியவில்லை. இருவ
வேளை அவன் திரும்பிவிடு ரும் ஆற்றின் கரையோரமாக
வான் என்ற நம்பிக்கையோடு. ஓடி மெதுவாக இறங்கி நடக்க
ஆனல் வாங்கின நோட்டுக் ஆரம்பித்தார்கள். ஆற்று நீர்
களைச் சுக்குநூறாக்க கிழித்துத் சல சல வென ஓடிக்கொண்டி
ருந்தது. மங்
கிய இரு
ளிலே எது
வும் சரியாகப்
புலப்பட
வில்லை. மூத்
தவன் முகத்
தில் பிணக்
களை படர்ந்
தது. இளைய
வன் தேம்
பித் தேம்பி
அழ ஆரம்பித்
தான.

"அண்ணா
அப்பா இனி
வரமாட்டார்.
நாம் தான்
கொலையாளி
கள். அநியாய
மாகக்
கொன்றுவிட்
டோமே!"

## இளைத்த உருவம்!



"எத்தனையோ பிறவி எடுத்தெடுத்தே இளைத்தேன்......
சரி...கம...ப" —தா. இமுத்து




என்று சொல்லி விம்மி விம்மிச் சிறு குழந்தை போல் அழுதாள். மனித இதயங்களைப் பாச உணர்ச்சி திணடிற்று.

"என்ன இருந்தாலும் நம்மைப் பெற்றெடுத்த தந்தையல்லவா! இனி நாம் காணப் போகிறோமா?"

நெடுந் தூரம் ஏதாவது புலப்படும் என்று ஆற்றோரமாக நடந்து கொண்டே வந்தவர்களுக்கு ஒன்றுமே புலப்படவில்லை.

ஃ ஃ ஃ

"அண்ணா அப்பாவுக்காக ஒரு புதுக் 'கோட்'டைத் தைத்து வைத்திருக்கிறேன். ஒரு கைத்தடி ஒன்று புதிதாக வாங்கியிருக்கிறேன். அப்பா அமெரிக்கா போவதாகச் சொன்னீர்களல்லவா? இவற்றைக் கொடுத்தனுப்புங்கள்." என்றாள் மேரி.

'கொடுத்தனுப்புவோம்' என்று சொன்னான் அமைதியாக. அதற்குமேல் அவன் விரிவாக எதையும் பேச முடியவில்லை மேரி திருமண மகிழ்ச்சியில் நீர் கொட்டுவது போல் பேசிக்கொண்டே இருந்தாள். மகிழ்ச்சிக் கூதத்தில் பேச்சுக்களுக்கு அளவிருக்குமா என்ன?

"அப்பாவை நான் பார்க்க வேண்டும், அண்ணா. அப்பா அமெரிக்கா போய்விட்டால் எவ்வளவு ஆண்டுகள் கழித்துப் பார்க்கவேண்டியிருக்குமோ யாருக்குத் தெரியும்?"

"அவரை நான் இனிக் கண்டால் கட்டாயம் கூட்டிக்கொண்டுவந்து காண்பிக்கிறேன்" என்றான் மூத்தவன். அவன் கண்களில் நீர் அரும்பிற்று. தங்கைக்குத் தெரியாமல் துடைத்துக் கொண்டான்.

"அண்ணா நேற்று சாயந்திரம் நானும் ஆர்தரும் ஆற்றங்கரையோரம் உலாவிக்கொண்டிருந்தோம். யாரோ என்னை 'மேரி மேரி' என்று அழைப்பதுபோல் இருந்தது. அது அப்பாவின் குரல் போலவே இருந்தது. "சுற்று முற்றும் கொஞ்ச தூரம் பார்த்தோம். ஒன்றும் தெரியவில்லை"

மூத்தவனும் இளையவனும் பேசாமல் இருந்தார்கள்.

அப்பொழுது ஒரு ஆள் அங்கே ஓடிவந்தான். 'அடுத்த கிராமத்திலே ஒரு பிணம் ஆற்றிலே அடித்து ஒதுக்கப்பட்டுக் கிடக்கிறது, அதற்கு ஈமக்

ஆப்டோன் & லைன்—
பிளாக்
சைன் போர்டு
ரப்பர்ஸ்டாம்பு & சீல்டு
செய்யுமிடம்
S.R.ப்ராஸஸ்
சின்னக்கம்மாளத்தெரு-திருச்சி.

கடன் செய்யவேண்டும்; அதற்கு நீங்கள்—"

"அனாதைப் பிணமா? அடையாளம் ஒன்றுமில்லையா?" என்று கேட்டான் அண்ணன் அவசரத்துடன்.

"ஆமாங்க. உடம்பெல்லாம் அடிபட்டுக் காயம். அனாதைதான். அரை வயதுக்குமேல் இருக்கும்" என்றான் வந்தவன்.

மூத்தவன் இளையவனைப் பார்த்தான். அவனால் ஒன்றும் பேச முடியவில்லை மூத்தபாதிரி தன்னுடைய கடனை அனாதைப் பிணத்திற்குச் செய்யப் புறப்பட்டான் இளையவன் அவன் நடப்பதைப்பார்த்துக் கொண்டே அசையாத மரம் போல் நின்றுகொண்டிருந்தான்.

# பொது மேடை

கரூர்
7-6-50

## ★ உற்பத்தி பெருகுமா?

'நாங்கள் தேர்தலிலே வெற்றி பெற்றால் தெருவெல்லாம் தேனும் பாலும் வழிந்தோடும்! நீங்கள் நடக்கும் பொழுது வேட்டியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டுதான் செல்லவேண்டும்!' என்று கூறி வோட்டுப் பெற்ற காங்கிரஸ் அன்று கொட்டுமுழக்கோடு எட்டு மாகாணங்களில் பவனி வந்தது. ஆனால் நடந்தது என்ன? பஞ்சம் பரதநாட்டியம் ஆட, பட்டினி பாட்டிசைக்க பசி பக்கவாத்தியம் வாசிப்பது தானே இன்றைய நிலை. இப்படிப் பட்ட நிலையில் உற்பத்தியைப் பெருக்குங்கள் இன்றேல் உருப்படுமா நாடு? இப்படி உபதேசம் செய்கின்றனர் ஆளவந்தார். உற்பத்தியைப் பெருக்கத் தயார்தான். ஆனால் வழி? உரிமை ஒருவனுக்கும் உழைப்பு அனைவருக்குமாக இருப்பது உலகின் முதல்வன் வகுத்த கட்டளை என்று ஊரிலே பெரிய மனிதர்கள் பேசும்போது யார் பெருக்குவது உற்பத்தியை? படித்து, பட்டம் பெற்றும் பாழும் நாட்டிலே வாழும் வகையின்றிப் பரரிகளாய்ப்போன பல்லாயிரம் பாட்டாளிகள் உழைப்புக்கு அஞ்சியா ஊர் கடந்து கடல் கடந்து சென்றனர்? உழைப்புக்கு இடமெங்கே இந்த நாட்டில்? செல்வவான் வீட்டுப் பிள்ளை செங்கரும்பின் வேர்ப்பகுதியை மென்று துப்புகின்ற நேரத்தில் சேரிமகன் கொழுத்தாடைத் துண்டிற்குக் கையேந்தி வருகின்றான்! நெய் வழியும் புதுச்சோறு நிலக்கிழவன் வீட்டுப் பானைகளிலே எஞ்சிக்கிடக்க, நிலம் திருத்தி, நீர் இறைத்து, பயிர்வளர்த்துப் பாதுகாத்த பழங்குடி மகன் படிக்குப்படி ஏறி இறங்குகிறான் பானையும் கையுமாக! அவன் அமைத்த சுண்ணாம் குழைத்த சாந்து, சுட்ட செங்கல் சேர்ந்த உருவான மாளிகையில் மிட்டாதாரன் வாழ, அந்த மிட்டா வளம் பெற, மிராசு செழிக்க, அல்லும் பகலும் உழைத்திளைத்து உருக்குலைந்த உழைப்பாளி கட்டிக் கழ விட்ட தாழ் குடிலில் சலித்துக்கிடக்கிறான்! பளிங்கு முற்றத்தில், பால் நிலவின் ஒளியினூடே தேன் மணக்கும் தென்றலில், பாவையர் புடைசூழப் போகபூமிக்குச் செல்லுகிறான் பணம் படைத்தவன்! அதே நேரத்தில், வானமே கூரை வரப்பே தலையணை, வாய்க்காலே பஞ்சுமெத்தை என்ற வறுமைப் பாட்டில் நெளிகிறான் பாட்டாளி! மகிழ்ச்சி மண்டிக்கிடக்கிறது உல்லாச புரியில ஆனால் உழைப்போர் உலகில் ....? உவகைக்கு அங்கு இடமில்லை இன்பத்தின் எதிராளியாகத் துன்பகதின்தோழனாக இருந்ததான் பழக்கமே தவிர அவனுக்கு வாழ்க்கையின் வானம்பாடியாக மாற வாய்ப்பில்லை என்பது மட்டுமல்ல, வகையில்லை! வழியுமில்லை அவன் வாழ்வே துயர அத்தியாயங்களைக் கொண்ட ஓர் தொடர்கதை! சாவின் அரவணைப்பில்தான் அவனுக்குச் சாந்தி! ஏன் இந்த நிலை? இப்படிப் பட்ட வாழ்வு தாழ்வு பேதம் மங்காதிருக்கின்ற நேரத்திலே மகிழ்ச்சி பொங்குமா அனைவரிடத்தும் ஒன்று போல? மனிதப் பகுதியில் ஏன் இந்த இருமுனைகள்? உற்பத்திக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற உடல்வலி, உடல்நலம் பண ஊதியம் - இவ்வசதிகள் ஒருவனுக்கு மறுக்கப்பட்டால் உற்பத்தி பெருகுமா? தேவைக்கேற்ற வசதி, சக்தி

---

★ பரிசுபெற்ற கடிதம்; நாவரசன், கரூர். ரூ. 5/— அனுப்பப்பெறும் பரிசுத் தொகை அனுப்ப முழு முகவரியை உரியவர் தெரிவிக்கவும

சேற்ற உழைப்பு எனும் நியதி உளுத்துப்போன வார்த்தையாக இங்கே ஆனபின்னர் உற்பத்தி பெருகுமா? உணர்ந்து பார்க்க வேண்டாமா அரசோச்ச வந்த ஆளும் வர்க்கமே வண்டமிழ் நாடே! வளமார் திராவிடமே! உன் இழந்த வாழ்வை எப்போது பெறுவாய்?

—நாவரசன்.

○●○

பம்பாய்
2-6-50

நான் பொன்னி நல்லாளைக் கடந்த இரண்டு ஆண்டுகாலமாகக் கண்ணுற்று வருகிறேன் அவள் அரிய சேவையை என்னென்று சொல்வேன்! தமிழ் நாட்டின்கண் பல பத்திரிக்கைகள் வெளிவருகின்றன. அவைகளில் அம்மாமிக் கதைகளும், பத்துப் பக்கங்களில் வாரபலன்களும், பத்துப் பக்கங்களில் விளம்பரங்களும், இன்னும் மீதம் உள்ள பகுதிகளில் தமிழுக்காகத் தொண்டு செய்கிறோம் என்று இந்திப் பாடங்களும், இலக்கியத் தொண்டாற்றுகிறோம் என்று [illegible] புராணங்களும், தமிழர் [illegible] ட்டைப் படம் பிடிக்கக் காட்டுகிறோம் என்று கிருஷ்ண லீலைகளை [illegible] யும் வெளியிடும் அம்மாமிப் பத்திரிக்கைகள் உலவும் தமிழகத்தில், அவைகளுக்குப் [illegible] பட்ட முறையில் இலக்கியப் பூ[illegible] வில் பூக்கக் கூடும் புது[illegible] வும்- ணமூட்டைகளுக்கு ஒ[illegible] படி கொடுத்தும் ஜாதித்திமிர் கொண்டோருக்கு சவுக்கடி கொடுத்தும் [illegible] திறகு அறிவுரை கூறியும், இன் தமிழுக்கு இனிய தொண்டாற்றியும், போலிக்கவிகள் உலவும் தமிழகத்தில் ஒரு புரட்சிக்கவி இருப்பது போல், தமிழகத்திலும் ஒரு பெர்னட்ஷா இருப்பதுபோல், தமிழர் பெரும்படைக்கு ஒருபோர் முரசாக விளங்கிவருகிறாள் என்றால் அவளின் அரிய சேவையை என்னவென்று சொல்வது! இந்தியை எதிர்த்துத் தமிழர் பெரும்படை திரண்டதைக் கேலியும் கிண்டலும் செய்த அம்மாமிப் பத்திரிக்கைகள் இன்று இந்தி ஏகாதிபத்தியம் என்று தலையங்கம் தீட்டுகின்றன என்றால் அது பொன்னி நல்லாளின் அரிய சேவை என்றே சொல்லவேண்டும், பாரதியார் பாடினார் 'இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே' என்று ஆனால், பொன்னி அத்துடன் தினைமாவும் சேர்த்துக் குழைத்து தருகிறாள், தமிழ்ப்பெரு மக்களுக்கு ஆனால், அவள் மாதம் இருமுறைதான் வருகை தருகிறாள், என்பதை எண்ணி வருந்துகிறோம். இவ்வளவு குறைந்த விலையில் அதிக பக்கங்களுடன், அழகிய அட்டைப் படங்களுடன் வெளிவரும் பொன்னி நல்லாள், ஒவ்வொரு கிழமையும் வெளிவந்து, தமிழ் மக்களை மகிழ்விக்க வேண்டுகிறேன்

K R. நாதன்.

○●○

சிங்கப்பூர்
12-6-50

## ஒப்பற்ற ஓவியர்கள்!

"பொன்னி" நல்லாளைப் பொன்மேனியாக்கி வரும் புத்தலகச் சிற்பிகள் பலர் உளர். அவர்களில் தோழர்கள் இருவர் போற்றத்தக்க புனிதத் தொண்டுகளால் "பொன்னி" எனும் பூங்கோதையைக் கண்டு போற்றாதவர்கள் யாருமிலர். கண்டவுடன் காதல் கொள்ளும் கட்டழகியாகவும், கைத்திறனால் "பொன்னி" எனும் நான்கே ஆண்டுகளை நிறைந்த நங்கையை நாடெல்லாம் நாட்டியமாடும் நன்மதிப்பிற்கிடமாக்கியுள்ளவர்கள் தோழர்கள் எம். அழகப்பன், ப. கண்ணன் அவர்கள் ஆவார்கள். நம் நாட்டினர்கள் சிலர், "சிலப்பதிகாரம்" எனும் புத்தகத்தைப் படித்திருப்பார்கள். 'அதனுள் அடங்கியிருக்கும் தித்திக்கும் செந்தமிழைப்பருகி இருப்பார்கள்.' ஆனால், பொன்னி எனும்

பொற்கொடி மூலம் நாம் கண்ட சிலப்பதிகாரம், நெஞ்சையும் நினைவையும் மட்டுமின்றி நினைவிலிருந்து நீங்கா வண்ணம், நம் உள்ளத்தையே அள்ளும் அளவுக்குத் தோழர் எம். அழகப்பன் அவர்களின் கைத்திறன் ஓவியமாக மாறிப் பொன்னியைக் காணும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தோழர் எம். அழகப்பனின் உருவமும், தோன்றாமல் இருக்க முடியாது. அதே போன்று தோழர் ப. கண்ணன் அவர்களும், இவர்களே ஒப்பற்ற ஓவியர்கள்.

—வே. கோவிந்தசாமி.

○●○

நீலகிரி, பாலகோலா,
5-6-50

## அழிக்கப்படும் காடு

வெய்யிற் காலங்களிலே கூட மழை பொழியும் நீலகிரியில் பருவ மழை தவறிவிட்டது: மழை பெய்ய வேண்டிய காலத்தில் வெய்யில் வெளியிலிறங்க வொட்டாதபடி காய்ச்சுவதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. காடுகளும், மரங்களும், வனங்களும் சூழ்ந்து நின்ற நீலகிரியின் பெரும்பாகம் இப்போது வெறும் மொட்டை மேடாகக் காட்சியளிக்கிறது! காரணம் மரங்கள் வெட்டப்பட்டுக் காடுகள் அழிக்கப்பட்டு விட்டமையே ஆகும். நீலகிரியில் வசிப்போரில் பெரும்பாலோர் பிழைக்க வழியின்றிப் பிறந்த ஊரைக்கூட விட்டுவிட்டு இங்கு வந்து குடியேறியவர்களேயாவர். இவர்கள் தேயிலைத் தோட்டங்களிலும் காப்பித்தோட்டங்களிலும், படுகர்களின் கிழங்குத் தோட்டங்களிலும் வேலை செய்து அரை வயிற்றுக் கஞ்சிக்குக் கூடத் திண்டாடும் பஞ்சையர்கள்! இவர்களின் நிலை கடந்த ஒன்றரைமாதமாக மிக மிகப்பரிதாபகரமாக இருக்கிறது. காரணம் மழை இல்லாமையால் தேயிலைச் செடிகள் காய்ந்து கொழுந்து இலைகள் கருகிப்போய்விட்டன. ஆகையால் வாரத்திற்கு ஆறு நாட்கள் வேலைக்குப் பதிலாக மூன்று நாட்கள் தவிர்த்த மீத மூன்றுநாட்கள் வேலையில்லை யென்று "இல்லை"ச் சிந்து பாடினார்கள் முதலாளிகள்! தொழிலாளர்கள் கண்ணீர் வடித்தார்கள்! படுகர்களின் கீழ் வேலை செய்பவர்களின் நிலையோ இதைவிடப் பரிதாபகரம். மழை பெய்யாமையால் ஆயிரக்கணக்கில் பணத்தைச் செலவுசெய்து கிழங்கு போட்ட படுகர்களும் ஏனையோர்களும் தங்கள் கீழுள்ளவர்களை ஆதரிக்கவோ கடன் கொடுத்து உதவவோ இல்லை உதவினால் பிற்பாடு அவை கிடைக்குமா என்ற ஐயப்பாடு ஏற்பட்டதனாலேயே ஆகும். இப்படிக் காடுகள் அழிக்கும் திருக்காரியம் நீலகிரியில் மாத்திரமல்லாமல் சென்னைமாகாணத்தின் பலபாகங்களிலும் நடைபெற்றிருப்பதால் சர்க்கார் கடுமையான உணவுப் பஞ்சத்துக்குத் தங்களைத் தாங்களே ஆளாக்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்றே சொல்லவேண்டும். காட்டை அழித்துப் பருவமழைக்குத் தடைக்கல் போட்டுவிட்டு, மழைபெய்ய மந்திரஞ் செபியுங்கள் —மகேச்வரனைக் கும்பிடுங்கள் என்று கூறும் சர்க்காரின் கேவலமான போக்கை நாம் என்னென்பது? காடுகள் நாட்டின் செழிப்புக்கு இயற்கையால் நல்கப்பட்ட பெருஞ் செல்வங்களாகும். வனங்களும் காடுகளும் மரங்களுமே பருவமழை பெய்யவும் தட்பவெப்ப நிலையைக் கட்டுப்படுத்தவும் முக்கியகாரணமாக இருக்கின்றன. ஆகவே காடுகளை மேலும் மேலும் விருத்தி செய்யத்தான் கையாலாகாத காங்கிரஸ் சர்க்காரால் இயலவில்லை யென்றால் உள்ள காடுகளையாவது அழிக்கும் திருப்பணியைத் தடுப்பதற்குரிய ஏற்பாட்டையாவது உடனடியாகச் செய்வார்களா?

—"நாகன்"

# சச்சிதானந்தம்

இல. அரிராமன்



வறுமையால் எற்றுண்டு வாழ்கிறதுக்கும் சாகிறதுக்கும் இடையில் [illegible] ஊசலாடிக் கொண்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான பரிதாப ஜீவன்களில் சச்சிதானந்த சிவகுருநாதம் பிள்ளையும் ஒருவர். வழுக்கைத் தலை — நூல்கயிற்றின் உதவியால் காதைக் கவ்விக் கொண்டிருக்கும் மூக்குக் கண்ணாடி — கூன் விழுந்த முதுகு — வண்ணானிடம் சென்று அடித்தல் — துவைத்தல் முதலிய சித்திரவதைகட்குட்படாமல் அநேக வருடங்களாய் அழுக்கேறியிருக்கும் கோட் — கிழிந்துவிட ஆலோசித்துக் கொண்டிருக்கும் வேட்டி — இப்படியான விசேஷ அம்சங்களுடன் காட்சியளிக்கும் சச்சிதானந்த சிவகுருநாதம் பிள்ளையை அந்த ஊரார் மட்டும் வாத்தி சச்சி என்றுதான் அழைப்பார்கள்.

அவர் அந்த ஊர்த் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக வேலைபார்த்து வருகிறார். ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக ஆசிரியர் வேலை பார்த்து அவர் கண்ட பலன், ஊரைச் சுற்றிக் கடனும் ஓயாத அலுப்புந்தான்.

பெயர்தான் சச்சிதானந்த சிவகுருநாதம் பிள்ளை என்று முழநீளம் நீண்டிருக்கிறதே தவிர, அவர் வாழ்க்கையில் சுகமும் வசதியும் மிகமிகக் குறுகல்தான்.

அவர் வாழ்க்கையின் வளமைகள் வற்றி வரண்டு போயிருப்பதைப் போல்தான் அவர் உடலும், வாடி வதங்கி ஒடிந்து விழுவதைப் போலிருக்கும். ஒற்றைநாடிச் சரீரம் அதில் ஓடிக்கொண்டிருக்கும் காலம் குத்தியிருக்கும் முதுமை முத்திரைகளும் தெளிவாகத் தெரிந்தன.

கடவுள், தங்கள் கருணை மிக்க வரங்களை, மனிதர்கள் மேல் வாரிச் சொரிய மறுத்துவிட்டுக் கற்சிலைகளிலே அடைபட்டுக் கிடக்கும் இந்தக் கலிகாலத்திலே கடன்படாமல் வாழ்க்கை நடத்துவதை விடப் பெரிய பாக்கியம் இருக்க முடியாது; அந்தப் பாக்கியங்கூடக் கிடைக்கவில்லை அவருக்கு.

“வாழ்க்கை வாழ்வதற்கே” என்று வாய்கோணாமல் பாடு

கிருர்கள். ஆனல், வாழ்ந்து பார்த்தால்தான தெரியும, அதிலுள்ள கஷ்ட நஷ்டம்.

ஃ ஃ ஃ

அன்று......

காலைச் சிற்றுண்டியை முடித்துவிட்டு "ஹேவ்" என்ற நீண்ட ஏப்பத்துடன் திண்ணையில் வந்துட்கார்ந்தார் சச்சிதானந்த சிவகுருநாதம் பிள்ளை.

பூத உடலை விட்டு விட்டு, அவர் மனம் வெளியில் பறக்க ஆரம்பித்து விட்டது,

"மளிகைக் கடை மாணிக்கஞ் செட்டிக்குப் பழைய பாக்கி ஒன்பது ரூபாய் கொடுக்க வேணடும். இதோ தருகிறேன், அதோ தருகிறேன் என்று சாக்குச்சொல்லி ஆறு மாதங்களை ஓட்டியாகி விட்டது. என்றைக்குமில்லாமல் மாணிக்கஞ் செட்டி கூட நேற்று, கொஞ்சம் வார்த்தை தடிப்பாகவும் கேட்டுவிட்டான். பழைய பாக்கி ஒன்பது ரூபாயை எப்படிக் கொடுப்பது? சம்பளம் போடவோ இன்னும் பத்து நாளைக்கு மேல் இருக்கிறது."

எங்கெங்கோ பறந்து திரிந்து விட்டுக் கடைசியாக அவர் மனம், இந்தக் கடன் விஷயத்தில் வந்து நின்றது.

இனியும் அவனுக்குச் சாக்குச் சொல்ல முடியாது' நினைக்கும போது அவர் மனம் இடுக்குற்றது.

பொடியில்லாத மட்டையில் தன் கை விரலைத் தேய்த்து ஒரு இழுப்பு இழுத்துக் கொண்டார்.

"நாழிகையாகி விட்டது... பள்ளிக்கூடத்திற்குப் போக வேணடும"

திண்ணையின் வெளிக் கூரையில் சொருகியிருந்த பிரம்பை எடுத்துக்கொண்டு திண்ணைப் பள்ளிக்கூடத்தை நோக்கி நடந்தார் சச்சிதானந்த சிவகுருநாதம் பிள்ளை. அப்பொழுதும அவர் மனம், மளிகைக் கடை மாணிக்கஞ் செட்டிக்குக் கொடுக்க வேண்டிய கடன விஷயத்திலேயே ஒன்றியிருந்தது.

பள்ளிக்கூடத்தில்———

ஆசிரியரைக் கண்டதும் பையன்கள் தங்கள் குறும்புத்தனங்களையெல்லாம் தற்காலிகமாக நிறுத்திக்கொண்டனர்.

கையிலிருந்த பிரம்பை மேஜைமேல் போட்டுவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தார். மளிகைக்கடை மாணிக்கஞ் செட்டிக்கு, பணம் கொடுக்க வேண்டிய மகத்தான பிரச்னையில் ஈடுபட்டிருக்கும் போது, அவரால் பாடம் நடத்த முடியுமா? கண்களை மூடியபடியே நட்டுவைத்த கல்லைப்போல் ஆடாமல் அசையாமல உட்கார்ந்திருந்தார் திருவாளர் சச்சிதானந்த சிவகுருநாதம் பிள்ளை.

பாடமும் சொல்லிக் கொடுக்காமல் கண்களையும் மூடிக்கொணடு ஆசிரியர் உட்கார்ந்திருக்கும்பொழுது, பையன்களால்தான் சும்மாயிருக்க முடியுமா? தங்கள் குறும்புத்தனங்



பெரியவர்: (ரிக்ஷாக்காரனைப் பார்த்து) ஏய் ரிக்ஷா! வருகிறாயா?

ரிக்ஷாக்காரன்: எங்கே போகணும் சாமி?

பெரியவர்: புறப்படும்போதே அபசகுனம் மாதிரி எங்கே போகணும் என்று கேட்டு விட்டாய். இனி, நான் போகிற காரியம் உருப்பட்டால் போலத்தான்.

— எஸ். ஆர். துரைராஜ்

---

களை ரகசியமான முறையில் தொடர்ந்தனர்.

சிறிது நேரம் சென்றது——

'சார்......இத்தனை நேரங் கழிச்சி இப்பத்தான வெங்கடாசலம் வந்திருக்கான சார்——'' என்று குரலை உயர்த்திக் கத்தினான் ஒரு பையன.

மற்ற மாணவன் மீது குற்றப் பத்திரிகை வாசிப்பது தான் பள்ளி மாணவர்களின் பண்பாடாயிற்றே!

கண்ணைத் திறந்து பார்த்தார் சச்சி.

சிறிது நேரங் கழித்து, அப்பொழுதுதான பள்ளிக்கு வந்திருந்த ஒரு சிறுவன், பயமும கலவரமும் கவிந்த முகத்துடன நின்று கொண்டிருந்தான.

''ஏண்டா——மண்டு—— இத்தனை நேரம என்னடா செஞ்சே——'' என்றபடியே எழுந்து சென்று அச்சிறுவனின காதைப பிடித்துத திருகினார் சச்சி. அடுத்த கணம் அவர் திடுக்கிட்டார்.

காதைப் பிடித்து திருகினதில் சிறுவனின காதிலிருந்த கடுக்கன் அவர் கையோடு வந்து விட்டது.

கையோடு வந்து விட்ட கடுக்கனை அவர் வெளியில் காட்டவும் இல்லை அப்படியே திரும்பவும் நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டார். அந்தக் கணத்திலிருந்து அவர் நெஞ்சில ஒரு பெரிய சுமை குடியேறியது.

''கடுக்கனைத் திரும்பவும கொடுத்து விடலாமா? வேண்டாமா?'

''தற்சமயம் தங்கம் விற்கும் விலைக்கு இதை விற்றால் குறைந்தது பதினைந்து ரூபாயாவது கிடைக்கும். மளிகைக் கடை மாணிக்கஞ் செட்டிக்குக் கொடுக்க வேண்டிய கடனைக் கொடுத்து விடலாமே''

''சீ......சீ......இது திருட்டுத் தனமாயிற்றே........''

''எது திருட்டு? இல்லாத ஒருவன எவ்விதத்திலாவது தன தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்குப் பெயர் திருட்டா? சந்தர்ப்பம் நமக்குச் சாதகமாயிருக்கும்போது நாம் ஏன் சஞ்சலப்பட வேண்டும்?'

மாறுபட்ட எண்ணப் போராட்டத்தினால் தத்தளித்துக் கொண்டிருந்தது அவர் மனம்.

''டிங்——டாங்——டிங்——டாங——'' என்ற மணியோசை.

பள்ளிக்கூடம் முடிந்து பையன்கள் எல்லோரும் தத்தம வீட்டை நோக்கி விரைந்தோடிககொண்டிருந்தனர்.

எல்லோரும் சென்று விட்டனர். ஒருவர்கூட அங்கில்லை.

சுற்றும் முற்றும் பார்த்தார் சச்சி. தன்னைத் தவிர எவருமிலலை யென்பதை உணர்ந்தார்.

மூடியிருந்த அவர் கை திறந்தது—அந்தக் கடுக்கனை—கையை உற்றுப் பார்த்தார். அந்தப் பார்வையில் அதை என்ன செய்வதென்று புரியாத குழப்பம் நிறைந்திருந்தது—

அந்தப் பையன்...வெங்கடாசலம் வீட்டிற்குப போகிறான்—பளளியிலிருந்து வந்த தன் மகனின் காதில் கடுக்கனைக் காணாத தாய் திடுக்கிடுகிறாள்—

''ஏண்டா——ஒரு காதிலே கடுக்கனைக் காணலியே—எங்கேடா?'' என்று திடுக்கிட்ட தாய் பதற்றத்துடன் கேட்கிறாள்.

தன் காதைத் தொட்டுப் பார்த்தபடியே ஒன்றும் புரியாமல் திரு திருவென்று விழிக்கிறான அச்சிறுவன்.



ஆசிரியை: (வகுப்பிற்கு வந்த புது மாணவியை நோக்கி என்னடி மக்கு! உனக்கு ஒன்றும் தெரியவில்லையே! உன் பெயர் என்னடி?

மாணவி: (அழுது கொண்டே என் பெயர் சரஸ்வதி.

— ச. தி. சமதர்மன

---

''ஏண்டா——ஓடியாடி விளையாடும் போது எங்கேயாவது விழுந்துட்டுதா...?...என்னடா—? நான் கேக்குறேன—ஒண்ணுமே சொல்லாமே மக்கு மாதிரி நிக்கிறியேடா—காது கூடச் செவந்திருக்கு—சொல்லுடா......'' என்று கேட்கிறாள் தாய்.

''இல்லேம்மா——வந்து——வந்து......நேரங்கழிச்சிப் பள்ளிக்கூடத்துக்கு போனேன்னு வாத்தியார் காதைத் திருகி அடிச்சாரு——என்றபடியே தாயின் ச[illegible]கையை எதிர்பார்த்து தேம்பியழுகிறான் சிறுவன.

'காதைத் திருகினபோது கடுக்கன் கீழே விழுந்துட்டுதா ......? இல்லாட்டி வாத்திப பய தான் எடுத்துக்கிட்டானோ?'' என்றபடியே அவன் முதுகில் தழும்பேற அடித்து விட்டு 'தெறமை கெட்ட மூதேவி... எனக்குன்னு வந்து பொறந்தியே ..'' என்று வசவை அள்ளிக் கொட்டுகிறாள் தாய்.

---



படமுதலாளி: என்ன டைரக்டர் சார், இவள் பிரபல நாடக நடிகை. எனக்கு வேண்டியவள். நம் படத்திலே நடிக்க வைக்கலாமா?

டைரக்டர்: பாடத் தெரியுமா?

படமுதலாளி: பாடத்தெரியா விட்டால் என்ன? இரவல் குரல் கொடுக்கலாமே!

டைரக்டர்: குரல் இரவல் கொடுக்கலாம். ஆனால் முகம் யார் இரவல் கொடுப்பது?

- ஏ ஜே. ராஜேந்திரன்

கற்பனையைக் கலைத்துவிட்டு எழுந்தார் சச்சி. நெற்றியில் அரும்பியிருந்த வியர்வையை வழித்தெறிந்து விட்டுப புறப் பட்டார்.

எங்கெங்கோ சந்து பொந்து களின வழியாகச் சுற்றி யலைந்து விட்டு அப்பையன் வீட்டின் முன் வந்து நின்றான்.

உள்ளே செல்வதற்கு வாயிற்படியில் காலடி எடுத்து வைத்தார். கடுக்கனை ஒப்ப டைக்க வேண்டி, அப் பைய னின் தாயாரைக் கூப்பிட எண்ணினார்—ஆனால் அடுத்த கணம், என்ன எண்ணினாரோ என்னவோ சட்டென்று திருப்பி வந்த வழியே நடக்க லானார் அவர்.

ஃ ஃ ஃ

இப்பொழுதெல்லாம், மளி கைக் கடை மாணிக்கஞ் செட்டி, வாத்தியார் சச்சி யைப் பார்த்த பிறகும், கடன பாக்கியைக் கேட்காமல் போவ தைப் பார்த்தால், மாணிக் கஞ் செட்டியாருக்குக் கொடுக்க வேண்டிய கடனைச் சச்சிதானந்தம் கொடுத்து விட்டார் என்றே தெரிகிறது. எப்படிக் கொடுத்திருப்பார்?

கடுக்கனை விற்றுத்தான். இதில் ஐயத்திற்கிடமேது—?

புன்மைத்தனம் மலிந்து விட்ட இன்றைய சமூகத்தில் எவனுமே நாணயமாக வாழ முடியாது என்பதைப் பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவர் தெரிந்துகொண்டார்.



# பார் பார்! பட்டணம் பார்!

"மெரீனா" எழுதுகிறது

"என்னையா அக்கிரமமாக இருக்கிறது! இவ்வளவு பெரிய திருவல்லிக்கேணியிலே ஒரு இடம் கிடையாது இதை எங்கே போய்ச் சொல்லி அழுவது? வயிற்றைப்பற்றி எரிகிறதே!" என்று ஆவேசமும் ஆத்திரமும் கலந்த சப்தத்தைக் கேட்டு அப்பக்கம் காதைத் திருப்பினேன். குடியிருக்க வீடு கிடைக்காமல் திண்டாடுகின்ற பேர்வழியாகவோ அல்லது காலேஜிலோ பள்ளிக்கூடத்திலோ இடம் கிடைக்காத பேர்வழியாகவோ இருக்கக்கூடுமென்று நினைத்தேன்.

ஆவேசத்தோடு பேசியவருக்குப் பக்கத்தில் நாலைந்து பேர் கூடியிருந்தார்கள். ஒவ்வொருவர் முகமுமா கவலையும ஆத்திரமும் தேங்கிய முகமாகவே இருந்தது.

"அப்படியானல் இடமே கிடைக்காதா?"

"எங்கே இருக்கிறது இடம்? இருந்தாலும் யார் தருகிருர்கள்?"

"எல்லோரிடமும் கேட்டுப் பார்த்துவிட்டீர்களா?"

"எல்லோரிடமும் என்ருல், யாரிடம் கேட்பது? தெருவிலே போகின்றவர் வருகின்றவரிடமெல்லாம் கேட்டுக்கொண்டிருப்பதா?"

"திருவல்லிக்கேணியிலே எத்தனை பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன? அவற்றிலே ஏதாவது ஒன்றில்......"

"எல்லாப் பள்ளிக்கூடத்தையும் கேட்டுவிட்டேன். காரியம் நடக்கவில்லை. ஏதேதோ சால்சாப்புச் சொல்லுகிருர்கள்"

"என்னதான் சொல்லுகிருர்கள்?"

"பள்ளிக்கூடத்திலே அரசியல் விஷயங்கள் பேசக்கூடா

தாம். இப்படி ஒரு காரணம். மற்றொன்று வகுப்புவாதக விஷயங்கள் பேசக்கூடாது. அதனால் இடமில்லை......"

"அரசியல் விஷயம் என்றால் என்ன? மந்திரிமார்கள் பள்ளிக்கூடம் பள்ளிக்கூடமாக நம்மையும் கம்யூனிஸ்டுகளையும் திட்டிக்கொண்டு வருகிறார்களே அது தவிர மிச்சமெல்லாம் அரசியலா?"

"வகுப்புவாதம், வகுப்புவாதம் என்று பூச்சாண்டி காட்டுகிறார்களே! யாரையா வகுப்புவாதி? "பிறமணர் காபி கிளப்" வைத்திருக்கிறானே அவன் வகுப்புவாதியா நாம் வகுப்புவாதியா?" என்று கோபாவேசம் ததும்ப மற்றொருவர் கேட்டார்.

"அதெல்லாம் போகட்டும். நமக்கு வேண்டியவர்கள் யாருமேயில்லையா, அவர்களிடம் விஷயத்தை விளக்கமாகச் சொல்லிக்கேட்கக்கூடாதா?"

"எல்லாம் சொன்னேன். 'தியாகராயச் செட்டியார்' விழா அவசியம் கொண்டாட வேண்டியதுதான். அவர் மிக மிக நல்லவர். ஏழைபாழைகட்கு எவ்வளவோ உதவினார். அழிந்துகொண்டிருந்த நமது சமுதாயத்திற்குக் கைகொடுத்துத் தூக்கிவிட முனைந்தார். ஆனால் எல்லாம் தெரிந்தும் என்னால் உதவ இயலவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தார் அதை நடத்துகிறார்கள். அவர்கட்கு நான் இடங்கொடுத்தேன் என்று தானே ஆகும். அதனால் எனக்குக் கெடுதல் நேருமே என்றுதான் பயப்படுகிறேன். இப்பொழுதெல்லாம் நியாய அநியாயம் பார்த்தா அரசாங்கம் நடத்துகிறார்கள்! என்னவோ தடியெடுத்தவன் தண்டக்காரன் என்பதுபோல நடக்கிறது. அடக்குமுறை அவ்வளவு கடுமை. விசாரணை, எக்ஸ்பிளனேஷன் கேட்டல் என்றுகூட இல்லை. தி. மு. க. காரனுடன் சிநேகமா, உடனே டிஸ்மிஸ்! எம். எல். ஏ. யின் சிபார்சு லெட்டரைப் புறக்கணித்தாயா உடனே சஸ்பெண்ட். இந்த நிலைமையில் நான் உங்கட்கு என்ன செய்ய முடியும்?" என்றார் எனக்கு வேண்டியவர்.'

"அட அநியாயமே. ஒரு காலத்தில் இந்த நாட்டையே ஆண்டவன். அறிஞன். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன். அவனுக்கு விழாக் கொண்டாடுவதற்கே இந்தப் பாடாக இருக்கிறதே!"

"ஏன் பீச்சில் கொண்டாடினால் என்ன?" என்றால் இது வரை பேச்சில் கலந்து கொள்ளாதிருந்த மற்றொருவர்.

"அடடா, என்ன அழகான யோசனை பூத்திருக்கிறது உன் இதய கமலத்திலிருந்து! அது கதாதிபதிகட்கு மட்டும் தானே. மற்றவர்கள் இங்கே கூட்டம் போடக்கூடாதே. மதராசிற்கு வந்து இவ்வளவு நாளாகியும் இது தெரியாதா? கூட்டம் நடத்துவதற்குப்

போலீஸ் அனுமதி வேண்டும். பீச்சில கூட்டம போடுகிறேன என்றால் சட்டென்று பீச்சில் கூட்டம போட்டால் இந்தியப் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் பங்கம விளையுமென்று கூறி மறுத்து விடுவார் போலீஸ் அதிகாரி"

'அப்படியானால் இங்கு கூடி யிருக்கிறோமே இதெல்லாம் கூட்டமில்லையா?"

"இதற்கும கூடத் தடை போட்டாலும் போடுவார்களாம"

"ஏன், வந்தது வரட்டுமென்று கவர்னமெணட் ஹாலையே கேட்டுப பார்ககிறது தானே. என்ன தான சொல்லுகிறார்கள் என்று பார்பபோமே?"

'பார்க்கலாம். அங்கேமடாதிபதிகள், சதுராதிபதிகள் ஆல்லது ராட்டையாதிபதிகள மீறிப்போனால் டான்ஸ் அதாவது சதுராடுகிறவர்கள், பஜனை பண்ணுகிறவாகளா இவர்கட்குத் தானே இடம் உண்டு. நமசகெல்லாம் தருவார்களோ? வீண முயறசி"

"இபபடியே சொல்லிக் கொணடிருந்தால் அதற்கு முடிவுதான என்ன? யாராருடைய படத்தையோ திறந்து வைப்பதற்குப், யாராரோ சம்பந்த மில்லாதவர்களைப் பாராட்டுவதற்கும் கிடைக்கின்ற இடம இந்த நாட்டையே ஆண்ட அம்மனிதருக்கா கிடைக்காமற் போய்விடும்? அவனுக்குப் பிறகு தானே இவர்கள் அந்தப பக்கம் தலை காட்டுகிறார்கள்?"

"பார்ப்போம் பார்ப்போம்; நம்பிக்கையில்லை. இருந்தாலும் முயற்சியைக் கைவிடுவானேன்! இருந்தாலும் எதிர்க்கட்சிக் காரர்கட்கு இவ்வளவு இடுக்கண் செய்தல் கூடாது' என்று தீனக் குரலோடு பேச்சை முடித்தார் ஆவேசத்தோடு துவக்கியவர்.

## மறுமணம்

புதுக்கோட்டைத் தோழர் எஸ். அப்பாவு—தனமேரி மறுமணம் 30-5-50 அன்று ரெவரெண்ட் கான்சால்வ்ஸ் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

## நன்றி

காட்டுமன்னார் கோவிலில் நடந்த தங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்திற்கு வந்து சிறப்பித்த தோழர்களுக்கும், பரிசுகள், வாழ்த்துகள் வழங்கிய நண்பர்களுக்கும் தங்கள் அன்பு கலந்த நன்றியைச் செயங்கொண்டம் மணமக்கள் K. S. காசிப்–செயினப்பீவி தெரிவித்துக் கொள்கிறார்கள்.

# வளரும் இலக்கியம்

## மக்கட்பேறு

குடும்ப விளக்கு என்ற தலைப்பில், இல்லறம், விருந்தோம்பல், திருமணம் என மூன்று புத்தகங்களை முன்னர் எழுதித் தமிழ் உலகுக்கீந்த கவியரசர் பாரதிதாசனார் நான்காம் புத்தகமாக 'மக்கட் பேறு' என்ற பகுதியை வெளியிட்டிருக்கிறார். இந் நூலில் பிள்ளைப் பேற்றையும் அது பேணும் முறையையும் நன்கு விளக்குகிறார். இப் பகுதியில் ஓடிவா அப்பாக் குதிரை, சோறூட்டல், நிலா என்ற தலைப்பின்கீழ் உள்ள பாட்டுக்கள் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் வேடிக்கையாக அமைந்துள்ளன.

## முதியோர் காதல்

குடும்ப விளக்கின் ஐந்தாம் பகுதியாக 'முதியோர் காதல்' வெளிவருகிறது. இப் பகுதியில் தலைவனும் தலைவியும் முதுமையடைந்தபின் ஒருவரையொருவர் நெஞ்சாறக் கலந்து வாழும் முறையைப் பாரதிதாசனார் விளக்குகிறார். "அருகருகிருந்தார்; அன்புண்டு, செயலை இல்லை" என்ற முறையிலே முதியோர் காதல் விளங்குகிறது. இளமைக் காலத்து நிகழ்ச்சிகளுடன், முதுமைப் பருவ நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுக் காட்டும் முறையும், கவிஞர் கையாளும் புதிய உவமைகளும் இடையிடையே வரும் நகைச்சுவை நிகழ்ச்சிகளும், இப் பகுதியைச் சிறக்கச் செய்கின்றன. சிலேடைச் சித்திரங்கள் சிலவும் உள்ளன. மேற்கண்ட இரு புத்தகங்களின் விலை, முறையே 10 அணா, 6 அணா. பாரதிதாசன் பதிப்பகம், 95, பெருமாள் கோயில் தெரு, புதுச்சேரி.

## சிந்தனை வாதிகளின் சத்திய சாதனை

மனித இன வளர்ச்சி பற்றி டார்வின், ஹக்ஸ்லி, ஸ்பென்ஸர் கிளிபோர்ட் முதலிய அறிஞர்களின் கருத்துக்களையும், அவர்கள் தங்கள் கருத்துக்களை நிறுவ முயன்றபோது நிகழ்ந்த நிகழ்ச்சிக் குறிப்புக்கள் சிலவற்றையும் ஆசிரியர் எடுத்தெழுதியுள்ளார். கருத்துக்கள் உயர்ந்தவை. எனினும் அவர் கையாளும் மொழியின் நடை, இடையிடையே உடைபட்டிருக்கிறது. இக் குறை தவிர, புத்தகம் உயர்ந்த முறையில் அமைந்திருக்கிறதென்றே கூறவேண்டும். விலை 12 அணா. ஆசிரியர் டி. என். ராமச்சந்திரன், இமயப் பதிப்பகம், நாகப்பட்டினம்.

## மல்லிகை

வங்க நாடோடிப் பாட்டுக்களில் பொதிந்து கிடக்கும் மூன்று காதல் கதைகள்—மூன்றும் அருமையான கதைகள். இவற்றைத் தோழர் ப. கோதண்டராமன் தமிழாக்கித் தந்திருக்கிறார். உரைநடை செய்யுளின் பொழிப்புரைபோல

மிக அழகாக அமைந்துள்ளது. கதைகளில் இயற்கை வருணனையும், வங்க நாட்டுப்புறங்களில் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் நிகழ்ச்சிகளோடு கதைத் தலைவியின் நிலைமையை ஒப்பிட்டுக் காட்டும் வருணனைகளும் சிறந்து விளங்குகின்றன. மூன்று கதைகளிலும் சாதிக் கொடுமை அதிகாரக் கொடுமை பெற்றோர் தடை இவற்றையெல்லாம் மீறி எழுகிறது காதல்; என்றாலும், இக் கொடுமைகளினின்றும் தப்ப முடியாமல் தலைவியர் உயிரிழக்க நேரிடுகிறது. மூன்றும் கதைகளும் துன்பியலாக முடிகின்றன. கதைத் தலைவியரோ நம் இரக்கத்திற்குரியவராகின்றனர். மூன்று கதைகளும் சுவையாகவே இருக்கின்றன: விலை ரூ 1-8-0. ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி, சென்னை--5.

## ஒரே உரிமை

விந்தன் சிறுகதைகள் என்றாலே, அவை உயர்ந்தவை என்ற எண்ணந்தான் தோன்றுகிறது. சிறுகதை என்றால் என்ன; அதை எப்படி எழுதுவது என்று புரியாமல் கேட்பவர்களுக்குச் சிறுகதை இலக்கணம் என்ன என்று விளக்குவதைவிட 'விந்தன் கதைகளைப் படித்துப் பார்' என்று எளிதாகக் கூறிவிடலாம். எழுதும் கதைகளில் அவர் கையாளும் நடை மிக எளிதாக இருப்பது அவர் வெற்றிக்கு ஒரு காரணம். கருத்தில்லாத கதையொன்றை அவரிடம் காண்பது அரிது. இது இரண்டாவது காரணம். இத்தொகுப்பில் பதினைந்து கதைகள் இருக்கின்றன. சில கதைகளைப் படித்தவுடன் 'ஐயோ பாவம்' என்ற இரக்க உணர்ச்சி தோன்றுகிறது. சிலவற்றைப் படித்தால் தீமைகளைச் சுட்டெரிக்கத் தோன்றுகிறது. அவ்வளவு வல்லமையோடு அவர் சமுதாயத்தைச் சாடுகிறார், 'யாருக்குப் பிரதிநிதி?', என்ற கதை பதவிப் பித்தத்தால் வரும் மனக்கேட்டைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ,நடக்காத கதை, நடந்தால் மனித உலகம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிப் போய் விடும் என்ற தோற்றம் உண்டாகிறது. கடைசிக் கதையில் 'கிளி பேசுகிறது' விடுதலை கீதம் பாடிக்கொண்டு புத்தகத்தைப் படித்து முடிக்கும் போதும் நம் உள்ளத்தில் மெதுவாக ஓர் இன்ப ஓட்டம் தொடங்குகிறது. விலை ரூ 2—8—0. ஸ்டார் பிரசுரம் திருவல்லிக்கேணி, சென்னை. 5

## மணியடித்தது

மணியடித்தது என்றவுடன் எந்த மணி அடித்தது? பள்ளிக்கூட மணியா? பிளாட்பார மணியா? ஆராய்ச்சி மணியா? என்றெல்லாம் கதை படிப்பவர்கள் கேட்கலாம். அந்த மணியெல்லாம் இல்லை. டெலிபோன் மணிதான் அடித்தது. கதையின் இரண்டாவது அத்தியாயத்தில் $10\frac{1}{2}$ மணி ஆனவுடன் கடியாரம் ஒருமணி யடிக்கிறது. நவீனம் செய்த ஆறுவது குற்றம் மாணவர்களின் ஸ்ட்ரைக்கைப் பற்றிய இந்தக் கதை மாணவர்கள் செய்யும் குற்றத்தைத் தடுக்க அவர் எத்தனை

நற்றம் செய்தால்தான் என்ன மன்னித்து விடுவோம்!

சிறுவர்களுக்கேற்ற இந்தக் கதையை மிகமிக அழகாக வெளியிட்டிருக்கிறார் கலைப பிரசுரத் தோழர். அரு. வீரப்பன். விலை 4 அணா. கலைப பிரசுரம் காரைக்குடி விரிவு P. O. தேவகோட்டை

—வேந்தரசன்

### சவுக்கடி தர்பார்

கலைப்பிரசுரத்தாரின் மற்றொரு வெளியீடு இது. தோழர் நாராயணசாமி ஆச்சியப்பன் எழுதியுள்ள இக்கதை சுவை மிக்கது. எளிய நடையில் இயன்று, சிறுவர் சிறுமிகளுக்கேற்ற கதைப் போக்கைத் தன்னகத்தே கொண்டிருப்பதால் இந்நூல் நல்லதாகவும் பயனுடையதாகும். விலை அணா 6 கலைப்பிரசுரம் காரைக்குடிவிரிவு P. O. தேவகோட்டை

### ஈசாப் கதைப் பாடல்கள்

### காந்திமதி

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா ஈசாப கதைகளில் சிலவற்றைப் பாடல்களாக இயற்றியிருக்கிறார்; குழந்தைகள் விரும்பிப் படிக்கத்தக்கவை. காந்திமதி பத்மநாபன் எழுதியுள்ள சுவை நல்கும் கதை இரண்டும். தனித்தனி விலை அணா 2 குழந்தைப்பதிப்பகம் 1, ரட்லண்ட் கேட் காலனி, சென்னை 6,

### தமிழ் முரசு

இடையில் சிலகாலம் நின்றிருந்த 'தமிழ் முரசு' மாத இதழ் மீண்டும் இப்போது வெளிவருகிறது. 'தமிழ் முரசு' மற்றும் தமிழ்மணம் கமழ்வதில் வியப்பொன்றுமில்லை. டாக்டர் ... ம. பொ. சிவஞானம் கிராமணியாரின் ... கட்டுரைகள் தொடர்ந்து வருகின்றன. தனி இதழ் அணா 4 தமிழ் முரசுப பதிப்பகம், 1/29 இருசப்ப கிராமணித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 5.

### லோகோபகாரி

மிகப் பழைய பத்திரிகையான ''லோகோபகாரி'' மாதம் இருமுறையாக 4 அணா விலையில் புத்தக வடிவில் 1950 மே முதல் வெளிவருகிறது. மாறுதல்கள் வரவேற்கத் தக்கன. ஆசிரியர்: சாமிசிதம்பரனர். ''லோகோபகாரி'' 17-A கிடங்குத் தெரு சென்னை.

### தமிழ்த் தென்றல்

ஆண்டுமலர் 1950

'தமிழ்த் தென்றல்' ஆண்டு மலர் வ. சுப்பையா பிள்ளை மீனாட்சி சுந்தரனார், ம. பொ. சி, கி ஆ. பெ. விசுவநாதம் முதலிய பெரியார்களின் கட்டுரைகளுடன் மலர்ந்திருக்கிறது. கவிதைகள், சிறு கதைகள், முதலியனவும் இடம் பெற்றிருக்கின்றன, புகைப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ 1—4—0. 'தமிழ்த் தென்றல்' அலுவலகம், விருதுநகர்.

## வரப்பெற்றோம்.

### மறைந்த மாவீரன்

வேலாயுதம் வேலாயுததாசன் எழுதியது. விலை அணா இரண்டு. AR. சாமி, அறிவு நிலையம், ஜெயங்கொண்டம், திருச்சி மாவட்டம்.

### பம்பாய்த் தமிழ்ச் சங்க விசேஷ வெளியீடு

நகைச் சுவை மன்னர் கிருஷ்ணன்—மதுரம் பற்றிய கட்டுரைகள் அடங்கியுள்ளன.

PRINTED BY AR. PERIYANAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM
EAST MAIN STREET, PUDUKKOTTAI.
EDITOR & PUBLISHER: MURUGU SUBRAMANIAN

Regd. No. M. 4849 PONNI

# கண்ணைக் கவரும் புத்தகங்கள்

புத்தகக் கடைக்குச் சென்றால், கண்ணாடி அலமாரிகளில் அழகான புத்தகங்கள் கொலு வீற்றிருக்கக் காண்கிறோம்.

கண்ணைக் கவரும் வகையில் புத்தகம் அமைவது, அதன் விற்பனைக்கு இந்நாளில் மிக மிக அவசியமாகிறது.

புத்தகங்களை இணையற்ற முறையில் அச்சிட்டுத் தருவதில் செந்தமிழ்ப் பதிப்பகம் தலைசிறந்து நிற்கிறது.

உங்கள் புத்தகங்களை அச்சியற்ற வேண்டுமா?
எங்களை ஒரு வார்த்தை கேளுங்கள்.

த. பெ. 39
புதுக்கோட்டை

**செந்தமிழ்ப் பதிப்பகம்**

அச்சுவேலைகளுக்குச் சிறந்த இடம்

Wrapper Printed at the Rainbow Printers, Tiruchirappalli